உங்கள் தேவையறிந்து
எங்களின் சேவை

குமரர்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 11 52 Fax: 42 59 35 00

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 22 - 28 ஒகஸ்ட் 1996 முழக்கம் : 84

Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 58 35 10 / Fax: 42 59 35 00

குமரர்ஸ்
K.T.C. Jewels
193, Rue du Fg. S'.Denis. 75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

# விரைவில் யுத்த நிறுத்தம் அரசு கோருகிறது?

சிறீலங்கா அரசாங்கம், வடக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல்செய்யத் தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த யுத்த நிறுத்தத்திற்கு புலிகளை சம்மதிக்க வைக்கும் பொறுப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்க வேண்டும் என்று சிறீலங்கா அரசு கோரிக்கை விடுத்திருப்பதாக தெரியவருகிறது.

கடுமையான யுத்தம் நடைபெறும் வன்னிப் பகுதியிலும், புலிகளின் தொடர் தாக்குதலுக்குள்ளாகி வரும் குடாநாட்டுப் பகுதியிலும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தர மற்றும் சாதாரண பரீட்சைகளை நடத்துவதற்கு இந்த யுத்த நிறுத்தம் தேவைப்படுவதாக அரசு கூறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. புலிகள் தரப்பிலிருந்து இந்த யுத்த நிறுத்தம் தொடர்பாக அதிகாரபூர்வமான தகவல் எதுவும் வெளிவரவில்லை. இது பற்றி கருத்துத் தெரிவித்துள்ள மார்க்கோ வெடித் என்ற செஞ்சிலுவைச் சங்க அதிகாரி இரு தரப்பினரும் இணக்கம் தெரிவிப்பின் யுத்த நிறுத்தம் செப்டம்பர் மாதம் 2ம் திகதியிலிருந்து 22ம் திகதிவரை அமுல் செய்யப்படும் என்றும் இந்தக் கால இடைவெளியில் மேற்படி பரீட்சை நடத்தப்படும் என்றும் கூறியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரத்வத்தை மீது அநுரா வழக்கு

கடந்தவாரம் இரத்தினபுரியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிப் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், அநுரா பண்டாரநாயக்காவின் தாய்மாமனுமான அனுருத்த ரத்வத்தை, அநுரா பண்டாரநாயக்கா பிறக்கும்போது வைத்தியசாலையில் ஆள்மாறாட்டம் நடந்துவிட்டது. யாரோ பெற்ற குழந்தையை நாம் தூக்கிவந்துவிட்டோம். அந்த ஆள்மாறிவந்த குழந்தைதான் அநுரா பண்டாரநாயக்கா என்று பேசிவிட்டார்.

இந்த விவகாரம் கூட்டம் முடிந்தனையடுத்து அநுராவின் விசுவாசிகளால் அவருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு மிகவும் ஆத்திரம் அடைந்த அநுரா இரத்தினபுரி நகரத்தில் இருந்த பலரிடமும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதை உறுதிப்படுத்திக் கொண்டு தனது தாயாரான சிறீலங்கா பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் முறைப்பாடு செய்தார். அவரும்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# சந்திரிகாவை பதவி விலகுமாறு கொழும்பில் ஒரு இலட்சம் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

சிறீலங்காவில் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிஏற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த 20.08.96 திங்கட்கிழமை கொழும்பு நகரின் மத்தியிலுள்ள ஹைபார்க் பிரதேசத்தில் ஒரு இலட்சம் சிங்கள மக்கள் மாபெரும் கண்டணப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர். ஐ.தே. கட்சியால் நடத்தப்பட்ட இந்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு கடுமையான பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்டிருந்த அனைவரும் பொலிசாரின் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதற்கென பிற மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பொலிசார் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு ஹைபார் மைதானத்தில் மாபெரும் கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரனில் விக்கிரமசிங்கா, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா பிரேமதாஸா, அவரது மகன் உட்பட நூற்றுக் கணக்கான ஐ.தே.கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய ரனில் விக்கிரமசிங்கா விடுதலைப்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையையிட்டு அதிருப்தி

சிறீலங்கா அரசாங்கமும் அதனுடைய அனுசரணையுடன் இயங்கும் புளொட், ரெலோ போன்ற தமிழ்க் குழுக்களும் மிகமோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்ததையிட்டு சிறீலங்கா அரசாங்கமும் தமிழ்க் குழுக்களும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

சிறீலங்கா அரசாங்கத்தின் சார்பில் அதன் வெளியுறவு அமைச்சப் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை மிகவும் கடுமையான அளவுக்கு சாயம் பூசப்பட்ட மொழிப் பிரயோகங்களைக் கொண்டிருக்கின்றது. அதனையிட்டு நாம் விசனம் கொண்டிருக்கின்றோம் எனக் கூறியுள்ளார்.

புளொட் குழுத் தலைவர் சித்தார்த்தன் பி.பி.சி செய்தி முக

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## வன்னிக்கு 38 லொறிகளில் உணவு

சிறீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கி மேற்கொண்ட சத்ஜய இராணுவ நடவடிக்கைக்குப் பின் கடந்த 15.08.96 வியாழக்கிழமை வவுனியாவிலிருந்து 38 லொறிகளில் வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்ஜய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது வவு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## தமிழ்நாட்டுக்கு அகதிகள் செல்வது தொடர்கிறது


(இராமேஸ்வரம்)

சிறீலங்கா அரசின் சத்ஜய இராணுவ நடவடிக்கை மற்றும் உணவு விநியோகத் தடை ஆகியவற்றால் பெருமளவு அகதிகள் படகுகள் மூலமாக தமிழ் நாட்டுக்குச் சென்ற வண்ணமுள்ளதாக இராமேஸ்வரம் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா கடற் படையினரின் கண்காணிப்பையும் கெடுபிடிகளையும் மீறி தமது உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஆபத்தையும் பொருட்படுத்தாது பெண்கள் குழந்தைகள் வயோதிபர்கள் என்று குடும்பம் குடும்பமாக தமிழகத்திற்கு சென்ற வண்ணமுள்ளன என்று தெரிவிக்கின்றது.

இவ்வாறு தப்பிச் சென்ற ஜெயசீலன் (45) என்பவர் தெரிவிக்கையில் "நாங்கள் யாழ்ப்பாண

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)


ஏசியன் என்ரபிறைஸ்
பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி ,நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம்,
பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப்
பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்
* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *
ASIAN ENTERPRISE
Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37
Hohl.Str 78,
8004 Zurich.

24-08-96

பாரிஸ் லாசப்பலில்

கோலாகலமான ஆரம்பம்

மக்கள் கடை

(இது உங்கள் கடை)

59, Rue Louis Blanc, 75010 Paris.

Métro: La Chapelle

# அரசு தான் செய்யும் கொடூர செயல்களுக்கு யுத்தத்தை காரணம் காட்ட முடியாது

## சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் மிகவும் பற்றுக் கொண்டதாக சிறிலங்காவில பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டிருக்கிற போதிலும் போர் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் மனிதஉரிமை மீறல்களை நியாயப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இது ஒரு ஏமாற்றுத்தனமான போக்காகும். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கிறது.

'சிறீலங்காவின் நெருக்கடியான கட்டத்தில் மனித உரிமை நிலவரம் என்ற தலைப்பில் அது வெளியிட்டிருக்கும் அறிக்கையில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் மனித உரிமை மீறல்களை அது சகித்துக் கொண்டே இருக்கிறது. மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவதற்கு தேவையான முக்கிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அது மறுத்துக்கொண்டே இருக்கிறது. அரச படைகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் பின்னணியில் நீதி விசாரணைக்குப் புறம்பான கொலைகள், ஆட்கள் காணாமல் போதல் சித்திரவதைகள் போன்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மின்சார அதிர்ச்சி கொடுத்து சித்திரவதை செய்தல், பாலியல் வன்முறை போன்ற சித்திரவதைகளை அப்பாவிப் பெண்களுக்கும், ஆண்களுக்கும், சிறுவர்களுக்கும் செய்வதை எந்த விதத்திலும் நியாயப் படுத்த முடியாது.

முன்னர் இருந்ததைப்போல மனித உரிமை மீறல்கள் நிலவரம் இப்போது படு மோசமா இல்லை என்று கூறிக் கொள்வதன் மூலமாக அரசாங்கம் திருப்தி அடைந்துவிட முடியாது. சாவதேச நியமங்களுக்கு இசைவற்றவையாக இருக்கும் பல சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்துக் கொண்டே வருகிறது. இச்சட்டங்கள் தற்போதைய நிலையில் சித்திரவதைகள், தடுப்புக் காவல் மரணங்கள், காணாமல் போதல், நீதி விசாரணைக்கு புறம்பான மரண தண்டனைகள் போன்ற மனித உரிமை மீறல்களுக்கு வசதி செய்வனவாவே இருக்கின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் மன்னிப்பு வழங்குவதைக் குறித்தும் சர்வதேச மன்னிப்புச்சபை விசனம் கொண்டுள்ளது. மனித உரிமை மீறல்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு எதிராக ஒரு சில வழக்குகளே தாக்கலாகியிருக்கின்றன. அவையும் வெகு தாமதமாகவே விசாரிக்கப்பட்டு வருகின்றன.

ஆட்களை கைது செய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும் பாதுகாப்புப் படையினருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பரந்த அளவிலான அதிகாரங்களை இரத்துச் செய்ய வேண்டும் அல்லது திருத்த வேண்டும். அத்துடன் மனித உரிமையை மீறியவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்வர்களின் மீதான வழக்குகளையும் விசாரணைகளையும் துரிதப்படுத்த வேண்டும் என்று மன்னிப்புச்சபை சிறீலங்கா அரசை கேட்டுக்கொள்கிறது.

அத்துடன் இன அடிப்படையில் அப்பாவி மக்களை கொலை செய்யும் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தவிர்க்க வேண்டும் இத்தகைய செயல்களைக் கண்டித்து தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும் என்று புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்திடம் மன்னிப்புச்சபை கோருகிறது. எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சிறீலங்காவின் உள்நாட்டுப் போரில் தலையிடவில்லை - அமெரிக்கா

சிறீலங்காவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் அமெரிக இராணுவம் முன்னர் சம்மந்தப் பட்டதுமில்லை. இனி சம்பந்தப்படப் போவதுமில்லை என்று அமெரிக்க இராணுவத் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளது.

ஹவாயை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அமெரிக்க இராணுவத்தின் அமெரிக்க - பசுபிக் கட்டளைபீடம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் சிறீலங்கா விமானப்படையினருடனும், சிறீலங்கா இராணுவத்துடனும் கூட்டுப் பரிவத்தனை பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் சிறீலங்கா படைகளின் மருத்துவ, இராணுவத் தளபாட நகர்வு, கப்பல்கள் மூலமாக படைகளை தரையிறக்கும் நடவடிக்கைகள், மற்றும் பயிற்சி ஆற்றல்களை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு உத்தரவு வழங்கும் அதிகாரத்தை கொண்டிருந்த தரத்தைச் சேர்ந்த 4 அமெரிக்கப்படை அதிகாரிகள் அண்மைக் காலங்களில் அவர்களுக்கு உதவி வந்திருக்கிறார்கள்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சிறீலங்கா இராணுவத்திற்கு உதவியாக அமெரிக்க இராணுவம் மோதல்களில் ஈடுபட்டது இல்லையாது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# குடாநாட்டில் இராணுவம் கட்டாய வேலை வாங்குகிறது

(கிளிநொச்சி)

யாழ் குடாநாட்டில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வாழும் மக்களை தமக்கு வேலை செய்யும்படி இராணுவம் பலவந்தப்படுத்தி வருகின்றது.

உழவு இயந்திரங்கள், லொறி போன்ற வாகனங்கள் வைத்திருப்பவர்கள் இராணுவ முகாம்களுக்கான காவலரண்களைப் பலப்படுத்தவென மண்கொண்டு சென்று கொடுக்க வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளனர்.

நாள் முழுவதும் இராணுவத்துக்காக மண் ஏற்றிப் பறித்தாலும் இவர்களுக்கான எந்த விதமான செலவுகளும் கொடுக்கப்படுவதில்லை.

யாழ் குடாநாட்டின் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இது ஒரு கட்டாயமான நடைமுறையாக உள்ளது. இவர்களுக்கான எந்தவிதமான உரிமைகளையும் கொடுப்பதில்லை என்பதுடன் மறுப்பவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

# கிளிநொச்சி வைத்தியசாலை எறிகணையால் சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவமனையின் எல்லாப் பகுதிகளுமே மிக மோசமாக சேதமடைந்திருப்பதாக கிளிநொச்சி சுகாதார சேவைகளின் பிரதித் தலைவர் கூறியுள்ளார்.

எறிகணை வீச்சுக்களாலும் குண்டு வீச்சுக்களாலும் இச்சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறும் அவர் வெளிநோயாளர் பகுதி, நோயாளர் தங்கும்விடுதி, மற்றும் வைத்தியசாலையின் அனைத்துப் பகுதிகளுமே மோசமான அளவுக்குப் பாதிக்கப் பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்று தான் நேரடியாகப் பார்த்ததையும் அவதானித்ததையும் விரிவான அறிக்கையாக தயார் செய்து கூடிய விரைவில் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாண வர்த்தகர் ரயர் போட்டு எரிப்பு

(கொழும்பு)

அண்மையில் காணாமல் போனதாகக் கூறப்படும் தமிழ் வர்த்தகர் விடயம் தொடர்பாக மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் சிறீலங்கா புலனாய்வுத் துறை விசாரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தாகளும் வவுனியாவில் கடமையாற்றியவர்கள் என்றும், காணாமல் போனவரும் வவுனியாவில் வைத்தே காணாமற் போனார் எனவும் கூறப்படுகின்றது.

காணாமற் போனதாகக் கூறப்படும் அந்த யாழ் வாசி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சில மாதங்களாக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் குற்றமற்றவர் என்பதால் சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தார். அதன் பின்னரே அவர் காணாமற் போயுள்ளார்.

அண்மையில் மொறட்டுவ பொலிஸ் பிரிவில் டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலம் ஒன்று கருகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட நான்கு பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ளது.


மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
FAX: 0181-606 9709

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு...
ராஜஸ்ரீ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD
WEMBLEY,
MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887

# நரசிம்மராவை உலுக்கிய ஊறுகாய் வியாபாரி



அரசியல் வட்டாரத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ள லக்குபாய் பதக்கின் வாழ்க்கை வரலாறு பல திருப்பங்களைக் கொண்டதாகும். சாதாரண குடும்பத்தில் பிறந்து கோடீஸ்வரராக உயர்ந்தவர் அவர்.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த கேசோத் என்ற இடம்தான் அவரது பூர்வீகக் கிராமம். இளமையில் அவருக்கு படிக்க அதிக வாய்ப்பு இல்லை. ஓரளவு படிக்க வாய்ப்புக் கிடைத்த போதிலும் கூட அவர் அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆரம்பப் பள்ளிப் படிப்பைக்கூட அவர் பூர்த்தி செய்யவில்லை. அவரது அண்ணன் தயாசங்கர் ஆபிரிக்காவிலுள்ள கென்னியா நாட்டில் அல்வாக்கடை நடத்திக் கொண்டிருந்தார்.

## கலைந்த கனவு

அவருக்கு உதவியாக லக்குபாய் பதக் செயல்பட்டார். ஆனால் அதில் விருப்பம் இல்லாததால் இந்தியாவிற்கு திரும்பிவந்துவிட்டார். மும்பாய்க்கு வந்த அவருக்கு சினிமாவில் நடிக்க ஆசை ஏற்பட்டது. அதற்காக அவர் தீவிரமாக முயற்சி செய்தார். பிரசித்திபெற்ற அஜந்தா ஸ்ருடியோவுக்கு சென்றார். அங்கு படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. லலிதா பவாரும் ஜீவனும் நடித்துக் கொண்டிருந்தனர். அதைப்போல தன்னாலும் சினிமாவில் பிரகாசிக்க முடியுமா என்று பதக் ஏங்கினார். ஆனால் அவரது கனவு நனவாகவில்லை.

தனது எண்ணம் நிராசையாகி விட்டதால் தனது சொந்தக் கிராமத்துக்கு திரும்பினார். அன்றைய காங்கிரஸ் தலைவர்களின் கருத்தாழமிக்க எழுத்தாலும் ஆவேசம் மிக்க பேச்சுக்களாலும் கவரப்பட்ட பதக் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணினார். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களுடன் அவர் தோழமை கொண்டார். பழமையில் ஊறித்திளைத்த கிராமப் பெரியவர்கள் அதற்காக அவரைக் கண்டித்தார்கள். மனவேதனைப்பட்ட அவர் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்ய சைக்கிளில் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற் கொள்ளத் தொடங்கினார். ஆனாலும் ராஜ்கோட் வரை மட்டுமே அவரது பயணம் தொடர்ந்தது. மீண்டும் அவர் ஊருக்குத் திரும்பிவந்து விட்டார்.

பொறுப்பில்லாமல் ஊர்சுற்றித் திரியும் பதக்கை வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அவரது உறவினர்களும், பெற்றோரும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர். மணம் முடித்துவைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று அவர்கள் கருதினார்கள். அதன் படி அவருக்கு திருமணம் முடித்துவைக்கப்பட்டது. பானை பிடித்தவள் பாக்கியசாலி என்பதற்கு இணங்க மனைவி வந்த நேரம் தொட்டு பதக்கின் வாழ்க்கையில் அதிஷ்ட தேவதை புன்னகை பூக்கத் தொடங்கினாள்.



பதக் குடும்பத்துடன் மறுபடியும் கென்னியாவுக்கு சென்றார். அண்ணனுக்கு உதவியாக வியாபாரத்தைக் கவனித்தார். ஒரு சில ஆண்டுகள் சுமூகமாகக் கழிந்தன. அதன் பின் அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பதக் அண்ணனை விட்டுப் பிரிந்து குடும்பத்துடன் பிரித்தானியாவுக்குச் சென்றார்.

### தன்னம்பிக்கையே அத்திவாரம்

கையில் பெருமளவு பணம் இல்லை. மனைவி மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒரு புறம் புதிய இடத்தில் எப்படியாவது பிழைப்பு நடத்த வேண்டிய கட்டாயம் மறுபுறம் இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் மன தைரியத்தை மட்டும் அவர் கைவிடவில்லை. அவரது அந்தத் துணிச்சல்தான் அவரது வாழ்க்கையை படிப்படியாக உயர்த்தியது. லண்டன் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு இடத்தில் வாடகைக்கு தனது குடும்பத்துடன் பதக் குடியேறினார். இடிந்து சிதலமான அந்த வீட்டை விற்பதற்காக அதன் உரிமையாளர் விலை பேசிக் கொண்டிருந்தார். விலை சரியாக அமையாததால் விற்பனை இழுபட்டுக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் பதக் தலையிட்டார். அந்த வீட்டை தானே வாங்கிக் கொள்வதாக உரிமையாளரிடம் தெரிவித்தார். 60 ஆயிரம் ரூபாவிற்கு வீட்டை வாங்கிக் கொள்வதாகவும் அந்தப் பணம் முழுவதையும் செலுத்துவதற்கு மூன்றுமாதகாலம் அவகாசம் தேவை என்றும் பதக் கோரினார். அதற்கு உரிமையாளரும் சம்மதித்தார். குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தை பதக் கொடுத்துவிட்டார். அதைச் சம்பாதிப்பதற்கு அவர் மிகவும் கஷ்டப்பட்டார்.

பதக்கும் அவரது மனைவியும் சமோசா போன்ற தின்பண்டங்களையும், ஊறுகாய் வகைகளையும் தங்கள் வீட்டுச் சமையல் அறையில் தயாரித்து அந்தப் பகுதியில் இருந்த இந்தியக் குடும்பங்களுக்கு விற்றனர். தரமும் ருசியும் அருமையாக இருந்ததால் பதக் வீட்டு உணவுப் பொருட்களுக்கு அமோக வரவேற்பு ஏற்பட்டது. 1956-ல சிறிய உணவகம் ஒன்றை லண்டனில் அவர் தொடங்கினார். படிப்படியாக அவரது பொருளாதார நிலை உயர்ந்து வந்தது.

உணவுப் பொருட்களைத் தயாரிக்க மூலிகை எண்ணெயை அவர் பயன் படுத்தியதால் அதற்கு பெரும் வரவேற்பு ஏற்பட்டது. 69 வகையான ஊறுகாய்களை அவர் தயாரித்து விற்பனைசெய்து வருகிறார்.

பதக் ஸ்பைசல் வர்தக நிறுவனத்தின் இன்றைய மதிப்பு 350 கோடியாகும். இதற்கு பதக் போட்ட முதலீடு 175 ரூபா தான்.

தொழில் அதிபர் சி.பி. பட்டேல் மூலம் சந்திரசாமியின் தொடர்பும், அவர் மூலம் நரசிம்மராவின் தொடர்பும் பதக்கிற்கு ஏற்பட்டது. பத்திரிகை காகித ஒப்பந்தத்திற்கு அரசிடம் இருந்து அனுமதி பெற்றுத் தருவதாகக் கூறி சந்திரசாமியும் அவரது உதவியாளர் கைலாஸ்நாத் அகர்வாலும் தன்னிடம் 35 இலட்சம் ரூபா பெற்றதாக பதக் கூறியுள்ளார். உங்கள் காரியம் முடித்துத் தரப்படும் பயப்படாமல் அவர்களிடம் நீங்கள் பணத்தைக் கொடுக்கலாம் என்று நரசிம்மராவ் உறுதியளித்தால்தான் தான் சந்திரசாமியிடம் பணத்தைக் கொடுத்தாக பதக் கூறியுள்ளார்.



ரூ.35 லட்சம் மோசடி, சூழ்ச்சி சுவாமி நரசிம்மராவை உலுக்கியுள்ள ஊறுகாய் வியாபாரி லக்குபாய்பதக்!

நரசிம்மராவையும் சந்திரசாமியையும் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி நியூயோர் நகரிலுள்ள ஒரு ஹோட்டலில் சந்தித்ததாக பதக் தெரிவித்துள்ளார். சந்திரசாமியும் அகர்வாலும் டெல்லி திகார் சிறையில் உள்ளனர். பதக் பணம் பெறப்பட்ட விவகாரத்திற்காக நரசிம்மராவை நீதிமன்றத்திற்கு வருமாறு டெல்லி நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. நரசிம்மராவ் உயர்நீதிமன்றத்தில் அதற்கு தடை உத்தரவு வாங்கியுள்ளார். எதிர்வரும் 20-ம் திகதியுடன் இந்தத் தற்காலிகத் தடை முடிவடைகிறது. அன்றைய தினம் இந்த விவகாரம் தொடர்பாக பெரிய திருப்பம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோடீஸ்வரரான தனக்கு 35 இலட்சம் ரூபா ஒரு பொருட்டல்ல என்றாலும் இந்திய அரசியல் வாதிகளின் நம்பிக்கைத் துரோகத்தை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கே தான் போராடி வருவதாக பதக் தெரிவித்துள்ளார்.

KANNA Imports & Exports Ltd.
(New Ambiha Supermarket)
198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்)' விநியோகிக்கப்படும்
தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356

# மேலும் இரு முன்னாள் அமைச்சர்கள் கைது ?

இந்திரகுமாரி, செல்வகணபதியைத் தொடர்ந்து மேலும் இரண்டு முன்னாள் அ.தி.மு.க அமைச்சர்கள் கைதுசெய்யப்பட உள்ளதாக சென்னைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் பல்வேறு துறைகளில் ஊழல் நடந்திருப்பதாக நாள்தோறும் பல திடுக்கிடும் தகவல்கள் வந்தவண்ணம் உள்ளன. புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தி.மு.க அமைச்சர்கள் தங்கள் துறைகளில் கடந்த ஆட்சியில் எவ்வாறு எல்லாம் ஊழல்கள் நடந்துள்ளது என்பது பற்றி சட்டமன்றத்தில் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார்கள்.

ஏற்கனவே இலவச வேட்டி, சேலை வழங்குவதில் நடந்த ஊழல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார். அவரைத் தொடர்ந்து இன்னொரு முன்னாள் அமைச்சரான கு.ப.கிருஷ்ணனும் ஊழல் வழக்கில கைதாகும் நிலையில் திடீரென தலைமறைவாகிவிட்டார். அவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

அடுத்தாக சுடுகாட்டில் கொட்டகை அமைத்ததில் நடந்த ஊழல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் செல்வகணபதியும் சி.பி.ஐ யால் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர்களைத் தொடர்ந்து பொலிசாரின் பிடியில் இப்போது சிக்கியுள்ளவர்கள் முன்னாள் அமைச்சர்களாக செங்கோட்டையனும், பட்டாபிராமனும் ஆகும். கூட்டுறவுத்துறைக்கு சாக்கு வாங்கியதில் 50 கோடி ரூபா ஊழல் நடந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த பட்டாபிராமன் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறே போக்குவரத்துத் துறையில் 100 கோடிரூபா ஊழல் நடந்திருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் முன்பு போக்குவரத்து அமைச்சராக இருந்த செங்கோட்டையன் மீதும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படலாம் என சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொடியேற்றுவதில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சிகள் மோதல்

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு கொடியேற்றுவதில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் மோதல் ஏற்பட்டது.



காங்கிரஸ் கட்சியின் கொடியை த.மா.காங்கிரஸ் பயன்படுத்தக் கூடாது என்று குமரி ஆனந்தன் கூறிவருகிறார்.

திருவொற்றியூரில் காங்கிரஸ் கட்சிக்கு உரிய கட்டிடத்தில் சுதந்திரதினம் கொண்டாடுவதென த.மா.காங்கிரஸ் முடிவு செய்தது. இதை எவ்வகையிலும் தடுத்துவிடுவதென காங்கிரஸ் தொண்டர்கள் கூறினார்கள். இதற்கிடையில் காங்கிரஸ் நகரசபைத் தலைவரும், மற்றும் சிலரும் த.மா.காங்கிரசுக்கு மாறினார்கள். அதைத் தொடர்ந்து அந்த மண்டபத்திலேயே த.மா.காங்கிரஸ் சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இதனால் ஆத்திரமுற்ற காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்று அந்தக் கட்டடம் எங்களுக்குச் சொந்தம் அதை பூட்டைப் போடுங்கள் என்று காவல் துறையினரிடம் கேட்டனர்.

த.மா.காங்கிரஸ் தொண்டர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசு தங்களுக்கு நீதி வழங்கவில்லை எனக்கூறி குமரி அனந்தன் தலைமையில் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குமரி அனந்தன் உட்பட 24 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இதைவிட ராமநாதபுர மாவட்டத்தில் உள்ள ஒரு கொடிகம்பத்தில் இரு கட்சியினரும் கொடியேற்ற முற்பட்டதால் பொலிசார் அங்குவந்து காவலில் ஈடுபட்டனர் இருந்த போதிலும் இரு பகுதியினரும் ஊர்வலமாகச் சென்றனர். மத்திய கொடிக்கம்பத்தில் கொடி ஏற்றத் தடைவிதிக்கப் பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியினர் கலைந்து சென்றனர். இதேவேளை த.மா.காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பொலிசாரின் தடையையும் மீறிச் சென்றபோது அவர்களைத் தடுப்பதற்காக பொலிசார் தடியடிப் பிரயோகம் மேற் கொண்டனர் இக் கலவரங்களில் இரு கட்சிகளையும் சேர்ந்த 140 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கருணாநிதி கண்ட பொன்விழாவும் வெள்ளிவிழாவும்

இந்திய சுதந்திர தினத்தின் வெள்ளி விழாவையும், பொன் விழாவையும் தனது பதவிக் காலத்தில் கண்ட முதல்வர் என்ற பெருமையை கலைஞர் கருணாநிதி பெற்றிருக்கிறார்.

1971ம் ஆண்டு இந்திய சுதந்திர தினத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. அப்போது தமிழகத்தின் முதல் அமைச்சராக கலைஞர் கருணாநிதி கோட்டையில் நடந்த சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டார். அப்போது கோட்டையில் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி கொடியை ஏற்றிவைக்கும் உரிமை மாநில ஆளுனருக்கே இருந்தது.

இந்த நிலையில் இதை எதிர்த்து கருணாநிதி மத்திய அரசுடன் வாதாடி மாநில முதலவர்களுக்கு அந்த உரிமையைப் பெற்றுத் தந்தார். எனினும் அவரால் அந்த உரிமையை அப்போது அனுபவிக்க முடியவில்லை. அதற்குள் அவரது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது.



தற்போது சுதந்திர தினத்தின் 50-வது ஆண்டு பொன்விழா கடந்த 15.08.96 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் நான்காவது தடவையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப் பேற்றிருக்கும் கலைஞர் கருணாநிதி சென்னை சென்ஜோர்ச் கோட்டையில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததன் மூலம் இந்திய சுதந்திர தினத்தின் வெள்ளிவிழா, மற்றும் பொன்விழாக்களை கண்ட முதல்வர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்.

# இரட்டைஇலைச் சின்னத்துக்கு அ.தி.மு.க வில் உரிமைப்போட்டி

அ.தி.மு.கவிலிருந்து அதன் துணைப் பொதுச் செயலாளர் முத்துச்சாமி கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து கண்ணப்பன் அணியினர் தீவிரமாக செயல்படுகின்றனர். முன்னர் பழிவாங்கப்பட்ட அ.தி.மு.க முக்கியஸ்தர்களை இணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



ஜெயலலிதா கூட்டும் அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப் படுகிறதோ என்பதை அறிந்த பின்னரே போட்டிப் பொதுக்குழுவை கூட்ட திட்டமிட்டுள்ளனர்.

செயற்குழுவைக் பார்க்க பொதுக்குழுவே அதிக அதிகாரங்களைக் கொண்டது. பொதுக் குழுவில் 1000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவை திரட்ட முத்துச்சாமி, கண்ணப்பன் குழுவினர் முயற்சித்து வருகின்றனர்.

இதேவேளை போட்டிப் பொதுக்குழுக் கூட்டத்தை முறியடிக்க ஜெயலலிதா திட்டமிட்டு வருகிறார் என்றும் இதன் பிரகாரம் பொதுக்குழு உறுப்பினர்களை கடத்தி இரகசிய இடத்தில் தங்கவைக்க ஏற்பாடு செய்துள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.



## ஜெயலலிதா கொடும்பாவி எரிப்பு

போட்டி அ.தி.மு. காவைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் பல இடங்களில் ஜெயலலிதாவின் கொடும்பாவியை எரித்துள்ளனர்.

இக்கட்டான இந்த வேளையில் கட்சியின் முக்கியஸ்த்தர்களுடன் ஜெயலலிதா இரகசிய ஆலோசனைக் கூட்டத்தையும் நடத்தியுள்ளார்.

# ஏயர்லங்கா விமானத்தில் குண்டு; சென்னை விமான நிலையத்தில் அமளி

சென்னையிலிருந்து கொழும்புக்கு செல்ல இருந்த விமானத்தில் வெடி குண்டு இருப்பதாக தகவல் கிடைத்தையடுத்து சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையம் பெரும் அமளிதுமளிப் பட்டது.

சிறீலங்கா அரசுக்கு சொந்தமான எயர் லங்கா விமானம் கடந்த 15.08.96 பகல் 11.20ற்கு சென்னையிலிருந்து கொழும்புக்கு புறப்பட இருந்தது. விமானம் புறப்படுவதற்கு ஒருசில நிமிடங்கள் இருந்த நிலையில் அந்த விமானத்தில் பயணம் மேற்கொள்ளவிருந்த இரண்டு பயணிகள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் வைத்திருக்கும் பயணப் பெட்டிகளில் வெடிகுண்டு இருக்கலாம் என்றும் சில பயணிகள் விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து விமானத்தில் ஏறியிருந்த பயணிகள் அனைவரும் அவசர அவசரமாக அதிலிருந்து இறக்கப்பட்டனர்.

உடனடியாக குண்டு செயலிழக்கவைக்கும் நிபுணர்களும், துப்பறியும் நாய்களும் வரவழைக்கப்பட்டன. விமான நிலையம் முழுவதும் அபாயகட்ட நிலையில் வைக்கப்பட்டது. எவ்வளவு சல்லடை போட்டுத் தேடியும் சந்தேகப்படும் படியான எந்தப் பொருளையோ வெடிகுண்டையோ சோதனையின்போது கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியில் அவ்விமானம் ஐந்து மணி நேரதாமதத்திற்கு பின் மாலை 4.15 மணிக்கு சென்னையிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டது.


# தமிழில் சாரதிப் பயிற்சி

பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து **பிரெஞ்சு சாரதிப் பத்திரம்** (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்



இடம் : 6, rue de Marquay, Paris10 (நிலை மணிகை சந்து)
Métro: La Chapelle / Gare du Nord. - Tel: 34 24 12 82 / 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : Maison des Associations, Pontoise - Tel: 34 24 12 82 / 02 46 59 23

## நாலும் நடக்கும் நாட்டிலே

லண்டன் தனியார் தொலைக்காட்சி நிறுவனமான Channel 4 கடந்த வாரம் தற்கொலைப் போராளிகள் எனும் விவரணம் ஒன்றினை ஒளி பரப்பியுள்ளதாம். Suicide Warriors எனும் பெயரில் இவ் விவரணம் ஒளிபரப்பப்பட்ட போதும் அவ் விவரணம் கரும் புலிகளைப் (முழுவதும்) பற்றியது அல்லவாம். கூடுதலாக பெண் போராளிகள் பற்றிய விடயங்கள் அவ் விவரணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததாம்.

அண்மைக் காலங்களில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய விவரணங்களில் இவ் விவரணப் போராட்டம் தொடர்பான ஒரு நியாயமான பார்வையினை முன் வைத்துள்ளனவாம். இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதனை ஐயம் திரிபற எடுத்துரைத்த விவரணம் நடுநிலை தவறாது அதே நேரம் விடுதலைப் போராட்டத்தினை வெளிநாட்டவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்ததாம். போராளிகள் மத்தியிலே இருக்கும் மனித உறவுகளைப் படம் பிடித்துக் காட்டிய விபரணம் சிறீலங்கா இராணுவ தரப்புப் பேச்சாளர் சுமத்திய அபாண்டமான குற்றச் சாட்டினை மறுதலிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்ததாம்.

இவ் விவரணம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தினை, உலக அரங்கில் முன்வைத்துவிடும் என்று அஞ்சியோ, அல்லது தாம் விடுதலைப் புலிகள் தொடர்பாக மேற்கொண்டு வரும் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கத் துணை நிற்கும் என்று அஞ்சியோ என் கள

நண்டு

னவோ இவ் விபரணம் ஒளிபரப்பப் படாமல் தடுப்பதற்கு சிறீலங்கா அரசும், சிறீலங்காவின் பிரித்தானியத் தூதுவராலயமும் பகீரத முயற்சி மேற் கொண்டனவாம்.

முல்லைத் தீவுத் தாக்குதலின் பின் உலக அரங்கில் சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்கள் தோல்வியினைத் தழுவ ஆரம்பித்துள்ளது என நண்டார் சென்ற தடவை குறிப்பிட்டிருந்தார் அல்லவா. இவ் விவரணமும் அப்போக்கை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கிடையில் ஒரு தகவல் இவ் விவரணத்தின் தயாரிப்பாளர் ஒரு தமிழராம். சதானந்தன் எனும் அந்த தமிழ் மகனுக்கு நண்டாரின் வாழ்த்துக்கள்.

▲▲▲▲▲

வன்னிப் பிரதேசத்தில் இருந்து தாண்டிக்குளம் தாண்டி வவுனியா நோக்கி பெரும் தொகையான மக்கள் அகதிகளாகத் தஞ்சம் அடைவார்கள் என சிறீலங்கா அரசு எதிர் பார்க்கிறதாம். இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் மீதான எறிகணை, குண்டு வீச்சுத் தாக்குதல்களை ஒரு புறம் நடாத்திக் கொண்டும் மறுபுறம் மக்களுக்குத் தேவையான உணவு மருந்து வகைகளைத் தடைசெய்து மக்கள் மீது கொடுக்கப்படும் அழுத்தம் மக்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஓடி வரச் செய்து விடும் என்பதே அரசின் எதிர்பார்ப்பாம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் காட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மக்களை வரவழைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறதாம். மேலும் மக்கள் மிகுந்த துன்பத்தில் வாடுகையில் தாண்டிக்குளம் செல்ல விரும்பும் மக்களை விடுதலைப் புலிகள் தடுக்க முயலின் அது அம் மககளுக்கும் புலிகளுக்கும் இடையே முரண்பாடுகளைத் தூண்டி விடும் எனவும் அரசு திட்டமிட்டிருந்ததாம்.

ஆனால் இங்கும் அரசு எதிர்பார்த்தது நடக்கவில்லையாம். தாண்டிக்குளம் தாண்ட விரும்பும் மக்களை விடுதலைப் புலிகள் தடுக்கவும் இல்லையாம். இதனால் வவுனியா வருவோர் தொகை அதிகரிக்கலாம் என்ற எதிர் பார்ப்பும் அரச மட்டத்தில் அதிகரித்துள்ளதாம்.

ஆனால் இவ்வாறு வருபவர்கள் மூலமாக வவுனியாவின் பாதுகாப்பு நிலைக்குக் குந்தகம் விளைவித்து விடுமோ என்ற அச்சம் பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டுள்ளதாம். இதனால் மக்கள் தங்குவதற்காக அமைக்கப்படும் அகதி முகாம்களை ஒரு சிறைச்சாலை போன்றே அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாம். ஆனால் இந்தச் சிறைச் சாலைக்குள் உள்ளே நுழையலாம் ஆனால் வெளியே வரமுடியாது. எவருமே தப்ப முடியாத ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அரச அதிகாரி ஒருவர் இது தொடர்பாக கூறினாராம். வவுனியா "அகதி முகாமினுள்" நுழைபவர்களுக்கு வாழ்க்கை நீண்ட நாட்களாக அங்கு தான் இருக்கப் போகிறது போலும்.

▲▲▲▲▲

## ☞ தற்கொலைப் போராளிகள் புதிய விபரணம்
## ☞ வவுனியாவில் புதிய சிறைச்சாலைகள்
## ☞ சந்திரிகா ஏன் தோற்கிறார்?

பொதுஜன ஐக்கிய முன்னணி 1994-ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப் பீடம் ஏறி இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. இதற்கிடையில் மக்களுக்கு ஆட்சி மீதான அதிருப்தியோ உச்சக் கட்டத்தை அடைந்து விட்டதாம். இதே போக்கில் போனால் எவ்வளவு காலம் தான் தாக்குப் பிடிக்க முடியுமோ என்ற அச்சம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ளவர்களுக்கே ஏற்பட்டுள்ளதாம்.

நண்டாரின் நண்பர் ஒருவர் சொன்னார் ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு ஏற்பட்ட பல்வேறு எதிர்பார்புக்களையும் சமாளித்துக்கொண்டு 17 வருடங்கள் ஆட்சியில் இருந்தது. ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணியோ 2 வருடங்களில் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கி விட்டது. இந் நிலை தொடரின் நிச்சயமாக அடுத்த தேர்தலில் சந்திரிகா அரசு தோல்வியினைத் தழுவும் அல்லது அதற்கிடையில் ஆட்சி கவிழ்ந்து தேசிய அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முயற்சி நடக்கும். மிகுந்த பிரபலத்துடன் மக்கள் ஆதரவுடன ஆட்சி பீடம் ஏறிய சந்திரிகா கவிழ்ந்து விழப் போவதற்கு காரணம் சந்திரிகாவின் அரசியல் பக்குவம் இன்மையே!

▲▲▲▲▲

### நண்டாரின் அறிவித்தல்

அடுத்த வாரத்தில் இருந்து நாலும் நடக்கும் நாட்டிலே என்ற இந்தப் பத்திக்கு பதிலாக புதிய பத்தி ஒன்றினை நண்டார் ஆரம்பிக்கின்றார். இதனால் சில வாரங்களுக்கு நாலும் நடக்கும் நாட்டிலே இடம் பெறாது.

நண்டார் ஆரம்பிக்கும் புதிய பத்தியில் நாட்டு நிலைமைகள் இராணுவ, அரசியல் கண்ணோட்டத்தில் ஆராயப்படவுள்ளன. இப்புதிய பத்தி தொடர்பாகவும், உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.


ஜேர்மன் திரையரங்குகளில் இவ்வார மாபெரும் வெளியீடு

விணித், வடநாட்டு வனிதை தபு, அப்பாஸ், வடிவேலு, S.P.பாலசுப்பிரமணியம் மற்றும் பலரின் நடிப்பில்

பத்துக்கோடி ரூபா செலவில் கே.ரி.குஞ்சுமோனின் பிரமாண்டமான தயாரிப்பில் இதயம் புகழ் கதிரின் இயக்கத்தில், ஏ.ஆர்.ரகுமானின் அதிரடி இசையில் ஒரு உன்னத காதல் கதை



காதல் தேசம்

DOBLY STEREO

டோட்மூண்ட் நகரில்

25.08.96 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி

THETER CAMERA MALLINCKRODT STR - 279, 44147 DORTMUND

தொடர்புகளுக்கு:

BRIGHTAN VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES

OESTERMARSCH 37, 44145 DOUTMUND

Tel: 0231 819431, 838703 Fax: 0231-811858

20 Kg Tilda Brocken பசுமதி அரிசி 20.90 Dm மட்டுமே

23.08.96 வெள்ளி
இரவு 10.45 மணி
KINO - SCHAUBURG
FRIEDRICH STR - 22
MONCHNGLADBACH

24.08.96 சனி
இரவு 11.45 மணி
CINEMA KINO
BERLINER STR - 88
WUPPERTAL OBERBARMEN

25.08.96 ஞாயிறு
பி.ப. 2.30 மணி
CINEMA KINO
BERLINER STR - 88
WUPPERTAL OBERBARMEN

26.08.96 திங்கள்
இரவு 8.00 மணி
KINO - UNIVERSUM
AM BAHNHOF
RHEYDT.

தொடர்புகளுக்கு: GLORIOUS ENTER PRISE

RATHAUS STR-16, 17, MUNCHENGLADBACHH

TEL: 02161 178007 / 0171 5179971 / 0202 447806

KADV

# யாழ்ப்பாண அரசின் கடை மன்னனும் அவன் ஆட்சியின் இறுதி நாட்களும்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

31

சங்கிலி குமாரன் பட்டத்து இளவரசனையும், அவனுக்குப் பரிபாலகனாக இருந்த அரச கேசரியையும் கொலை செய்ததையறிந்து கோபங்கொண்ட மக்கள் அவனைச் சிம்மாசனத்திலிருந்து இறங்கும்படி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர். அரச பிரதானிகள், படைவீரர்களும் கூட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். சங்கிலி குமாரன் அரச பதவியைத் துறந்து, அவனது மைத்துனனான வியூக்கு குமாரனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சங்கிலி குமாரன் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்ததும், அவனுக்கெதிரான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய சின்ன மீகாப்பிள்ளை என்பவன், யாழ்ப்பாண இளவரசிகள் சிலரையும் அழைத்துக்கொண்டு மன்னாருக்குச் சென்று போர்த்துக்கேயரிடம் சரணடைந்து, அவர்களது உதவியைக் கோரினான்.

அவன் நல்லூரை விட்டுப் போனதும் மக்களது கலவரங்கள் அடங்கிப் போனது. அதன்பின் ஒருநாள், சங்கிலி குமாரன் திருத்தல யாத்திரைக்காக அரண்மனையை விட்டுப் புறப்பட்ட போது, அவனது அந்தரங்க மந்திரியான அமரக்கோன் முதலியார், 'புலி ஒன்றை அரண்மனைக்குள் விட்டுச் செல்லலாமா' என்று கேட்டான். சங்கிலி குமாரனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

பின்னர் அமரக்கோன் அவனுக்கு 'வியூக்கு குமாரன்' மக்களின் ஆதரவைப் பெற்றவன், அவனை அரண்மனையில் தனியே விட்டுவிட்டு வெளியே சென்றால் அவனுக்குச் சார்பானவர்கள் அவனை அரசனாக்கி விடுவார்கள்' என்று தான் முதலில் சொன்னதற்கு விளக்கம் சொன்னான்.

அப்போதுதான் உண்மையைப் புரிந்து கொண்ட சங்கிலி குமாரன், அமரக்கோன் முதலியாரிடம் சொல்லி அவரது ஆட்களைக் கொண்டு, வியூக்கு குமாரனின் கண்களைக் குருடாக்கியதோடு, அவனுக்கு ஆதரவானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட முதலியார்மார்களையும், அதிகாரிகளையும் விருந்துக்கென அழைத்து தந்திரமாகக் கொலை செய்வித்தான்

நல்லூர் அரண்மனையில் நிலைமை இவ்வாறிருக்க காலஞ்சென்ற மன்னன் எதிர்மன்ன சிங்கன் கோவாவிலிருந்த போர்த்துக்கேய தேசாதிபதிக்கு அனுப்பிய தூதுக்கு, அவன் கி.பி.1616-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி பதில் அனுப்பினான். இறந்த அரசனின் விருப்பப்படி, அவனது மகனே இளவரசனாக இருக்க வேண்டும் என்றும், அவன் பராயமடையும் வரை அரசகேசரி அவனுக்குப் பரிபாலகனாக இருக்க வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்த அந்தப் பதில், அதே ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் மன்னாருக்கு வந்து சேர்ந்தது.

மன்னாரிலிருந்த போர்த்துக்கேயத் தளபதி, இது பற்றி விசாரிக்கவென சுவான் து குறூஸ் சிறாங் என்பவனை நல்லூருக்கு அனுப்பி வைத்தான். அங்கு சென்று சேர்ந்த அவன், சங்கிலி குமாரனுக்கு எதிரான முதலியார்மார்களையும், அதிகாரிகளையும் ஒன்று திரட்டி அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டறிந்தான். அதன் பின் அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, சங்கிலி குமாரனிடம் சென்று, எதிர்மன்ன சிங்கன் இறக்கும் போது எழுதிய மரண சாசனத்தைத் தரும்படி கேட்டான்.

'அவ்வாறு எந்தச் சாசனமும் என்னிடம் இல்லை' என்று சங்கிலி குமாரன் மறுத்துரைத்தான்.

'நீ இவ்வாறு பொய் சொன்னால் எங்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும், எங்களது படை பலத்தைக்கொண்டு உன்னை அழித்து நாங்கள் விரும்புகிறவனுக்கு முடி சூட்டவும் நாங்கள் தயங்க மாட்டோம்' என்று குறூஸ் சிறாங் அவனை மிரட்டினான்.

அதைக் கேட்டுப் பயந்து போன சங்கிலி குமாரன், அரண்மனையில் ஏற்பட்ட கலவரத்தில், எதிர்மன்ன சிங்களின் மகன் இறந்து விட்டான் என்றும், அவனுக்குப் பதிலாக போர்த்துக்கேயர்கள் யாரை இளவரசனாகச் சிபார்சு செய்கிறார்களோ, அதைத் தான் ஏற்றுக் கொண்டு, அவனுக்குப் பரிபாலகனாக இருக்கச் சம்மதிக்கிறேன், என்றும் வாக்குக் கொடுத்தான்.

அதை ஏற்றுக் கொண்ட சிறாங், அங்கிருந்த முதலியார்களிடமும், அதிகாரிகளிடமும் 'யாரை இளவரசனாக்கலாம்' என்று ஆலோசனை கேட்டான்.

அவர்கள் போர்த்துக்கேயரால் முன்பு கொல்லப்பட்ட புவிராச பண்டாரத்தின் மகனும், அவர்களால் வளர்க்கப்பட்டு கிறிஸ்தவப் பெயர் சூட்டப்பட்ட வியூக்கு குமாரனுக்கே இளவரசுப் பட்டம் கட்டும்படி கூறினார்கள்.

அதற்குச் சம்மதித்த சிறாங், வியூக்கு குமாரனே இளவரசன் என்று ஏற்றுக்கொள்வதாக சங்கிலி குமாரனிடமும் எழுத்து மூல ஒப்புதல் பெற்றுக்கொண்டு மன்னாருக்குத் திரும்பினான்.

இதற்கிடையில் போர்த்துக்கேயரை எதிர்ப்பதற்கு தஞ்சாவூர் அரசனிடம் படை உதவி பெறுவதற்காக, யாழ்ப்பாணத்திற் கூடாக தமிழ்நாட்டிற்கு செல்வதற்கு வந்த சிங்கள சிற்றரசன் ஒருவனை சங்கிலி குமாரன் போகவிடாமல் தடுத்துத் திருப்பி அனுப்பி விட்டான்.

இதை அறிந்து பெரு மகிழ்ச்சி கொண்ட போத்துக்கேயரின் கோவா தேசாதிபதி, சங்கிலி குமாரனைப் பாராட்டி அவனை அரச பரிபாலகனாக தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும், சிங்கள அரசனை தமிழ் நாட்டிற்கு செல்ல விடாமல் தடுத்து திருப்பி அனுப்பியது போல் தமிழ்நாட்டிலிருந்தோ அல்லது இந்தியாவின் வேறு பாகங்களில் இருந்தோ தங்களின் அனுமதியில்லாமல் வரும் எவரையும், அவர்கள் யோகிகள்- யாத்திரிகர்களாக இருந்தாலும்கூட இலங்கைக்கு வர விடாமல் தடுத்து திருப்பி அனுப்பி விட வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினான்.



போர்த்துக்கேயரின் அங்கீகாரம் பெற்றதும் சங்கிலி குமாரனது நடவடிக்கைகள் சகிக்க முடியாத அளவுக்கு மக்கள் நவனுக்கு எதிராகச் செல்ல ஆரம்பித்தது பழையபடி மக்கள் கொந்தளிக்க ஆரம்பித்தனர். பல முதலியார்மாரும் அதிகாரிகளும் மக்கள் பக்கம் சேர்ந்து கொண்டு அவனை எதிர்க்கத் தொடங்கினர். போர்த்துக்கேயரிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாக சங்கிலி குமாரன் இரகசியமாக தன் மருமகனை அரசனாக்க முயற்சித்தான். இதனால் நல்லூர் அரச குமாரிகள் பலரும் அவன் மேல் அதிருப்தி கொண்டு மக்கள் பக்கம் சேர்ந்தனர். சங்கிலி குமாரன் அரச குடும்பப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளாமல் வேறு குலப் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருந்தது அவர்களது கோபத்தை இன்னும் அதிகமாக்கியது.

ஒரு நாள் நண்பகலில் ஆவேசம் கொண்ட மக்கள் ஆயுதபாணிகளாக அரண்மனைக்குள் பிரவேசித்து, இளவரசனான வியூக்கு குமாரனையும் அரச கேசரியைக் கொலை செய்த கொலைகாரனையும் தம்வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அவனோடு இருக்கும் தாசிப் பெண்களைத் துரத்திவிட்டு அரச குடும்பப் பெண் ஒருத்தியை அவன் திருமணம் செய்ய வேண்டும் என்றும் கோசமிட்டனர்.

அவர்கள் இருந்த ஆவேச நிலையைக் கண்டு பயந்து போன சங்கிலி குமாரன் அரண்மனையின் மேல் மாடத்துக்குச் சென்று கண்கள் குருடாக்கப்பட்ட நிலையில் இருந்த வீக்கு குமாரனை அங்கிருந்த சாளரத்தின் வழியாகத் தூக்கிக் காட்டினான். மக்கள் இளவரசர் வாழ்க என்று கோசமிட்டுக் கொண்டு அவனை நிலத்தில் விழுந்து வணங்கினர்.

இது இவ்வாறு இருக்க, அரச கேசரியைக் கொலை செய்த அமரக்கோன் முதலியாரையும் அவனது ஆட்களையும் தந்திரமாகப் பின் கதவால் தப்பிச் செல்லுவதற்கு சங்கிலி குமாரன் ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் இந்த ஏற்பாடு மக்களுக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் ஆவேசத்தோடு அரண்மனைக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து அமரக்கோன் முதலியாரைப் பிடித்துவிட்டார்கள். அவனது கழுத்தில் கயிற்றைப் போட்டு வீதி வீதியாக இழுத்துச் சென்றார்கள்.

சங்கிலி குமாரனுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தை அறிந்த போத்துக்கேயர்கள் இரு பகுதியினரையும், சமாதானப்படுத்துவதற்கென்று ஒரு தூதுவனை அங்கு அனுப்பி வைத்தார்கள். அவன் அங்கு சென்று இரு தரப்பாரையும் சந்தித்துப் பேசியும் எந்தப் பிரயோசனமும் ஏற்படவில்லை.

மக்கள் தொடர்ந்து கலகம் செய்தவண்ணமே இருந்தார்கள். ஏராளமான போர் வீரர்களும் மக்கள் பக்கம் சேர்ந்து விட்டதால் அரண்மனைக்கு உள்ளேயே சங்கிலி குமாரனுக்கு பாதுகாப்பு இல்லாமல்போய் விட்டது. பயந்துபோன அவன தனது மனைவிமாரை தஞ்சாவூர் அரசனிடம் சென்று படையுதவி கேட்டுவருமாறு அனுப்பி விட்டு, தான் ஊர்காவற்துறையில் இருந்த கிறிஸ்தவக் குருமார்களின் மடத்தில் சென்று தஞ்சமடைந்துகொண்டான்.

தஞ்சாவூருக்குச் சென்ற அவனது மனைவிமார் தஞ்சை அரசனிடம் போர்த்துக்கேயர்கள் தமக்குப் பல விதத்திலும் தொல்லையும் நெருக்கடிகளும் தருகிறார்கள் என்று சொல்லி அழுதார்கள். போர்த்துக்கேயரைத் துரத்துவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருந்த தஞ்சை அரசன், அவர்கள் நிலையைக் கண்டு இரங்கி தனது படைப் பிரிவு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

அவ்வாறு, தஞ்சாவூரில் இருந்து வந்த படைகளுடன் சங்கிலிகுமாரன் தலக்கு சார்பான படைகளுமாக 5000 பேர் கொண்ட ஒரு படையை 'வர்ணகுலத்தான்' என்பவனின் தலைமையில் திரட்டிக்கொண்டு நல்லூருக்குச் சென்று, தனக்கு எதிராகக் கலகத்தினைத் தூண்டிவிட்ட முதலியார்களினதும்- அதிகாரிகளினதும் தலைகளை வெட்டி அவர்களைக் கொன்று விட்டான். இதனால் பயந்துபோன மக்கள் கலகத்தைக் கைவிட்டு அடங்கிப்போயினர்.

ஆனால், மக்களின் கலகம் அடங்கிப்போய் விட்டாலும், அதை அடக்க அவன் தஞ்சாவூர்ப் படையை உதவிக்கு அழைத்தது போர்த்துக்கேயருக்கு அடக்க முடியாத கோபத்தை உண்டாக்கி விட்டது. அவன் வேஷம் போட்டு தங்களை ஏமாற்றி வருவதாக அவர்கள் நினைத்தார்கள். அதனால் அவனைத் தண்டிக்க வேண்டும் அல்லது ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்ற வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அவன் கண்டி அரசனுக்கு உதவி செய்கிறான், மூன்று வருடங்களாகத் திறை செலுத்தவில்லை, தங்களது கப்பல்களைச் சூறையாடும் முஸ்லிம் கடற்கொள்ளைக்காரன் ஒருவனுக்கு உதவி செய்கிறான் என்றெல்லாம் அவன் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்கள்.

இவற்றை விசாரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு பிலிப் டு ஒலிவேரா (PHILIP DE OLIVEIRA) என்பவனின் தலைமையில் ஒரு பெரும் படையை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தனர்.

(தொடரும்)

– நக்கீரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## சிறுகதை

# மௌனம் தலை காக்கும்

எத்தனை தடவை அப்பாவை உலுக்கிக் கேட்டாள், சொல்லிவிடுங்கள். 'உண்மை வெல்லும் என்று!' 'யாருக்குப் பயப்பட வேண்டும்?' அப்போதெல்லாம் அப்பாவின் மௌனம் அவளுக்கு எரிச்சலை, கோபத்தை மூட்டும்.

வெயில் சுட்டது. கண்களைத் திறக்கக் கூசியது. முழங்கால்கள் வலித்தன. நெருப்புத் தணலை உடல்மீது வீசியது போல எரிவு... 'எல்லாரும் ஐ.சியுடன் றௌவுண்டுக்கு வாங்கோ..!' என்று அவர்கள் சொல்லியதும் மக்களுடன் மக்களாய் கூடிய கூட்டத்தைப் பார்க்க அழுகை வந்தது. உதட்டைக் கடித்துக்

வாத்தியாரிட்ட வாங்கி நட்ட பூச் செடிகள்... கொத்தி எருப்போட்டு, அடிக்கடி கை வலிக்க தண்ணீர் அள்ளி ஊற்றி வளர்த்தவருக்குத்தானே தெரியும் வேதனை.

ஐ.சி யைப் பார்த்தபடி அவளையே முறைத்தபடி நின்றவனைப் பார்த்து உமிழ்ந்து துப்ப வேண்டும் போலிருந்தது. விழுங்கிக் கொண்டாள். தூரமாய் முகமூடி அணிந்தபடி ஒருவன் அவர்கள் காட்டுபவர்களைப் பார்த்து ஆம் அல்லது இல்லையென தலையாட்டியபடி வந்தான். அவனும் ஒரு தமிழ்த் தாய்க்குப் பிறந்திருப்பான். தமிழர் விடுதலை என போராட்டத்திற்கு முன்வந்திருப்பான்.இப்போது துரோகியாகிப் போனான்.

'காக்கை வன்னியன் இன்னும் சாகவில்லை' யாரோ முணுமுணுப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தாள். பழகிய முகமாய் இல்லை... சிரித்தால் அவர்கள் துன்புறுத்தல் அதிகமாகலாம். யாருடனும் சிநேகமாகக சிரிக்க

அடிப்பிடிச்சுப் போயிருக்கும்... எம் வாழ்க்கையைப் போல.

சுதனின் ஞாபகம் வந்தது.நல்ல நண்பனாக, நல்ல ஆசிரியனாக இருந்தான். டியூட்டரி வீடு என இருந்தவன். ஊரில் அப்பாவி என்று சொன்னால் அது சுதனாகத்தான் இருக்க முடியும். வேலை விடயமாக தாண்டிக்குளம் தாண்டி கொழும்பு போக முயற்சிக்கையில் கைது செய்யப்பட்டான். புலி என சந்தேகிக்கப்பட்டு சுட்டு வீதியில் எறியப்பட்டிருந்தான். உடல் காகத்திற்கு பரிசாகக் கிடைத்தது. உடைந்து உட்கார்ந்தவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, விழிகள் பொழிந்தன. 'நல்ல வேலை கிடைக்கட்டும் திருமணம் செய்து கொள்கிறேன்' வலது கரத்தைப் பார்த்தாள். கையிலடித்து சத்தியம் செய்து புறப்பட்டவனின் மரணச் செய்தி மட்டும் காற்றில் வந்தது.

சாகடிக்கப்படுகிறார்கள்? 58 இலிருந்து அடிவாங்கி, செத்து காயப்பட்டு ஏமாற்றப்பட்டுப் போன தமிழினத்தின் சாபம், அதன் வேக்காடுதானே ஒவ்வொரு ராணுவத்தினரையும் சாகடிக்கிறது. எத்தனை அப்பாவி இளைஞர்கள் தமிழன் என்பதால் அவமானப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்? எத்தனை யுவதிகள் இராணுவத்தினரிடம் தங்களை இழந்திருக்கிறார்கள்? எத்தனை தாய்கள்..? தந்தைகள்...? பிறகு உங்கள் பாஷையில் அவர்கள் பயங்கரவாதிகள். புலிகள்... சொல்ல நினைத்தார்.

'மௌனம் தலைகாக்கும்' மௌனமாய் நடந்தவர் ஊர் வரைக்கும் வாய் திறக்கவே இல்லை. பணம் பெறவும் முடியவில்லை.

இடிக்கேக்கை தண்டனை குடுக்க மாட்டுதாம். தெய்வமும் வலிமை இழந்ததோ? முகமிழந்து போதல்தான் தமிழனின் தலைவிதியோ? நாங்களும் மனிதர்கள்தானே' கேட்க நினைத்தாள். அப்பாவின் முகம் வந்து தடுத்தது. 'வாய்க்கு வாய் காட்டாதை, தண்டனை கூடக் கிடைக்கும். நட்டாய் இராதை... பட்டும் படாமலும் வாழப்பார். எங்கட தலையெழுத்து எனப் பேசாமல்கொண்டிரு'.

'அப்பா! உங்களால் முடிந்திருக்கிறது. இழப்பதற்கு எதுவுமே இல்லை

என்ற நிலையில். உங்கள் முடிவு இதுவாகத் தானிருக்கும். எனக்கு வாழ வேண்டும் என்ற வைராக்கியம் முக்கியம், எங்களிடம் ஒற்றுமை வந்துவிட்டால் இவங்கள் தூசுக்குச் சமம் என்ற வீராப்பு முக்கியம்'

சந்தி வெளியில் அனாதைப் பிணமாய் கிடந்த நாதன், பலாத்காரப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட மாலா. தற்கொலை எனத் தீர்ப்பளித்த நீதிமன்றம்... நெஞ்சு வலித்தது. பேச என்று மனம் துடித்தது. 'பேசத் தெரிந்த உனக்கு ஆயுத பாஷை ஏன் புரியவில்லை?' சோதியா டியூசன் கிளாசில் சொன்னாள், இப்போது அவளும் இல்லை. தலையாட்டியின் தலையாட்டலில் நிறையப்பேர் இராணுவ வண்டிகளில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். தன் முன்னாலும் தலையாட்டி வருவான். தலையாட்டுவான். இராணுவக் கரங்கள் கைகளை இறுக்கும், இழுத்து வண்டியில் வீசுவார்கள். மோதி மூலையில் வீழ்ந்து, தலையில் காயப்பட்டு, குருதி வடியும். அப்பா தலையிலடித்து அழுவார். மகள் சிதைந்து போனது கேட்டு தற்கொலை செய்து கொள்ளலாம். அப்பாவைப் பார்த்தாள். தூரத்தில் நின்றிருந்தார் மௌனமாக. உதடு காய்ந்திருந்தது. அவரின் விழிகள் நிறையப் பேசியதை உணர முடிந்தது அவளால்...

கைது செய்யலாம், வன்முறைக்கு ஆளாக்கலாம், விடுதலை செய்யப்படலாம், இல்லையெனில் உயிருடன் ரயர் போட்டுக் கொழுத்தப்படலாம், அதுவும் இல்லையெனில் தெருவில் வைத்தே சுட்டுக் கொல்லப்படலாம்... துப்பாக்கி முனை நெஞ்சில் அழுத்த பூமிக்கு வந்தாள். தலையாட்டியும் அவர்களுடன் நின்றிருந்தான்.

"தலையாட்டாதே... பிளீஸ்! என்னை உன் தங்கை என நினைத்து விட்டு... இந்த இராணுவத்துக்குத் துணை போகாதே 'நீயும் தமிழன் எனில்'... மண்ணை விற்காதே" விழிகள் தலையாட்டியின் விழிகளைப் பார்த்துக் கெஞ்சின. ஓங்கிக் குத்த வேண்டும் என்றும் ஒரு கணம் நினைத்தாள்.

'மௌனம் தலை காக்கும்' அப்பா சொல்வது கேட்டது. 'நடப்பது நடக்கட்டும்' கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள். கண்ணீர் சூடாய் இறங்கியது.

'உவங்கள் இப்பிடி எங்களை அடிச்சுச் சாக்காட்டிறதைப் பார்த்தால் தமிழினமே இருக்காது போல' பாக்கியக்கா அடிக்கடி சொல்லுவா. அண்மையில்தான்




கொண்டாள். உள்ளத்தினுள் எரிமலை எழுந்து மடிந்தது. 'ரவுண்ட் அப்' என்று எத்தனை தடவை சுற்றிவளைப்பு நடக்குது. மக்களுக்கான போராட்டம், மக்களை விடுவிப்பதற்கான போராட்டம்... வானொலி, பத்திரிகை முழங்குகிறது. மாறாக வதைபடுவது மக்களல்லவா?

'புன்னகை கூட மறுதலிக்கப்படுகிறது இங்கு... வானம் கருக்கட்டினாலும் மழை வரவேண்டும் என்பதில்லை, வராமலும் போகலாம். வாக்குறுதிகள் தரப்படும், மறுதலிக்கலாம்.....'

நடு வெயிலில் முழங்காலில் உட்கார வைத்துவிட்டு அடையாள அட்டையைத் தரும்படி கேட்டவனிடம் 'நேற்றும் உன்னிடம் தானே காட்டினேன், ஞாபகம் இல்லையா?' என்று கேட்கவேண்டும் போலிருந்தது. முழங்கால் வலித்தது சுள் சுள்ளென்று...

போன வாரம்கூட வீட்டிற்கு வந்து ஆசையாய் வளர்த்த ரோஜாச் செடிகளை, பூத்திருந்த செவ்வந்திப் பூக்களை அழித்து, 'ஆயுதம் தேடுகிறோம்' என்றபடி... கோழிக் கூட்டையும் பிரித்து.., ஏமாற்றத்துடன்... படுத்திருந்த நாய்க்கும் தலையில் துவக்குப் பிடியால் அடித்துவிட்டு வெளியேறினர். 'புலி வந்தால் மெசேஜ் தர வேணும்' கடைசியாக வெளியேறியவன் சொன்னான். பார்ப்பதற்கு வயது அதிகம் இல்லை என்றாலும் பயங்கரமானவனாகத் தெரிந்தான். 'ம்..' உள்ளுக்குள் குமைந்தாள்.

வாலைச் சுருட்டி கால்களுக்குள் புதைத்தபடி கத்திக் கத்தி ஓடிய நாயை பரிதாபமாகப் பார்த்தாள். அது ஓடிப் போய் கோழிக் கூடிருந்த பக்கம் கொட்டியிருந்த சாம்பலுக்குள் தன்னைக் கிடத்திப் புரண்டது. பூக்கள் சிதறி... பூட்ஸ் கால்களில் மிதிபட்டிருந்த பூச் செடிகள்... ஆசையாக போன மாரியில் கலைச்சோலை

முடியவில்லை. அழுத்துக் கொண்டாள். அருகிலிருந்தவளும் உள்ளூர என்ன நினைத்தாளோ பயத்துடன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள். பதினைந்து வயதிருக்கலாம். இரட்டைப் பின்னல் பின்னி சுற்றி கறுத்த ரிபன் கட்டியிருந்தாள். நெற்றியில் இலைவடிவ பொட்டு இட்டிருந்தாள்.

தூரமாய் ஒரு பெண்ணை ஜீப்பில் ஏற்றிக்கொண்டிருந்தனர். 'யார் அவள்?' 'யார் பெற்ற பெண்?' மனது அடித்துக் கொண்டது. புலி என சந்தேகித்துக் கைது செய்யப்பட்டிருக்கலாம். 'பாவம் அந்தப் பெண் குயில் குரல் இழப்பாள்... சிறகு உதிர்வாள்... மயிர் நீர்ப்பின் உயிர் வாழாக் கவரிமான் ஆவாள் அல்லது சைனட் குப்பி அருப்பாள் இதுதானே நடைமுறை.வெயில் இன்னமும் சுட்டது. அடுப்பில் வைத்த உலைத் தண்ணீர் வற்றி

அப்பா கூடப் புகையிலை கட்டி கொழும்பு போய் வந்தவர்தான். வழமையாக வாங்கும் சிங்கள் வியாபாரியால் நையப் புடைத்து அனுப்பப்பட்டபோதுதான் பொறுமை இழந்தார். 'நீயெல்லாம் புலிக்கு காசு குடுக்கிறதா?' 'இல்லை.' 'பொய் சொல்லுறது, எங்கட காசு எடுத்து அங்க குடுக்கிறது' முதலாளி சத்தம் போட்டான்.

'கஸ்டப்பட்டுப் பயிர் வளர்த்து அதைப் பதப்படுத்தி அதிக கூலி கொடுத்து இங்க வந்து குறைந்த லாபத்திற்குத் தருகிறோம். இப்படி சிறுகச் சிறுகச் சேர்த்துத்தான் எங்கட பிள்ளையளை வளர்க்க வேண்டியிருக்குது. குமருகளைக் கரைசேர்க்க வேண்டியிருக்குது' அப்பா அழுதே விட்டார்.

'இப்பகூட உங்களப் பொலிசில பிடிச்சுக் குடுப்பம் தெரியுமா? எங்கட ஆமியை அங்க கொல்லுறீங்க' அவனின் கண்கள் சிவந்திருந்தன. அவனிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியுமா? இராணுவம் ஏன் சாகிறது? ஏன்

தன் மகனை போராளியாய் இழந்தாள். மனுஷிக்கு என்ன நெஞ்சழுத்தம். மகன் இழந்த கவலை சிறிதும் முகத்தில் தெரியாது. மகளும் இயக்கத்துக்குப் போட்டுது. மனம் பொறுக்காது ஒருநாள் கேட்டேவிட்டாள்.

'என்ன பிள்ளை செய்யிறது, ஒரு பக்கத்தால கடலாலை அடிக்கிறான், ஷெல்லால அடிக்கின்றான், ஹெலியால அடிக்கிறான், கொழும்புக்குப் போனால் பிடிக்கிறான், அரிசி காய்கறி வாங்க வழியில்லை. உயிர் வாழ்ந்து என்னத்துக்கு? 83 கலவரத்திலை மனுசனை இழந்திட்டன். போன முறைகூட கறண்ட் பிடிக்க கொழும்புக்குப் போகேக்கை ஆரோ சொல்லிப்போட்டினம். ஆமி பிடிச்சு என்னை நல்லா வாங்கிவிட்டுத்தான் விட்டுது 'குழி விழுந்த கண்கள் குளமாகி விட்டிருந்தன. இழப்புக்கள்தான் எத்தனை? மருதடிப் பிள்ளையார் பொறுமையிழந்து திரும்பியிருந்ததாம். ஏன் இப்ப உவங்கள் கோயிலை

**முல்லை அமுதன்**

# சினிமா என்பது பணக்காரனின் ஆயுதம்

## - மணிவண்ணன் -

**(அண்மையில் 'நந்தன் கதை' என்ற நாடகம் தஞ்சையில் நடைபெற்றது. 'தமிழர் கண்ணோட்டம்' என்ற இதழின் வளர்ச்சி நிதிக்காக நடைபெற்ற அந் நிகழ்வில், தமிழ்ச் சினிமா இயக்குனர் திரு. மணிவண்ணன் ஆற்றிய உரையின் சுருக்கம் இது)**

எனக்கு இந்த மேடையில் ஏறத் தகுதியும் உரிமையும் உள்ளது. ஏனெனில் எந்த ஒரு கலைஞனோ, படைப்பாளியோ யார் என இனங்காண்பது அவசியமாக உள்ளது. அதற்கு என்ன வழி? எண்ணையாக இருந்தால் லீட்டர் கணக்கை பார்க்கலாம். சர்க்கரையைக் கிலோவாகப் பார்க்கலாம். ஆனால் கலைஞனை அவன் எங்கிருந்து யாருக்காக, என்ன பேசுகிறான் என்பதைப் பொறுத்தே அடையாளம்காண முடியும். நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன். இரண்டாயிரம் ஆண்டு காலமாக, கலாச்சாரம் மறுக்கப்பட்டு, உடலுழைப்பைத் தவிர வேறெந்த உரிமையும் மறுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன். ஆகவே, ஒரு உழைப்பாளியின் குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதே எனக்கு சகல உரிமைகளையும் கொடுத்திருக்கிறது.

அதேபோல் உழைப்பாளிகளுக்காக சிந்திக்கிறவன் என்பதால் எனக்கு கூடுதல் தகுதி இருப்பதாகக் கருதுகிறேன். சினிமாக்காரனாக எனக்கு நிறைய பணம் கொடுக்கிறார்கள். ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. உலகின் மிகச் சிறந்த கவிஞனாக நான் மதிப்பவர் பாப்லோ நெருடா. அவர் உலகின் மகத்தான விருதுகளைப் பெற்றிருக்கிறார். ஒரு முறை அவரிடம், 'நீங்கள் பெற்ற விருதுகளிலேயே உயர்ந்ததாய் எதைக் கருதுகிறீர்கள்?' எனக் கேட்டபோது 'சிலியின்' செம்புச் சுரங்கங்களுக்கு நான் போகும்போது சுரங்கங்களில் உடல் மெலிந்து, அழுக்கேறிப் போன முகங்களோடு வெளியே வரும் தொழிலாளத் தோழர்கள் என்னை நோக்கி நெருடா அவர்களே உங்களை எமக்குத் தெரியும் என்பதுபோல் கை குலுக்குவார்கள். அந்தக் கை குலுக்கும் கண நேரம்தான் தான் பெற்ற விருதுகளில் மகத்தானது. ஏனெனில் நான் மக்களின் கவிஞன். மக்களுக்காகப் பாடுபவன் என்றார்.

கலை என்பது ஒரு மகத்தான ஆயுதம். 20 வருடங்களுக்கு முன் இருந்த கம்யூனிஸ்ட்களின் நடைமுறை மாறிவிட்டது. இப்போதுதான் மக்களை அவர்கள் நெருங்க ஆரம்பித்துள்ளார்கள். ஆகவே அவர்களை நோக்கி மக்களும் செல்கிறார்கள். முன்பு கம்யூனிஸ்ட் மேடைகள் கணக்குத் தீர்ப்பவையாக இருக்கும். வேறு நாடுகள் பற்றிப் பேசுவார்கள். நம் பிரச்சனைகள் குறித்துப் பேசாததால் இவர்கள் வெளிநாட்டு ஆசாமிகள் என்பதுபோல் இருந்தது. மக்கள் மிகவும் ரசனையாளர்கள். மனிதன் எல்லா உணர்வுகளும் உடையவன். இசை, பாட்டு எல்லாம் அவன் உணர்வோடு கலந்தது. கம்யூனிஸ்ட்கள் இப்போதுதான் இதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நிச்சயம் வெல்வார்கள் என்று நம்புகிறேன்.

சினிமா என்பது ஒடுக்குபவனின், பணக்காரனின் ஆயுதம். இதுவரை நாம் நம்பி வந்த ஒழுக்கங்கள் நமக்கானவை அல்ல. நம்மை ஒடுக்குவதற்காக எழுதப்பட்டவை. அவற்றை இன்று வரை காத்துவரும் ஆயுதமே சினிமா. இந்த இராணுவத்துக்குள் என்னைப்போல சிலர் நுழைந்திருக்கிறோம். நுழைவதே பெரிய விசயம். டாங்கிகள், பீரங்கிகள், ராடர்கள் எல்லாம் இருக்கும்போது ஒரு வீரம் மிக்க கெரில்லா வீரன் உள்ளே நுழைந்து ஒரு பத்து இருபது பேர்களைக் கொன்றுவிட முடியும். அதுபோல் நிராயுதபாணிகளாக நாங்கள் நுழைந்திருக்கின்றோம்.

நாடகம் என்பது ஒரு அற்புதமான சாதனம். சினிமாக்காரனுக்கு எந்தச் சிக்கலும் இல்லை. ஏனெனில், படமெடுத்ததும் எங்கள் வேலை முடிந்துவிடும். ஆனால் நாடகம் என்பது படைப்பாளனை நேரடியாகப் பாதிப்பது. அவன் மக்களை நேரடியாகச் சந்திக்க வேண்டும். நாடகம் என்பது ஒரு மொழி. மக்களுக்கு நாடகம் என்கிற மொழியில் கருத்தைச் சொல்வது ஒரு அற்புதமான விஷயம். நாடகப் பாத்திரங்கள் எந்தத் தவறு செய்தாலும் பார்வையாளர்கள் சத்தம் போட்டு விடுவார்கள். இதுபோன்ற சபையில்தான் மக்களை உணர்ச்சிகரமாக எழுப்ப முடியும். சினிமாவோ நாடகமோ இரண்டிலும் மக்களைச் சீக்கிரமாகச் சென்றடைய முக்கியமானதாக உரையாடல் உள்ளது.

வாழ்க்கை என்பதே உரையாடலை அடிப்படையாகக் கொண்டது. லௌகீக வாழ்க்கையில் முதலாளி ஒரு மொழியில் பேசுகிறார். கூலிவாங்கும் தொழிலாளி ஒரு மொழியில் பேசுகிறார். கணவனிடம் மனைவி ஒரு மொழியில் பேசுகிறாள். எல்லோரும் சுதந்திரமாகப் பேசுவதுபோல் தெரிந்தாலும் ஒவ்வொரு உரையாடல் முறையிலும் கண்ணுக்குத் தெரியாத விலங்கு உள்ளது. அந்த விலங்கே சமூகத்தில் அவரவன் நிலமை. உதாரணமாக நான் வழக்கறிஞராக நினைத்தேன். என் தந்தை இன்ஸ்பெக்டர் ஆக்க நினைத்தார். இங்கே என் விருப்பத்தை தந்தையின் விருப்பம் மறைக்க வைத்தது. என் விருப்பத்தை வெளியில் மறைத்தாலும் உள்ளுக்குள்ளே நான் 'நாசமாகப் போக இவருக்கு நான் மகனாகப் பிறந்தேனே' என்று குமுறினேன். அதேபோல், திருமணத்திலும் விருப்பம் இல்லாத பெண்ணோடு ஆணோ, ஆணோடு பெண்ணோ வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்கள் உள்ளத்திலும் தன்னை நிர்ப்பந்திக்கும் சக்திகள் மீது வெறுப்பு எரியும்.

சமூகத்தின் இந்த உரையாடலில் அடக்குபவன் அடக்குவது போலும், அடக்கப்படுபவன் அடங்கியது போலவும் உரையாடுகிறார்கள். ஒடுக்கப்படும் ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒரு கலகக்காரன் இருக்கிறான். அவன் தன்னை அடக்குபவனை ஒழிக்க வேளை பார்த்துக்கொண்டிருப்பான்.

எனவே, ஒவ்வொரு பாட்டாளியும் பணிவான கலகக்காரன்.

கலைஞர்களாகிய நம் கடமை என்னவெனில், உறங்கிக்கொண்டிருக்கும் கலகக்காரனை உசுப்பி விடுவதே. அப்படிச் செய்தால் காலம் சமுதாயம் எல்லாம் மாறிவிடும்.

இன்று தமிழர் கண்ணோட்டம் என்ற பத்திரிகை மட்டுமல்ல தமிழனுடைய கண்ணோட்டமே வளர வேண்டும்.



ஏனெனில், நாம் கடைப்பிடிப்பது ஆரியக் கண்ணோட்டம். அரசியல், சட்டம், நீதி, நிர்வாகம் எல்லாம் ஆங்கிலேயக் கண்ணோட்டம். நமக்கான கண்ணோட்டம் மேற்கூறியவற்றின் காலடியில் கிடக்கிறது. மிதிபட்டுச் சாகுமுன் அதைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. நம் சமூகத்தின் மோசமான அம்சங்களை விலக்கி விட்டு புதிய சமூகம் படைப்பது ஒவ்வொரு பொதுவுடமைச் சிந்தனையாளர்களினதும் கடமை. அதை நிறைவேற்றினால்தான் நாளைய சமூகம் நல்ல சமூகமாயிருக்கும்.

*கலைஞர்களாகிய நம் கடமை என்னவெனில், உறங்கிக் கொண்டிருக்கும் கலகக்காரனை உசுப்பி விடுவதே. அப்படிச் செய்தால் காலம் சமுதாயம் எல்லாம் மாறிவிடும்.*

*தவிர்க்க முடியாத காரணங்களால் ஜமுனா ராஜேந்திரனின் கட்டுரையின் மூன்றாம் பகுதி இல்வாரம் வெளியாகவில்லை. அடுத்த வாரம் நிச்சயம் தொடரும். வாசகர்கள் மன்னிக்கவும்.*
*நன்றி (ஆ.ர்.)*



# சிக்கல் நாளில் வலி தீருதல்

*குப்பி விளக்கென்றாலும்*
*லிடிவிளக்கொன்று*
*இனி எப்போ தெரியும்*
*என் வீட்டில்?*
*பாலாய் ஒளியூற்றிச் சுடரும்*
*மின் குமிழ்கள்*
*இனி என்று ஒளிபரப்பும் எனது வீதிகளில்?*
*சிறு தளிர்களும் பூக்களும் சேர்ந்த*
*காற்றென்று வரும் என் சுவாசத்துக்கு?*
*கந்தக நெடில் பரவி*
*குமட்டல் எழும் இந்த இரவும்,*
*துயிலமறுத்து விழித்திருக்கவே*
*எச்சரிக்கும் மனமும் இன்னும்*
*எத்தனை நாளில் தொலைந்து போகும்?*

*விழித்திருக்கையிலும்*
*விசமேறிய கனவுகள்*
*என் நம்பிக்கைகளைத் தின்னுகின்றன;*
*நடுங்குகின்ற காற்றில்*
*துர்நாற்றம் வீசி என் சரீரம் எரிகிறது*
*எப்போதும் இரவுகளில்*
*திடீர் திடீரென*
*அவசரமாகப் பிள்ளையைத்*
*தொட்டுப்பார்த்து*
*அவதியுறும் துயர்*
*ஐந்து வயதுக் குழந்தையின் நாளைப்*
*பற்றியது;*
*அவனது எதிர்காலம்*
*என்னவென்று நிச்சயிக்க முடியாதுள்ளது.*
*அவனைப் பற்றிய திட்டங்களை*
*நினைக்கவே தடுமாற்றமாயுள்ளது.*

*எல்லாக் கேள்விகளுமே*
*பின்னலிடுகின்றன*
*எல்லாவற்றையும் விட சிக்கலானதாக*
*விமானங்கள் பயணிகளையும்*
*ஏற்றிச் செல்லுமென்று*
*குழந்தைக்கு எப்படி*
*நம்பிக்கை கொள்ள வைப்பதென்று*
*புரியவில்லை எனக்கு,*
*முகம் வெடித்த மனிதனாக*
*எனது பிம்பம்*
*என்னைக் காட்டுகிறது.*
*இப்படி வாழுதல் என்பதும், மரணம்*
*என்பதும்*
*நள்ளிராப் பொழுதில்*
*வழியற்றிருக்கையில்*
*காட்டெருமை துரத்துவதைப்போல*
*தெரிகின்றன.*

*எனது அயலில்*
*காற்றில் உயிர்க்கும் நம்பிக்கைகள் பெற்ற*
*அற்புத மனிதர் போல*
*போராளிகள் செல்கிறார்கள்.*
*நின்று, பேசி, விடைபெற்று*
*வழி நெடுக புன்னகை மலர்த்தி*
*நம்பிக்கை மனிதர் சொல்கிறார்.*
*எத்தனை தளிர்ப்புடன்*
*எனது பிள்ளை*
*அவர்கள் கைபற்றிப் பூக்கிறான்*
*முகம் வெடித்த மனிதனாக.*
*எனது பிம்பம்*
*என்னைக் காட்டுகிறது.*

*சிக்கல் நாளின் வலிகள் தீர*
*நம்பிக்கை மனிதர் கைகள் பற்றி*
*நடத்தல் வேண்டும் என்று துருதுருக்கிறது*
*வாழ்க்கையின் அழைப்பு*

- கருணாகரன்

# கிழிஞ்சதுணியில நாங்கள் உடைபோட்டால் முக்காப்பலாவெண்டு நீங்கள் எடைபோட்டால்..?

## ஆருக்குச் சொல்லி அழ?

போன கிழமை ஒரு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம்போல உதிலை லாச்சப்பலுக்கு ஒருக்கால் போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டன். எத்திவளை வழியாலை செய்தியள் அறிஞ்சாலும் ஞாயிற்றுக் கிழமையெண்டால் ஒருக்கால் கொழும்புப் பேப்பருகள் பார்க்காட்டில் எனக்குப் பொச்சம் தீராது கண்டியளோ. ஒவ்வொரு கிழமையும் சிறீலங்காவின்ரை அரசியல் விண்ணாணங்கள் என்னவெண்டு அறியாட்டில் எனக்கு தண்ணிவிடாய் தீராதமாதிரி- உங்களிலை சிலபேருக்கு ஈழமுரசில இந்தப் பக்கம் வராட்டில் சப்பெண்டு இருக்கிறமாதிரி எண்டு வையுங்கோவன்.

லாச்சப்பல் சந்தியில் நிண்ட ஒருத்தர், எனக்கு நல்லாத் தெரிஞ்சவர் தான். நல்லா வெத்திலை போட்டு சொண்டெல்லாம் சிவத்துப்போய் ஆடு படுத்திருந்து இரை மீட்ட மாதிரி நிண்டுகொண்டு அசைபோட்டுக் கொண்டிருந்தார். ஆள் நிண்ட இடத்தைச் சுத்தி ஒரே வெத்திலைக் காவி. றோட்டுக் கழுவிறவன் என்ன பாவம் செய்தானோ!

பங்காளை ஒரு எப்பன் தள்ளி நார்லைஞ்சு விடலைப் பொடியள். காதில வோக்மனும், ஒரு பெரிய கட்டைக் காற்சட்டையுமா, அதுவும் வெறிநாய் கடிச்சுக் குதறினமாதிரி கந்தல் கந்தலாய் கிழிஞ்சு தொங்கினபடி... அங்கலாவணியங்கள் சொட்டையனை சொல்லி ஏன் நேரத்தை மினக்கெடுத்துவான்? இதுவும் ஒரு வகை முக்காப்லா என்டுசொல்லுங்கோவன்.

அதில ஒருத்தர் காதிலை வோக்மனை மாட்டிக்கொண்டு,

**"அக்கடான்னு நாங்க உடைபோட்டா துக்கடான்னு நீங்க எடைபோட்டா தடா..! அதுக்குத் தடா..!"**

என்டு பாடிக்கொண்டு காக்காய் வலிப்பு வந்து கையைக் காலை உதறினமாதிரித் துவங்கி, உருப்பத்தி திரும்பத் திரும்ப அந்த அடியையே வாலாயம் பண்ணிக்கொண்டிருந்தார். எனக்கு உடனடியா ஒண்டும் விளங்கேல்லை, எல்லுப்போல யோசிச்சாப்பிறகுதான் விஷயம் பிடிபட்டுது. எனக்கு கொஞ்சம் தூரப் பார்வை குறைவு. அதாலை நான் கண்ணை இடுக்கி இடுக்கி உத்துப் பார்த்ததைப் பெடியன் கண்டிட்டான். அவரின்ரை அந்தக் கம்பீரக் கோலத்தை நாகரீகம் தெரியாத நான் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரிப் பார்க்கிறன் எண்டுதான் உப்பிடிப் படிச்சிருக்கிறார். இந்த நாளையப் பெடியள் வலு கழியனுகள், எதையும் சூசகமாய்ச் சொல்லிப்போடுவாங்கள் கண்டியளோ! நல்லாலம், **கிழிஞ்ச துணியில் நாங்கள் உடைபோட்டால், முக்காப்பலாவெண்டு நீங்கள் எடைபோட்டால் தடா - அதுக்குகத் தடா** என்டு படிக்காமல் விட்டாங்கள்!

அப்பத்தான், எதிரில இருந்த வீடியோக் கடையுக்கை இருந்து "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?"

என்டு இருந்தாப் போல பெரிய சத்தத்தோடை பாரதியார் பாட்டுக் கேட்டுது. (என்னது... ஆர் பாரதியாரோ...? போச்சடா... அடியேன் தெண்டனிடுகிறன் சாமி! அறியாமல் சொல்லிப் போட்டன். மன்னிக்க வேணும். அது கப்பலோட்டிய

> இவங்கள் என்னடாவெண்டால் உடுப்புப் போடுறதைப் பற்றிக் கதைச்சாலே 'தடா' எண்டு வெருட்டுறாங்கள். வீடியோக் கடைகாரர் என்னெடாவெண்டால் 'சுதந்திர தாகத்தோட' நிக்கிறார். சபாஷ்...! சரியான போட்டி!

தமிழனிலை திருச்சி லோகநாதன் பாடின பாட்டு)

வெத்திலை போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தவர் இரண்டு விரலை சொண்டிலை குறுக்கா வைச்சு, 'புளிச்.' எண்டு துப்பினார். வெத்திலைத் துப்பல் பக்கத்தில நிண்ட வெள்ளைக் காரிலை பட்டு கோவில் சுவருக்கு காவிக் கலர் அடிச்ச மாதிரித் தெரிஞ்சது. சீமான் அதைப்பற்றிக் கவலைப் பட்டதாத் தெரியேல்லை.

"என்ன... அங்காலையும் இஞ்சாலையும் பாட்டுக்குப் பாட்டு நடக்குதுபோல இருக்குது. இவங்கள் என்னடாவெண்டால் உடுப்புப் போடுறதைப் பற்றிக் கதைச்சாலே 'தடா' என்டு வெருட்டுறாங்கள். வீடியோக் கடைகாரர் என்னெடாவெண்டால் 'சுதந்திர தாகத்தோட' நிக்கிறார். சபாஷ்..! சரியான போட்டி!" எண்டார்.

சிலபேருக்கு வேற வேலைவெட்டி ஒண்டும் இல்லை. ஆருக்கு கொம்பு சீவி, கொடுக்குக் கட்டி விடலாமெண்டு அலையுங்கள். பேந்தும ஒருக்கால் வெத்திலைத் துப்பலை றோட்டிலை துப்பினார். றோட்டுக் கழுவிறவன் தன்ரை பாஷையில பேசிப் பேசி பிளாஸ்ரிக் ஈக்குத் தடியாலை உரைஞ்சிக் கழுவிப்போட்டுப் போனான்.

எங்கடை சனம் சிலதுக்கு எங்கை என்ன செய்ய வேணும், எதை எப்பிடிச் செய்ய வேணுமெண்டு கொஞ்சம்கூட விவஸ்த்தை இருக்கிறதில்லை. எல்லாரும் பாவிக்கிற பொதுச் சொத்துக்களை சிதன முதுசமாத்தான் நினைக்கிறது.

சுவிசில, இத்தாலி போடருக்குக் கிட்ட இரண்டு தீவுகள் இருக்குது. அதிலை பிறிசாகோ எண்ட தீவுதான் கொஞ்சம் பெரிய தீவு. தீவெண்டால் கம்மா முருகைக் கல்லு விளையிற காரைநகர் தீவில்லை. ஒரு பெரிய புள்ளியான ஜேர்மன் காரனுக்குச் சொந்தமா இருந்த அந்தத் தீவை, சுவிஸ் நாட்டுப் பள்ளிப் பிள்ளையள் எல்லாம் சேர்ந்து நிதி திரட்டி வாங்கினவையாம். அந்தத் தீவிலை எல்லா நாட்டிலை இருந்தும் செடி கொடியளைக் கொண்டுவந்து நட்டுப் பாதுகாத்து வைச்சிருக்கினம். அந்த தாவரவியல் பூங்காவுக்கு எக்கச்சக்கமான ருறிஸ்ருகள் போய்வாறது வழக்கம்.

வடிவான இடமெண்டால் எங்கடை சனமும் விடாயினம்தானே, இயற்கையிலை அவ்வளவு காதல், அதாலை கமெராவையும் மாட்டிக்கொண்டு கட்டாயம் கிளம்பிவிடுவினம்.

போனால், போன இடத்துக்கு ஏதாவது ஞாபகச் சின்னம் வேணும்தானே. அனேகமானவை வீடியோவிலை படம்பிடிக்கத் தெரியுதோ இல்லையோ வீடியோக் கமராவோடைதான் போவினம். அதிலையும் புதிசாக் கலியாணமானவை எண்டால், ஓடிப் பிடிச்சு, ஆளை ஆள் துரத்தி புல்லுகள், பூக்கண்டுகளுக்கு மேலை எல்லாம் உழக்கிவடிச்சு படமெடுப்பினம். பிறகு ஒரு டூயட் பாட்டுக்கு ஏத்த விதத்திலை எடிட் பண்ணி தலைவேறை கால் வேறையா ஓட்டி தங்கடை கலை ரசனையை தாங்களே பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருப்பினம் (வாழ்க தமிழ்ச் சினிமா..!) கலியாணமான புதிசில கடல், மலை, மரஞ் செடி கொடியள் எல்லாம் வலு ரம்மியமாத்தான் தெரியும். பிறகு பிள்ளையள் பிறந்திட்டால் எந்த நேரமும் மூக்கால சளி ஊத்திக் கொண்டு, அதுகள் செய்யிற அழிச்சாட்டியம் தாங்கேலாமல் திட்டி, புறுபுறுக்கத்தான் அவைக்கு ஆயுள் சரியாயிருக்கும் எண்டது வேற விஷயம்.

சரி- கடல் தாண்டி அந்தத் தீவுக்குப போறவை படத்தோடை மட்டும் திரும்பினால் அந்த ஞாபகச் சின்னம் அவையோட மட்டும்தானே இருக்கும் எண்டதாலை, எல்லாருக்கும் தெரியக் கூடியதாய் கல்வெட்டுகள் பொறிச்சு வைச்சிட்டும் வருகினம். கல்வெட்டு எண்டது தமிழன் கலாச்சாரத்தோட ஊறின பழக்கமெல்லே. அந்த நாளையில சேர, சோழ, பாண்டியர்மார் இருந்ததையும், ஆண்டதையும், அடிபட்டதையும், அழிஞ்சதையும் கல்வெட்டுகளைப் பார்த்துத் தானே தெரிஞ்சு கொண்டனாங்கள்.

அதுமாதிரித்தான் இன்னார் அந்தத் தீவுக்குப் போனவர் எண்டதை சகலருக்கும் அறிவிக்கிறதுக்காக எங்கடை ஆக்கள் ஒரு வழி கண்டு பிடிச்சிருக்கினம். அங்கை நிக்கிற கத்தாழை மரத்தின்ரை இலையிலை எல்லாம் தங்கடை பொன்னான பெயரையும் விலாசத்தையும் கையால சுரண்டி இல்லையெண்டால் வெட்டி வைச்சிருக்கினம். கத்தாழை மரத்தின்ரை இலை முழுக்க ஒரே தமிழ்வாசனை (இங்கிலீசு எழுத்து மூலமாய்த்) வீசுது. எப்பிடிப் பார்த்தாலும் தமிழ் பெயருகளைத் தவிர வேற ஒண்டும் அங்கை இருக்காது. ஆம்பிளை- பொம்பிளையளின்ரை பெயருகள் எக்கச்சக்கமா அணிவகுத்திருக்குது. உப்பிடி கத்தாழை மரம் முழுக்க எங்கடை ஆக்கள் தங்கடை வரலாற்றுச் சின்னங்களை கல்வெட்டுகளாப் பொறிச்சு வைச்சிருக்கிறதாலை அதைப் பார்க்க வாற மற்றச் நாட்டுச் சனங்கள் இவைகளைப் பண்டி... நாய்... எண்டெல்லாம் பேசிப்போட்டுப் போகுங்களாம். எங்கடை ஆக்களுக்கு அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை, தமிழிலை பேசினால்தானே விளங்கும் வரும். ஏதோ அந்தளவிலை அவையின்ரை தலை தப்பியிடும். தோட்டத்தைப் பரிபாலனம் செய்யிறவை இப்ப கத்தாழை மரமெல்லாத்துக்கும் பீச்சைப் பெயின்ற் அடிச்சிருக்கினம். அப்பிடியிருந்தும் அதுக்கும் மேலால சில விக்கிரமாதித்தனுகள் சலிக்காமல் முயற்சி செய்து பெயர் கல்வெட்டுகள் பொறிச்சிருக்கினம்.

எங்கடை ஆக்கள் எழுத்துத் துறையில் வலு ஈடுபாடான ஆக்கள் கண்டியளோ. அங்கை ஊரில வீட்டு மதிலிலை கரிக்கட்டியால எழுதியும், இடமொண்டும் இல்லையெண்டால் கம்பிளை நெருப்பில காச்சி மாட்டின்ரை முதுகிலையே அடையாளம் வைச்சனாங்கள் இஞ்சை வந்து சும்மாயிருக்கிறதெண்டால் அது எப்பிடி? எங்கையாவது எதிலையாவது எழுத்திலை பதிக்க வேணும். ஆக மிஞ்சினால் ஆரிலேரயள் முதுகிலையெண்டாலும்.. பொறுங்கோவாறன். உதிலை ஒரு பேனை விழுந்துபோய்க் கிடக்குது. என்ன... ஓம்! நான் மட்டும் என்னெண்டு விதிவிலக்காய்.. நிர்வாண நாட்டில கோவணம் கட்டினவன் காட்டுமிராண்டியுங்கோ!

**என்கிறம தன்னை கை விலங்குகள் போகும்?**

**என்கிறம தின்லைகள் தீர்ந்து போய்யாகும்?**

வீடியோக் கடையுக்குள்ள திருச்சி லோகநாதன் இன்னமும் பாடிக்கொண்டிருக்கிறார்.

**ஆசைத்தம்பி**


ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* தரமான தங்கநகைகள் (916/22K உத்தரவாதத்துடன்) தாராள தெரிவில் சிங்கப்பூர்விலையில் 1 பவுண் S $ 158,–

*உயர்ரக பட்டுப்புடவைகள், பட்டுவேட்டி சகலருக்குமான ரெடிமேட் ஆடைகள், *தரமான எவர்சில்வர் வீட்டுப் பாவனை பொருட்கள் ,

* அன்பளிப்புப் பொருட்கள், * பரதநாட்டிய உடுப்புக்கள் மற்றும் அலங்கார நகைகள், * உங்கள் பழைய பவுணிற்கு (சிங்கப்பூர் / இலங்கை) உடனடியாகவே புதிய சிங்கப்பூர் நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

# 'மலையகப் பரிசுக் கதைகள்' - தொகுப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

'இங்கே தாம் உதைக்கிறது. பழைய மாணவர்களாகப் பெரு மைப்பட எங்களுக்கு விதியில்லை. காலாகலத்தில் போய்ச் சேர்ந்துவிட்ட கந்தசாமி யாரின் இலட்சியத்தையும், எங்களின் உரிமைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள் மண்ணாசைக் காரர்கள்'

ஆம்! அருமத் வரலாற்றை நன்றாகவே புரிந்துள்ளார்.

'...மண்ணாசைக் காரர்கள்.'

ரொம்பவும் நிதானமான தொரு வார்த்தைக்கூடாக ஒரு பெரும் வரலாற்றுத் துரோகத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். பல இலட்சக்கணக்கான மலையகத் தமிழ் பேசும் மக்களின் வோட்டுரிமைக்கு வேட்டுவைத்து, 'கப்பலில்' ஏற்றியவர்களும் / ஏற்

காங்கே தொட்டம் தொட்டமாகப் பரந்து கிடக்கும் தோட்டங்கள், தொடர்பில்லாது அறுபட்டுக்கிடக்கும் உறவுகள். தீர்வே யின்றி நீக்கமற நிறைந்து கிடக்கும் பிரச்சினைகள் - ஓயாத உழைப்பு, இவற்றின் கூட்டுக் கலப்புத்தாம் நாங்கள்.'

கோவிந்தராஜனும் நிஷவுலகுக்கு வருகிறார் முடிவு?

'கப்பல் எப்பங்க.. ?'

அப்பவும் எங்களுக்கொரு நப்பாசை.

'சாடின் அடைப்பின் நெரிசலில் விழி பிதுங்கி நின்றாலும், மிதிபலகையில் கால்வைத்தவரை இறங்கி திரும்பிப்போ, என்று மறுக்காமல் உள்ளே அடைபட்டிருப்போரை திட்டி, ஏசி இடம் எடுத்து வந்தவரையும் உள் வாங்கி அவலத்துக் கொள்ளும்

**இனியும் ஒரு சமூகம் தன் அறியாமைக்கும் / அடங்கிப்போகும் மனோபாவத்திற்கும் பலியாகுமென்று காரியமாற்றுபவர்கள் கொஞ்சம் நில்லுங்கள். நிதானியுங்கள்! ஒரு ஈழமல்ல. மலையகமும் அதன் தொடர்ச்சியே! தமிழ் பேசுபவர்கள் இனியும் பொறுக்கத் தயாரில்லை.**

ஜானகியை உணரமுடிகிறது. எனினும் இந்த மரபுகளுக்கும் இந்துமத கருத்தியல்களுக்குள்ளும் வளர்ந்த எனக்கு சற்று கூச்சம் ஏற்பட்டது! தாலிகட்டியவனை விடவா? என்று என் 'வளர்ப்பு, சமூக ஒழுங்கு கேள்வி கேட்டாலும் - மனிதநேய எண்ணம் ஜானகியை அவள் உணர்வுகளை அங்கீகரிக்கிறது. ஒரு அழகான காதல் ஓவியத்தை நம் கண்முன் நிகழ்த்திக் காட்டுகிறார, சக்திவேல் நம்முன் உயர்ந்து நிற்கிறார். தான் நேசித்தவளையே, அவள் விதவையாய் இருந்தும் - தாலிக் கொடி, பொட்டிடும் அவர், சிறப்பாய் உருப்பெறும் சமூகமாற்றத்தின் காலாச்சார முகிழ்ப்பின் அரும்பில் ஒருவர்.'

சந்தனம், கண்களைக் குளமாக்கிவிடுகிறான். அவள் சாகமாட்டாள்.

நிதானியுங்கள்! ஒரு ஈழமல்ல. மலையகமும் அதன் தொடர்ச்சியே! தமிழ் பேசுபவர்கள் இனியும் பொறுக்கத் தயாரில்லை.

மூட நம்பிக்கைக்கும் - அறியாமை இருளுக்கும் ஒரு 'ராமாயி' இல்லை, பல ராமாயிக்கள் பலியாகிவிட்டார்கள்தாம்.

இனியும் அது நடக்கப்படாது!

"விடியல் எப்போது?" ஈழம் பதில் கூறுவதுபோல் மலையகம் கூறியே தீரும்! அப்போது கேள்விகள் நீறாய் தீர்ந்துப் போகும்.

அதுவரையும், சமூகத்தின் மொத்த இருள் சூழ்ந்த நிலைமைகளுக்காக சுகந்தி, பரமேஸ்வரன், மெய்யன் நடராஜன், பாலச்சந்திரன், நளாயினி சுப்பையா, பா. ரஞ்சினி, த. மயில்வாகனம், செல்வி. இ.இமானுவேல் போன்ற சகல எழுத்தாளர்களும் சிலுவை

# மலையகச் சிறுகதைத் தொகுப்புகளில் 'வாழ்வு' - ஒரு தேடல்

றுபவர்களும, இந்த மண்ணாசைக் காரர்கள்தாம்.'

இவ்வகை மண்ணாசைக்காரர்கள், பல தளங்களில் அகலத் தங்கள் வேர்களைப் பரப்பியுள்ளார்கள்; பலர் சூட்சுமமாக நமக்குள்ளேயும், வெளியேயும் இருக்கிறார்கள். இவர்கள், என்றுமே நமக்கு ஆபத்தானவர்கள். மனிதவுரிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் சதிகாரக்கூட்டம்.

இப்போது கே.கோவிந்தராஜிடம் போகிறேன்.

'கப்பல் எப்பங்க...!' நன்றாகவே கேட்கிறார்?

வீரையா'வை மலையக விடுதலையின் விதையாய் மண்ணாசைக்காரர்களால் அபகரிக்கப் பட்ட தங்கள் மண்ணில் ஊன்றுகிறார்.

அது, முளைவிடுகிறது.

மண்ணாசைக்காரர்கள், கடுநீரை அதன் மேல் வாரிக் கொட்டுகிறார்கள்.

முளை வாடுகிறது!

பட்டுப் போகவில்லை. மீண்டும், துளிர்கிறது. மண்ணாசைக் காரர்கள் முன் தன் கிளையைப் பரப்புகின்றது.

'எதுக்குக் கத்தியைத் தீட்டினோம் என்பது உங்களுக்குத் தெரியும். இனி எதற்காகத் தீட்டுவோம் என்பதும் உங்கள்போன்ற தலைவர்மார்களுக்குத் தெரிந்தால் சரி.'

மண்ணாசைக் காரர்களால் 'இவ்விதை, துளிர்த்து கிளைபரப்பி, மரமாய் விழுதெறிதலைச் சகிக்க முடியவில்லை'.

சதி செய்கிறார்கள்.

தங்கள் 'பலங்கொண்ட' மூளைகளைக் கசக்கி துளிர்த்து கிளை பரப்பிய மரத்தைச் சரிக்க வழி வகுக்கிறார்கள். வழிகண்டாச்சு.

இனியென்ன?

கோடாரியுடன் வருகிறார்கள்.

கே.கோவிந்தராஜிடம் இப்போது வாழ்வின் மெய்பாடு உண்மைகளை சுட்டுத்துச் சொல்கிறது!

சிதறிப்போயுள்ளோம்; சின்னாபின்னப்பட்டு தனிமைப்பட்டுள்ளோம்.

பி.வடிவேல் சொல்வதுபோல்.

'தொடர்ச்சியில்லாது ஆங்

மிளி பஸ்ஸின் தாரான மனசு, நம் அனைவருக்கும் இருந்துவிட்டால் உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கே இடம் இல்லாமல் போய்விடுமே!'

மண்ணாசைக்காரர்கள் விடுவதாயில்லை!

சட்டம், ஒழுங்கு, கோடு, கச்சேரி. பயங்காட்டுகிறார்கள், வடிவேலு நியாயம் கேட்கிறார்.

'தலைக்கொரு கூரை' முக்கியமுங்க!

அதெல்லாம் உங்களுக்கில்லை. சட்டம், ஒழுங்கின் பதில் இப்படி. மலையக தமிழர்களின் வாழ்வோடு பின்னப்பட்டுள்ள இவைகளின் சிறப்பு. இயல்பாய் வாழ்வை கண்முன் கொண்டுவந்ததே. இதில். அருமத்துக்கு பின்புதாம் மற்றைய படைப்பாளிகளில் நிற்கின்றனர் என்றில்லை.

ஒவ்வொருவரும், தத்தம் ஆளுமையுடன் இக்கதைகளுக்குள் தம் வாழ்வை தொலைக்கிறார்கள், தேடுகிறார்கள்; வாழுகிறார்கள்.

இனி எங்கே...?

சிவலிங்கம் தேடியலைகிறார்!

'எந்த பண்ணையார்களுக்கும், ஜெமின்தார்களுக்கும் கூலிவிவசாயிகளாக பண்ணையடிமைகளாக ஊழியம் செய்யமுடியாமல் பயந்து ஓடிவந்தார்ளோ— அதே

## ப.வி.சிறிரங்கன் (ஜேர்மனி)

பண்ணை அடிமைகளாக கூலித் தொழிலாளர்களாக மீண்டும் தள்ளப்பட்டு விட்டார்கள்.'

ஆண்டாண்டு உழைத்து வளமாக்கிய மண்ணைவிட்டு துரத்தியடிக்கும் "மண்ணாசைக் காரர்களின் கொடூரத்தை சிறப்பாகச் சொல்லும் சிவலிங்கம்.

பென்சர் கிழவர் பெலுமாள் மூலம், மண்ணின் மைந்தர்களின் உரிமைத் தாக்கத்தை நாம் அனுபவிக்கிறோம்.

'காணிநிலம், வீடு என்று சொத்தேயில்லாமல் தோட்டமெனும் அறைக்குள்ளே வியாபார ஸ்தாபனங்களுக்கும், நிலச் சொந்தக் காரர்களுக்கும் கூலிகளாகவே வாழ்வதற்கு நிற்பந்திக்கப்பட்டிருக்கும் அந்த மக்கள் சுதந்திர

வாழ்வுபெறும் காலத்தைத் தேடிக் கொண்டே இருக்கிறார்கள்.'

ஆம்! இன்று உலகத்தின் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும் அவர்கள். உழைக்கும் மக்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களின் நிலை இதுவே. புலம் பெயர்வு வாழ்விலுள்ள தமிழர்களின் நிலையும், மலையக மக்களின் வாழ்வின் நிலையும் சம அள

"இது - இருள் சூழ்ந்த மலையக மக்களின் வாழ்வின் அவலங்களை ஆயிரம் வோல்டேஜ் மின்னொளியில் வெளிச்சமிட்டுக் காட்டாது போனாலும் - ஒரு மெழுகுதிரியாய் தன்னையுருக்கி வெளிச்சமிட்டுக் காட்டிக் கொண்டேயிருக்கும்."

வில் அடிப்படைப் பிரச்சினையில் ஒன்று பட்டாலும், மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் புலம் பெயர்வுத் தமிழர்களின் தரத்தில் தசம் சைபர், சைபர் ஒன்று கூடவில்லை என்பதை நாம் உணர்கிறோம்.

உலகத்தில் எங்குமில்லாத கொடுமை மலையக மண்ணில் தலைவிரித்தாட, இந்த மண்ணாசைக் காரர்கள் காரணமாக உள்ளார்கள்.

உழைப்பவனுக்கு இந்த உலகம் சொந்தமெனும்போது, உழைத்துண்ணும் 'உரிமையுள்ள இந்த மக்களின் வரலாறு பொய்பித்து போகுமோ?' என்று சிவலிங்கம் கேட்பதில நியாயம் புரிகிறது.

ஜானகியைத் தேடும் சிகுமாரை சந்திக்கிறேன்,

மரபுகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் இரையாகிப் போகும் பெண்களின் சுவட்டில் ஜானகியை உருட்டிப் புரட்டாமல்,

'தாத்தா நான் கணவனை எழுந்தால வெதவக் கோலத்தில நிக்கல்ல, நேசித்தவனை அடைய முடியாம பொயிரிச்சேன்னுதாம் நினைச்சி வெதவையா நிக்கிறேன்...'

உழைப்பால் உயர்வுறாத அவள், இறுதிவரையும் சுகமாய் - நிம்மதியாய் தூங்க முடியவில்லை. அவள் நோய்; சமூகத்தின் நோய்.

மனித உரிமைகள் எதுவுமேயில்லாது உழைப்பவர்களை இன்னுக்கிரையாய் வைத்திருக்கும் இலங்கை அரசின் நோய்; அதிகார வர்க்கத்தின் உளநோய்.

இது இலகுவில் தீராத நோயாய் அவ்னை மட்டுமல்ல இச் சமூகத்தையே பிடித்தாட்டுகிறது.

இங்கு சதாசிவம் சந்தனத்தை மனசாட்சியுடையோரின் முன் நிறுத்தியுள்ளார்.

இங்கு, அருமத்தின் அம்மா, என் அம்மா, உங்கள் அம்மா எல்லோரும் மரணப் படுக்கையில்...

"பொறுத்தது போதும்...!"

இனியுமா? முடியாது! அம்மாவாய்; நோயாளியாய்; வேலைக்காரியாய்; விதவையாய்; காமகர்களால் குதறப்படும் பதுமையாய் எங்கள் அம்மாக்கள்.

இனியும் பொறுக்க முடியாது!

ராஜதுரை - கோபக்கத்தியுடன் புறப்படுகிறார்.

அதில் அவர வெற்றியும் பெறுகிறார்.

"இது வெறும் முணுமுணுப்பா? இல்லவேயில்லை! ஒரு சமூகம் முழுவதும் தனக்குள் எரிமலைபோல் அடக்கி வைத்துள்ள அவல வாழ்வின் ஒரு சிறு துளியே! இது பீறிட்டு வெளிக்கிளம்பாதவரை பாதுகாப்புத்தாம்!"

எச்சரிக்கை!

இது எல்லோரதும் எச்சரிக்கை.

இனியும் ஒரு சமூகம் தன் அறியாமைக்கும் / அடங்கிப் போகும் மனோபாவத்திற்கும் பலியாகுமென்று காரியமாற்றுபவர்கள் கொஞ்சம் நில்லுங்கள்.

சுமக்கட்டும்; சுமக்கிறார்கள். இவர்களில், நளாயினி சுப்பையா, செல்வி. இ. இமானுவேல், த. மயில்வாகனம், மெய்யன் நடராஜன் போன்றோர்கள் ரொம்ப நிதானமாகவே சிலுவை சுமக்கிறார்கள்.

இவர்களின் நிதானம் போன்றே மற்றவர்களும் தம்மைத் தோற்றுவிக்க வேண்டும்.

அது காலப்போக்கில் நிகழவே செய்யும்!

ஏனெனில், இவர்கள் கதைகளுள் ஜீவனாய் வாழ்கிறார்கள். தங்கள் வாழ்வை அதற்குள் தொலைக்கிறார்கள்; தேடுகிறார்கள். இப்படி தம் வாழ்வை கதைகளுக்குள் காணும் இவர்கள் நிதானமாகத் தோற்றம் பெறுவார்கள்.

இவர்களோடு நாமும் சிலுவை சுமக்க முயல்கிறோம்?

ஈழத்திற்காக;

மலையகத்திற்காக;

புலம் பெயர்வு வாழ்வும் இதையே எமக்கு உணர்த்தியுள்ளது.

''மலையகப் பரிசுக் கதைகள்' தொகுப்பு இறுதியாகச் சிலவற்றைச் சொல்ல வைக்கிறது:

**"இது - இருள் சூழ்ந்த மலையக மக்களின் வாழ்வின் அவலங்களை ஆயிரம் வோல்டேஜ் மின்னொளியில் வெளிச்சமிட்டுக் காட்டாது போனாலும் - ஒரு மெழுகுதிரியாய் தன்னையுருக்கி வெளிச்சமிட்டுக் காட்டிக் கொண்டேயிருக்கும்."**

இந்த என் நம்பிக்கை வீண் போகாது.

**தோழமையுடன்:**
**ப.வி.சிறீரங்கன்**

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
136, Bd de la Villette, 75019 Paris.

**RCS PARIS**
B 399673110

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran

**Impression:**
IMPRIMERIE MEAULLE

**நிர்வாகி:**
ப. வேலுப்பிள்ளை

**ஆசிரியர்:**
க. கீசேந்திரன்

தபால் தொடர்புகளுக்கு:

EELAMURASU
22, Rue Pardonnet,
7010 Paris,
France

விளம்பர விநியோக தொடர்புகளுக்கு

பாரிஸ்:
TeL: 40 37 63 53
Fax: 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 686592

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து:
SABA
Tel: 0224097641



## சாரதி/வாகன சேவை

உங்கள் சகல வாகனத்
தேவைகளுக்கும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள்.
உள்நாட்டிலும்
வெளிநாடுகளிலும் வாகன
சேவையும், தனியாக சாரதி
சேவையும் நாம் வழங்குகிறோம்.
தொடர்புகளுக்கு:
**எம். குமார் - 48 50 12 26**


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னிக்கு....

வியாவிலுள்ள சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் வன்னிப் பகுதிக்கான உணவுப் பொருட்களை அனுப்புவது தடுத்து வைத்து யுத்தத்தில் உணவையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தினர்.

தற்போது சர்வதேச ரீதியில் இது தொடர்பாக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகப்பட்டதைத் தொடர்ந்து சிறீலங்கா அரசு வேறு வழியின்றி 38 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைத்துள்ளது. இதில் 12 லொறிகளில் கோதுமை மா முல்லைத்தீவுக்கும், 19 லொறிகளில் கோதுமை மா கிளிநொச்சிக்கும், 7 லொறிகளில் அரிசியும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பொதுவாக வன்னிப் பிரதேசத்துக்கு தினசரி 50 உணவு லொறிகள் செல்வது நடைமுறையாக இருந்து வந்தது. வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் சிறீலங்கா இராணுவத்தினர் நிட்டமிட்ட அடிப்படையில் லொறிச் சாரதிகள் மீது தாக்குதல் நடாத்தி வந்ததால் பெரும்பாலான லொறிச் சாரதிகள் அங்கு செல்வதற்கு அச்சம் தெரிவித்து வந்தனர்.

தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவு லொறிகளுக்கு வழித்துணை வழங்க முன்வந்துள்ளதையடுத்து லொறிகள் வவுனியாவுக்குச் சென்றுவர ஆரம்பித்துள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்நாட்டுக்கு....

நகரத்தை சேர்ந்தவர்கள் சூரியக் கதிர் நடவடிக்கையில் முதலில் சாவகச்சேரிக்கு இடம்பெயர்ந்தோம். பின்பு மீண்டும் சாவகச்சேரியில் தொடர்ந்த சூரியக் கதிர் 2 இராணுவ நடவடிக்கையால் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தோம். கிளிநொச்சியை நோக்கி நடந்த சத்ஜய இராணுவ நடவடிக்கையால் நாங்கள் வன்னிக் காடுகளுக்குள் ஓடினோம் பசி பட்டினியோடு இருந்தாலும் பரவாயில்லை. எப்போது சூடு படும் என்று தினம் தினம் நிமிடத்துக்கு நிமிடம் அஞ்சி அஞ்சி சாவது எவ்வளவு கொடுமை என்பது சந்திரிகாவுக்குத் தெரியாது. தெரு நாய்களைப் போல எம்மை ஓட ஓட விரட்டியடிக்கும் நிலையில் இனி ஓட முடியாது என்ற கட்டத்தில் நாங்கள் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கின்றோம். என்று கூறியுள்ளார்.

தமிழ் நாட்டுக்கு வந்து சேரக் கூடிய அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கத் தமிழ்நாடு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இன்னும் தமிழகத்திற்கு வருவதற்காக ஆயிரக்கணக்கான அகதிகள் காத்திருப்பதாகவும் ஆனால் அவர்களை ஏற்றி வருவதற்கு போதிய படகுகள் இல்லை என்றும் சட்டசபையில் கூறியுள்ளார்.

இதற்கிடையில் குட்டாநாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலுக்குத் தப்பி கடல் வழியாக தமிழ் நாட்டுக்கு வரும் அகதிகள் படகுகளை கண்காணிக்கும்படியும் ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் அவற்றின் மீது தாக்குதல் நடத்த வேண்டாமென்றும் இந்தியக் கடற்படைக்கு மத்திய அரசு வாய் மொழி உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகாவை....

புலிகளுடன் நடக்கும் போரை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வரத் தவறிவிட்டது. யுத்தத்தின் உண்மை நிலை என்ன என்பதை அது சிங்கள மக்களுக்கு மறைத்து வருகிறது. புலிகளின் செய்திகள் மூலமும், வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தரும் செய்திகள் மூலமும் வடக்கில் என்ன நடக்கிறது என்பது தமிழ் மக்களுக்கும் வெளிநாட்டிலுள்ள ஏனைய இன மக்களுக்கு தெரிந்த அளவுக்கு சிங்கள மக்களுக்கு ஒன்றும் தெரியாத அளவுக்கு அரசாங்கம் பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தி மூடிமறைப்பதோடு தனது தரப்பு பொய் செய்திகள் மூலம் சிங்கள மக்களை திசை திருப்பப் பார்க்கிறது.

விலைவாசியைக் குறைப்போம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் உட்பட ஜனநாயக உரிமைகள் காப்போம் என்று சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளால் எல்லாமே காலில் போட்டு மிதிக்கப்பட்டு விட்டன. அரசாங்கம் முன்யோசனையின்றி நடத்தும் யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டது. விலைவாசிகள் ஏறிவிட்டன. மக்கள் தாங்கொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், அதைப் பயன்படுத்தியே மக்களை மேலும் மேலும் துன்பத்திற்கு ஆளாக்குகிறது என்று கூறினார்.

அங்கு பேசிய அனைவரும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிவிலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். பேரணிக்கு திரண்டிருந்த மக்களும் இதே கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை சுமந்து வந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றி செய்தி வெளியிட்ட பி.பி.சி தொலைக்காட்சி நிறுவனத்தின் கொழும்பு நிருபர் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டதை உறுதிப் படுத்தியதோடு, அங்கு கலவரம் ஏற்படும் என எதிர்பார்த்து கலகத்தை அடக்கும் விசேட படைப்பிரிவினரும் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சர்வதேச....

வருக்கு அளித்த பேட்டியில் சர்வதேச மன்னிப்புச் சபை தனிப்பட்ட அல்லது குறிப்பிட்ட சம்பவங்களைக் காரணம் காட்டி தமது குழுவின் மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டை சுமத்தியிருக்கிறதா என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் வவுனியாப் பிரதேசத்தில் தமது சுயபாதுகாப்புக் கருதி தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை அது மனித உரிமை மீறலாக கருதியிருக்கிறதா என்பதை அவ்வறிக்கையை பூரணமாகப் படித்த பின்னர் தான் தெரிவிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

புளொட், ரெலோ குழுக்கள் சிறீலங்கா அரசின் அடிகாரத்துக்குட்பட்டிருந்து கொண்டு ஆட்கடத்தல் அதிகாரபூர்வமற்ற மரண தண்டனை ஆட்களை மிரட்டிப் பணம் பறித்தல் முதலான குற்றச் செயல்களைப் புரிந்து வருவதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ரத்வத்தை....

இதைக்கேட்டு மிகவும் ஆத்திரமடைந்து ரத்வத்தையை தொலைபேசியில் அழைத்து ஏசியதாக சொல்லப்படுகிறது.

தற்போது ரத்வத்தையிடம் ஐம்பதுகோடிருபா நட்டஈடு கேட்டு வழக்குத் தாக்கல் செய்ய அநுரா உத்தேசித்திருப்பதாகவும் அதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சம்மதித்திருப்பதாகவும் கொழும்பு சிங்களப் பத்திரிகையான தினமின செய்தி வெளியிட்டுள்ளது. இவ் வழக்கில் அநுரா சார்பாக ரத்வத்தையின் தற்போதைய மனைவியின் முன்னாள் கணவர் கனகேஸ்வரன் ஆஜராக உள்ளார் எனத் தெரியவருகிறது.


## பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் பப்பிறிஸ்

நாரந்தனை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டயஸ் பாலரஞ்ஜினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் **பப்பிறிஸ்** (Fabrice) தனது முதலாவது பிறந்த தினத்தை 24.08.96 அன்று பாரிசிலுள்ள தனது றெஸ்ரோரண்டில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், மாமாமார், அன்ராமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், தம்பி, உற்றார், உறவினர் அனைவரும் இவரை ஓர்த்து அன்னையின் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



நெதர்லாந்தில் Roosendaal சினிமா திரையரங்கில்
CITY THEATER - ROOSENDAAL

இரண்டு தமிழீழத் திரைக் காவியங்கள்

# உயிர்ப்பூ

# இன்னும் ஒரு நாடு

**காலம்: 24.08.96 (சனிக்கிழமை மாலை) 4 மணி**

தமிழீழ விடுதலைப் புலிகள் - நெதர்லாந்து



லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

# Errances Travels

Tél: 42 09 70 00

Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

*à partire de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900Frs. | Londres | 650Frs. |
| Delhi | 3,900Frs. | New york | 2,400Frs. |
| Bangkok | 3,350Frs. | Montreal | 2,400Frs. |
| Colombo | 4,150Frs. | Oslo | 2,010Frs. |
| Singapour | 3,350Frs. | Toronto | 2,700Frs. |
| Kualalumpur | 3,400Frs. | Nepal | 4,820Frs. |
| Madras | 4,750Frs. | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது




# ஐரோப்பாவில் பிள்ளை பிடிகாரர் ! பெல்ஜியத்தில் ஒருவர் கைது

கடந்த 16.08.96 வெள்ளிக்கிழமை பெல்ஜியப் பொலிசார் Marc Dutroux என்பவரின் வீட்டை முற்றுகையிட்டபோது அவரது வீட்டிலிருந்து, கடத்தி சிறை வைக்கப்பட்டிருந்த இரு பாடசாலை மாணவிகளை மீட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாகக் காணாமல் போயிருந்த இம் மாணவிகளை, இவர் கடத்திச் சென்று வைத்திருந்ததாகவும், அவர்களை சிறுவர் பாலியல் வியாபாரத்துக்கு பாவிக்க திட்டமிட்டிருந்ததாகவும் பூர்வாங்க விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் கடந்த 17.08.96 சனியன்று மேற்படி நபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் மூன்று சிறுமிகளின் சடலங்கள் நிலத்தில புதைக்கப் பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மூன்று சிறுமிகளும் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள் என்ற விபரம் உடனடியாக வெளியாகவில்லை. ஐரோப்பாவில் சிறுவர்களை பாலியல் நோக்கங்களுக்குப் பாவிக்கும் வியாபாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. சிறுவர் சிறுமியர்களை மொழிப் பயிற்சி, உல்லாசப் பயணம் போன்ற பொழுது போக்குக் காரணங்களை மையமாகவைத்துத் தொடர்புகளை மேற்கொள்ளும் விசமிகள் பின்னர் அச் சிறுவர்களை மறைவான இடத்துக்குக் கடத்திச் செல்லும் சம்பவம் பற்றி கடந்த காலங்களில் பேசப்பட்டு வந்துள்ளது.

இதையிட்டு பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், மொழிப் பயிற்சி மற்றும் எந்த பொழுது போக்குக் காரணத்துக்காகவும் தமது குழந்தைகளை இனம் தெரியாத குழுக்களுடன் அனுப்ப வேண்டாம் எனவும் பொலிசார் பெற்றோர்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குடியரசுக் கட்சி வேட்பாளராக டோல் தெரிவு

எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளராக இரண்டாம் உலகப் போரில் பங்கு கொண்டு காயமடைந்த போர் வீரரான 73 வயதுடைய பொப் டோல் உத்தியோக பூர்வமாகத் தெரிவாகியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஜெனரல் கொலின் பவல் உட்பட பல முக்கியஸ்தர்கள் அவருக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஞாபக சக்தி அற்றவராக மூளை செயற்பாடற்ற நிலையில் உள்ள றொனால்ட் றீகனின் பெயர் பல பேச்சாளர்களால் குறித்துக் கொள்ளப்பட்டது. அவரது மகன் பொப் டோலுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

பொப் டோல் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமெரிக்காவில் வாழும் வதிவிட அனுமதியற்ற வெளிநாட்டவர்களின் பிள்ளைகளை கல்லூரிகளுக்குச் சென்று கல்வி கற்பதை தடுக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


மனைவி எலிசபெத்துடன் வேட்பாளர் டோல்

அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெற உள்ள ஜனநாயகக் கட்சி மாநாட்டில் இடம்பெற உள்ள ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் ஜனாதிபதி கிளிண்டன் உத்தியோக பூர்வமாகத் தெரிவாவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச ரீதியாக ஒவ்வொரு வேட்பாளரும் தமது 'வலிமையை' காட்டி வாக்குப் பெறுவதும் ஒரு நடைமுறையாகும். கடந்த தேர்தலில் ஈராக்கிற்கெதிராக பாரிய தாக்குதலை நிகழ்த்தி மக்களின் மனதைக் கவர முயன்ற ஜோர்ஜ் புஷ் அம் முயற்சியில் தோல்வி கண்டார். ஜனாதிபதி கிளின்டன் பொஸ்னியப் போர், பாலஸ்தீனப் போர், போன்ற மோதல்களில் சமாதனம் தேடிய சாதனையாளராகத் தன்னைக் காட்டி வெற்றி பெற திட்டமிட்டுள்ளார்.

தற்போதய கருத்துக் கணிப்பின் படி ஜனாதிபதி கிளின்டன் 10 வீத வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெறுவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

# பொலிசார் உதவியுடன் உண்ணாவிரதம் முறியடிப்பு !

18.08.96 ஞாயிற்றுக்கிழமையுடன் 45-வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வரும் வதிவிட அனுமதியற்றவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்து வரும் பிரெஞ்சு அரசாங்கம், அவர்களின் உண்ணாவிரதத்தை கலக்கமடைக்கும் பொலிசாரின் உதவியுடன் முறியடித்து உண்ணாவிரதிகளை நாடுகடத்தத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பரபரப்பான தகவல் வெளியானதைத் தொடர்ந்து பிரெஞ்சு அரசியல் பிரமுகர்களும், முக்கியஸ்தர்களும் பாரிஸ் 18-ல் உள்ள உண்ணாவிரதம் நடைபெற்றுவரும் கத்தோலிக்க தேவாலயத்துக்குச் சென்று உண்ணா விரதிகளுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி பிரான்சுவா மித்திரோனின் மனைவி டானியல் மித்திரோன் உண்ணாவிரதிகளுக்கு தனது ஆதரவைத் நேரடியாகச் சென்று தெரிவித்துள்ளதோடு, இந்த நாட்டில் மனிதாபிமானம் மதிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். இது ஒருபுறமிருக்க பல முக்கிய பிரமுகர்கள் உண்ணாவிரதிகளுடன் தம்மை இணைத்து விலங்கிட்டுக் கொண்டுள்ளனர். பொலிசார் உண்ணாவிரதிகளை பொலிஸ் வாகனத்தில ஏற்றுவதாயின இம் முக்கியஸ்தர்களும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்படவேண்டிய சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர்.

இவ் உண்ணைவிரதத்தை ஒரு பலப்பரீட்சையாக கருதும் பிரெஞ்சு உள்நாட்டமைச்சர் ஜோன் லூயி டெப்ரே இப்படியான மிரட்டல்களுக்கு நான் பணியப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். அமைச்சரின் கூற்றுக்கு பிரதமர் அலன் ஜூப்பேயும் தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

1993-ம் ஆண்டுக்கு முன்பு பிரான்சில பிறந்த குழ்ந்தைகளுக்கு மட்டுமே பிரெஞ்சு பிராஜா உரிமை வழங்கப்படும் என்ற பஸ்குவா சட்டமே இச சர்ச்சையின் மையமாகும். தற்போதய அரசின் கூற்றுப்படி பிரெஞ்சுப் பிரசா உரிமை உடைய குழந்தைகளின் பெற்றோருக்கு மட்டுமே வதிவிட அனுமதி வழங்கப்படும் என்றும் ஏனையோர் குழந்தைகள் உட்பட விசேட விமான மூலம் தத்தம் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் அரசு அறிவித்துள்ளது.

வெளிநாட்டவர் விடயத்தில் பிரான்ஸ் கடைப்பிடிக்கும் சட்டங்கள் மனித உரிமை மீறல்கள் என ஐநா சபை ஏற்கனவே கண்டனம் தெரிவித்துள்ளது.

# செப்டம்பர் 14 இல் பொஸ்னியத் தேர்தல்

பொஸ்னியாவில் 1992 முதல் நடைபெற்ற போருக்குப் பின் முதலாவது பொதுத் தேர்தல் அடுத்த மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் பொஸ்னியாவில் உள்ள 30 இலட்சம் மக்கள் 4600 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க உள்ளனர். OSCE எனப்படும் ஐரோப்பிய ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புக்கான ஸ்தாபன ஊழியர்களின் 1200 பேர் இந்த தேர்தலைக் கண்காணிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செச்செனியாவில் மீண்டும் ஒரு போர் நிறுத்தம்

செச்செனியாவில் மீண்டும் ஒரு போர்நிறுத்தம் கடந்த வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப் போர் நிறுத்தம், செச்செனியப் போர் தொடர்பான முரண்பாட்டால் முன்னர் பொறிஸ் ஜெல்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்டவரும் பின்னர் ஜனாதிபதித் தேர்தலின் போது பொறிஸ் ஜெல்சினின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டவருமான ஜெனரல் அலெக்சான்டர் லெபெட் நடாத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் அமுல் செய்யப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் போர் நடைபெறும் செச்செனியத் தலைநகர் குரோஸ்னிக்கு இரு தடவைகள் சென்றிருந்த லெபெட் இந்தப் போருக்கு காணமாக இருப்பவர்கள் ரஷ்ய அரசில் இருந்து நீக்கப் பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் உள் நாட்டமைச்சர் அனற்றொலி குலிக்கோவ் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.


செச்சேனியக் குடும்பப் பெண்களுடன் பேசும் ஜெனரல் லெபெட்

பிரதமர் விக்ரர் செர்னோமிர்டின் அரசு இவ்வாரம் தான் தமது மந்திரிசபையை அறிவித்துள்ள வேளையில் ஜெனரல் லெபெட் இக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சின் ஜெனரல் லெபெட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளாதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விமானத்தில் துணிகரக் கொள்ளை

பிரான்சின் Perpingan என்னும் விமான நிலையத்திற்கு வந்திறங்கிய விமானத்தை ஓடுதளத்தில் இடை மறித்த கொள்ளைக் காரர்கள் விமானத்தில் எடுத்துவரப்பட்ட பணப் பொதிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது, விமானத்தை நிறுத்துமாறு தெரிவிக்கும் அட்டையை ஏந்திய வண்ணம் விமானத்தை ஓடுதளத்தில் இடைமறித்த கொள்ளைக்காரர்கள் விமானியை மிரட்டி விமானத்தில் இருந்த பணப் பொதிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளையடிக்கப் பட்ட தொகை உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

# மீர் நோக்கிய சோயுஸின் பயணம்

MIR என்ற செய்மதியை நோக்கிய சோயுஸ் விண்கலத்தின் 14 நாள் பயணம் கடந்த 17.08.96 சனியன்று ஆரம்பமாகியுள்ளது.

இவ் விண்கலத்தில் Claudie Andre என்ற பிரெஞ்சுப் பெண்மணியும் இரு ரஷ்ய விண்வெளி வீரர்களும் செல்கின்றனர்.

தனது விண்வெளிப் பயணத்துக்கான தயாரிப்புக்களை கடந்த 19 வருடங்களாக மேற்கொண்டிருந்த குளோடி ஒரு மருத்துவ டாக்டரும், விஞ்ஞான ஆய்வாளருமாவர். விண்வெளிக்குச் செல்லும் 31-வது பெண்ணான குளோடி விண்வெளி ஆய்வில் பங்கு கொள்ளும் முதலாவது பிரெஞ்சுப் பெண்ணாகும்.

விண்வெளியில் இவர்கள் இணையும் MIR இல் இருக்கும் இன்னொரு பெண்ணான LUCIDE விண்ணில் வாழ்ந்து உலக சாதனை நிகழ்த்த உள்ளார். எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதியுடன் இவர் 183 நாட்கள் விண்ணில் வாழ்ந்து உலக சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பம்

ஊனமுற்றோருக்கான 10-வது ஒலிம்பிக் போட்டிகள் கடந்த வாரம் அட்லாந்தாவில் ஆரம்பமாகின. ஆரம்பவிழாவில் 60,000 பேர் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். 127 நாடுகள் சார்பாக விளையாட்டு வீரர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்கின்றார்கள்.

# ஜோர்டானில் கலவரம் பாண் விலை இரட்டிப்பின் எதிரொலி!

ஜோர்டான் நாட்டுத் தலைநகர் அமான் இல கடந்த 17.08.96 சனியன்று கடுமையான வன்முறை வெடித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆலோசனையின் பேரில் பாணின் விலையை இரண்டு மடங்காக அதிகரிக்க அரசு முடிவு செய்ததைத் தொடர்ந்தே இவ் வன்முறை வெடித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அரசின் இந்த முடிவைக் கண்டித்த எதிர்க்கட்சிகள் அமெரிக்காவின் ஆலோசனையின் கீழ் இயங்கும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கிணங்க பாணிற்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை நிறுத்திய அரசு, மக்களின் அபிலாசைகளைக் கவனத்தில் கொள்ளாது வெளிநாட்டு ஏஜன்சிகளின் கருத்துக்களை பெற்று இயங்குகின்றது எனக் குற்றம் சாட்டி அரசு இராஜினாமாச் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

## துருக்கி மீது பொருளாதாரத் தடை ?

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக நீண்ட காலம் செயற்பட்டு வந்த துருக்கியில் அண்மையில் பதவிக்கு வந்த இஸ்லாமியக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் எர்பக்கானின் அரசு மீது அமெரிக்கா சீற்றம் கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஈரானுக்கு விஜயம் செய்த பிரதமர் ஈரானிடம் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டதைத் தொடர்ந்து சீற்றம் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.

ஈரானுடன் வர்த்தகத்தை மேற் கொள்பவர்கள் மீது தண்டனை விதிக்கும் அமெரிக்கச் சட்டத்தை ஐரோப்பிய, மற்றும் ஆசிய நாடுகள் எதிர்த்துள்ள வேளை துருக்கியும் அமெரிக்கச் சட்டத்திற்கு மதிப்பளிக்காது ஈரானுடன் வர்த்தக உறவுகளை மேற்கொண்டுள்ளது.

## இஸ்ரேலின் குடியேற்ற திட்டம் ஒப்பந்தத்துக்கு முரணானது -யசீர் அரபாத்-

மேற்குப் பள்ளத்தாக்குப் பகுதியில் யூதக் குடியேற்றங்களை மேற்கொள்ள இஸ்ரேலிய அரசு எடுத்துள்ள முடிவு மிகவும் அபாயகரமானது என பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார். இக் குடியேற்றத் திட்டம் எமக்கெதிரானது மட்டுமல்ல சமாதானத்துக்கும் எதிரானது எனத் தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்கெதிரான இந்த முடிவை எதிர்க்க பரந்துபட்ட ரீதியில் குழுக்கள் அமைக்கப்பட்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என அவர் அறை கூவல் விடுத்துள்ளார். இந்தக் குடியேற்றத் திட்டதை அரபாத் கண்டித்துள்ளபோதும், இதனை எந்த வல்லரசும் கண்டிக்கவில்லை.

## தாய்வானுக்கு மிராஜ் போர் விமானங்கள்

சீனாவில் இருந்து பிரிந்து செல்லும் தீர்மானத்தை முன்னெடுத்து வரும் தாய்வானுக்கு மேலும் 60 மிராஜ் விமானங்களை பிரான்ஸ் விற்பனை செய்யவுள்ளது.

இதற்கான விற்பனை ஒப்பந்தம் சென்ற மாதம் கைச்சாத்தாகியது.

தாய்வானுக்கு பிரெஞ்சு நிறுவனம் ஆயுத விற்பனை செய்வதை சீனா எதிர்த்து வருவதோடு 1990 இல் நடைபெற்ற இத்தகைய விற்பனை ஒன்றை எதிர்த்து பிரெஞ்சுத் தூதுவராலயத்தை சீனா மூடியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# வாரக் குறிப்பு

### 11.08.96 ஞாயிற்றுக்கிழமை

- கெமர் ரூஜ் என்ற கம்போடிய படைகளின் உதவித் தலைவர் Ieng Sary இயக்கத்தில் இருந்து விலகி 1 கோடியே 60 இலட்சம் டொலர் பணத்துடன் இடம் தெரியாத இடத்துக்கு தப்பியோடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தோனேசிய அரசின் தலைவர் சுகார்டோவிற்கு ஆதரவு தெரிவித்து 50 ஆயிரம் மக்கள் தலைநகர் ஜகார்த்தாவில் பாரிய ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளார்கள்.
- கணனித் துறையில் Computer memory, பிரதி செய்தல் போன்ற பல கண்டுபிடிப்புகளுக்கு வேண்டிய தகவல்களை வெளியிட்ட பிரித்தானிய விஞ்ஞானி Sir Nevil Francis Mott தனது 90 ஆவது வயதில் காலமானார்.
- துருக்கிக்கும் கிரேக்கத்துக்கும் சொந்தமாக உள்ள Cyprius என்ற தீவில் துருக்கிக்குச் சொந்தமான பகுதிக்குள் எல்லையை குறிக்கும் பச்சைக் கோட்டைத் தாண்டி நுழைந்த கிரேக்கர் அடித்துக் கொலை.

### 12.08.96 திங்கட்கிழமை

- செச்செனியத் தலைநகர் குரோஸ்னிக்கு நடு இரவில் சுற்றுப் பயணம் செய்த ரஷ்ய ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் அலெக்சாண்டர் லெபெட் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை செச்செனியத் தீவிரவாதிகளுடன் நடாத்தியுள்ளார்.
- இந்தோனேசியக் கலவரம் தொடர்பாக கம்யூனிஸ்ட் ஒருவர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.
- அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தின் தற்போதய வடிவத்தை தம்மால் ஏற்க முடியாதென ஈரானும் தெரிவித்துள்ளது. ஏற்கனவே இந்தியா இந்த சர்வதேச தடை ஒப்பந்தத்தை எதிர்த்துள்ளது. அணு ஆயுதம் வைத்திருக்கும் வல்லரசுகள் அவற்றை அழிக்க வகை செய்யாத இச் சட்டத்தை தம்மால் ஏற்க முடியாதென இந்தியா தெரிவித்துள்ளது.
- பிரான்சில் வதிவிட அனுமதி கோரி உண்ணாவிரதம் இருந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல அரசு உத்தரவிட்டுள்ளது. மருத்துவ பரிசோதனையின் பின் அவர்கள் மீண்டும் தமது இடத்துக்கு வந்து உண்ணாவிரதத்தைத் தொடர்கின்றனர்.
- வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மக்கள் நடாத்திய ஊர்வலம் வன்முறையின்றி முடிவடைந்தது. இவ் ஊர்வலம் கத்தோலிக்கத் தெருக்களில் செல்லும்போது வன்முறை வெடிக்கலாம் என அஞ்சப்பட்டது.
- இஸ்ரேலியப் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் ஜெருசலேம் நகர் பிரிக்கப்படுவதை தாம் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

### 13.08.96 செவ்வாய்க்கிழமை

- செச்செனியாவில் நாளை முதல் போர் நிறுத்தம் அமுலாகும் என மொஸ்கோவில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- பொஸ்னியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புக்கள் மீது தாக்குதல் நடாத்தப்படலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.
- தென்கொரிய சுதந்திர தினத்தை ஒட்டி 586 சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. தென்கொரிய முன்னாள் அமைச்சர்கள் பலர் இந்த பொது மன்னிப்பில் விடுதலையாகியுள்ளனர்.
- Nitric Oxide என்ற இரசாயனப் பொருள் மலேரியா நோய்க்கு சிறந்த மருந்தாகலாம் என மருத்துவத் துறை விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
- கைத்துப்பாக்கிகளுக்கு நாடுதழுவிய தடையை கொண்டு வரும் தீர்மானத்தை பிரித்தானிய பாராளுமன்றத் தெரிவுக்குழு 6 இற்கு 5 என்ற வாக்குகளால் நிராகரித்துள்ளது.

### 14.08.96 புதன்கிழமை

- பயங்கரவாதிகளுக்கான நிதி அரபு நாடுகளில் இருந்தே செல்கின்றது என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.
- பிரான்சும் இஸ்ரேலும் அமெரிக்க பொருளாதாரத்தை உளவு பார்க்கின்றன என சி.ஐ.ஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- வல்லரசுகள் தம்மிடம் உள்ள அணுஆயுதங்களை அழிக்காமல் சர்வதேச அணுஆயுதத்தடை கொண்டுவர முடியாது எனத் தெரிவித்த இந்தியா, இன்று ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச சட்ட நகலை வீட்டோ செய்தது.
- பாகிஸ்தானிய சுதந்திர தினமான இன்று இரு இனப் பிரிவினரிடையே இடம்பெற்ற மோதலில் ஒரு பெண் உட்பட 11 பேர் பலியாகியுள்ளனர்.
- போர்த்துக்கலில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வந்த மார்சல் Antonio de spinola தனது 86 ஆவது வயதில் காலமானார். 25 ஏப்ரல் 75 இல் போர்த்துக்கலில் ஜனநாயக ஆட்சியை இவர் தோற்றுவித்தார்.

### 15.08.96 வியாழக்கிழமை

- துருக்கியப் பாதுகாப்புப் படைகள் கிரேக்க ஊடுருவல்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததமையை அமெரிக்கா கண்டித்துள்ளது.
- அமெரிக்காவில் உள்ள சன்டியாகோ நகரில் பட்ட மேற்படிப்பு மாணவன் ஒருவன் மூன்று விரிவுரையாளர்களைச் சுட்டுக் கொன்றுள்ளான். பரீட்சையில் ஏற்பட்ட தோல்வி இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ரஷ்யாவில் இன்று பதவியேற்றுள்ள புதிய மந்திரிசபையில் பலமுகங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.
- பிரெஞ்சு மீனவர் ஒருவர் Piranhas என்னும் மீன்கள் இரண்டை, குளம் ஒன்றில் பிடித்துள்ளார். மனிதப் பற்களைக் கொண்ட இந்த மீன் எவ்வாறு வந்தது என்பது பற்றி பல ஊகங்கள் வெளியாகியுள்ளன.
- சி.ஐ.ஏ இன் தற்போதைய தலைவர் John Deutch இவ்வருட இறுதிக்குள் தன் பதவியை இராஜினாமாச் செய்யலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

### 16.08.96 வெள்ளிக்கிழமை

- அங்கோலாச் சமாதான உடன்படிக்கையின்படி, அங்கோலாவின் அரச இராணுவத்துடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட யூனிற்றா கெரில்லாக்களின் இணைப்பில் கால தாமதம் காணப்படுகின்றது.
- இந்தோனேசியாவில் கம்யூனிச கிளர்ச்சி வெடிக்கும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி சுகார்டோ தெரிவித்துள்ளார்.

### 17.08.96 சனிக்கிழமை

- செச்செனியாவில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட போதிலும் இன்று செச்செனியத் தலைநகர் குரோஸ்னி நோக்கிச் சென்ற ரஷ்யப் படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.
- கிரேக்க பிரதமர் சர்ச்சைக்குரிய Cypriot தீவுக்குச் சென்றுள்ளார். துருக்கிக்கும் கிரேக்கத்துக்கும் சொந்தமாக உள்ள இந்தத் தீவில் ஏற்பட்ட மோதலில் கடந்த வாரம் இருவர் கொல்லப்பட்டுளர்.

உங்கள் அபிமானப் பத்திரிகை

தமிழ்அருவி நடாத்தும் 4ஆவது ஆண்டு ஐரோப்பா ரீதியிலான

# வானம்பாடி - 96

மாபெரும் இசைப்போட்டியும் கலைஞர்கள் கௌரவிப்பும்
31.08.1996 சனிக்கிழமை. பி.ப. 2 மணிக்கு எசன் மாநகரில். HENTRI DUNANT STR-65, ESSEN. RUTTENSCHEID. (கடந்த ஆண்டு விழா நடைபெற்ற அதே இடம்)

இவ் இசை விழா இவ் வருடமும் முற்றிலும் மாறுபட்ட நிகழ்ச்சிகளுடன் மேடை ஏறுகிறது.

**சிறந்த இசைக் குழுக்களுக்கான _ 1ம் பரிசு: $500, 2ம் பரிசு: $300, 3ம் பரிசு: $200**
**சிறந்த பாடகர் பாடகி _ லண்டன் சென்று வர விமான டிக்கட்டுகள் வழங்கப்படும்.**
**சிறந்த பாடகர் யார்? சிறந்த பாடகி யார்? சிறந்த இசைக் குழு எது ?**

**நிகழ்ச்சிகள் முன்னோட்டம்:** தீபமேற்றல், மௌன அஞ்சலி, பரத அஞ்சலி, மங்கள வாத்தியம், பரத நாட்டியம், பிரதம விருந்தினர் உரை, கவிஞர் எழிலனின் 'புதியதல்ல புதுமையுமல்ல' கவிதை நூல்அறிமுகம். சிறப்பு விருந்தினர்கள் உரை.

***பங்கு பற்றும் இசைக்குழுக்கள்:-1.***
*நோர்வே* * யாழ்லைசு*, *2.* *டென்மார்க்* * யுலான்ட் *, *3.* *ஜேர்மனி* * யங்ஸ்ரார்ஸ் * (முன்சன்கிளட்பாக்), *4.* * மோர்ஸ் சுப்பர் பிறின்ஸ்*, *5.* * முத்துக்கள் மூன்று * *(பிறீமன்)*, *6.* * பேர்லின் சுசாரா *

♦ லூஸ்மாஸ்டர் புகழ் ஐசக் இன்பராஜா குழுவினரின்

## ஜேர்மனியில்-என்-பூ-மணி

♦ வாபேர்க் கலைஞர்களும் தமிழகக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் 'சொன்னாலும் நம்பமாட்டியள் சொல்லாட்டியும் விடமாட்டியள்'
♦ 'ஹலோ மாப்பிளே' (நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சி)
♦ 'பேர்லின் இளம் தளிர்களின்' முற்றிலும் மாறுபட்ட வர்ண ஒளிமழையில் துள்ளும் இளம் மலர்கள்
♦ 'யேர்மனியில் புகழ் பெற்ற நடன மணிகளின் நடன நிகழ்ச்சிகள் கண்கவர் ஒளிமழையில்' இன்னும் பல சுவையான அம்சங்கள்

தாயகத்தில் குண்டு வீச்சினால் காயமடைந்த சிறுவர்களுக்கு வைத்திய நிவாரண நிதிக்கான உதவியை வழமை போல் மேடையில் வைத்தே தமிழ் அருவி வழங்கும்.

அறிவிப்பாளர் வானொலித் தென்றல் *திரு என்.ரி.ஜெகன்* அவர்களுடன் சங்கீத சாம்ராட்சியம் *செல்வி P.பிரபாலினி* அவர்கள். மண்டபத்தில் வழங்கப்படும் கவிதைத் தலைப்பிற்கு 15 நிமிடங்களில் கவிதை எழுதி சிறப்பு பரிசில்களை வெல்லுங்கள்

***நுழைவிற்கான அன்பளிப்பு:***
தனிநபர் – 15 டி.எம், குடும்பம் 25 டி.எம் 6–10 வயது 6டி.எம், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்

***(நேர ஒழுங்கு கண்டிப்பாக பேணப்படும்)***

அனைவரையும் திரண்டு வந்து இசை மழையில் நனைந்து நமது இளங்கலைஞர்களை ஊக்குவிக்குமாறு அழைக்கின்றோம்

மேலதிக விபரங்களிற்கு: நயினை விஜயன்
தமிழ் அருவி யேர்மனி (பதிவுசெய்யப்பட்டது) **Thamilatuvi - Germany (Rgd.)**
**Tamilische Zeitung fur Kultur, Politic and sozialzesen.**
**NeuStr-171, 45355 Essen, Germany. Tel: & Fax: 0201-668809**



ஜேர்மனியில்

# உலகளாவிய தொலைபேசிச் சேவை

வீட்டுத் தொலைபேசி, காரியாலய தொலைபேசி, நடமாடும் தொலைபேசி, பொதுத் தொலைபேசி போன்றவற்றில் இருந்து 24 மணி நேரமும் வெளிநாடுகட்கு குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்!

** வரி இல்லை* *** இணைப்புக் கட்டணம் இல்லை*

*தொலைபேசி பாவித்ததற்கான முழுவிபரமும் மாதா மாதம் அனுப்பிவைக்கப்படும்*

**ஜேர்மனியிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 1.91 | 1.59 Dm/min |
| இந்தியா | 1.70 | 1.41 Dm/min |
| பாகிஸ்தான் | 1.70 | 1.41 Dm/min |

தொடர்புகட்கு: K.SRI
02301 13149 *or* 071 2490131

**சுவிசிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 1.51 | 1.26 Sfr/min |
| இந்தியா | 1.34 | 1.12 Sfr/min |
| பாகிஸ்தான் | 1.34 | 1.12 Sfr/min |

தொடர்புகட்கு: K.KANESH
032 421228- T.KUNAM 031 7312473

**நெதர்லாந்திலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 2.04 | 1.70 Nlg/min |
| இந்தியா | 1.81 | 1.51 Nlg/min |
| பாகிஸ்தான் | 1.81 | 1.51 Nlg/min |

தொடர்புகட்கு: R.RAJARATNAM -
075 6177454

**சுவீடனிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 8.07 | 6.73 Sek/min |
| இந்தியா | 7.15 | 5.96 Sek/min |
| பாகிஸ்தான் | 7.15 | 5.96 Sek/min |

தொடர்புகட்கு: S.LINGAM
016 121678

**பிரான்சிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 6.34 | 5.28 Fr/min |
| இந்தியா | 5.62 | 4.68 Fr/min |
| பாகிஸ்தான் | 5.62 | 4.68 Fr/min |

தொடர்புகட்கு: K.SRI
49 2301 13149 *or* 49 171 2490131

**இலண்டனிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 0.60 | 0.50 £/min |
| இந்தியா | 0.60 | 0.50 £/min |
| பாகிஸ்தான் | 0.60 | 0.50 £/min |

தொடர்புகட்கு: K.SRI
49 2301 13149 or 49 171 2490131

**நோர்வேயிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 8.28 | 6.90 Nok/min |
| இந்தியா | 7.39 | 6.16 Nok/min |
| பாகிஸ்தான் | 7.07 | 5.89 Nok/min |

தொடர்புகட்கு: T.KOHILAN
022 652975

**இத்தாலியிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 1922 | 1602 Lira/min |
| இந்தியா | 1708 | 1424 Lira/min |
| பாகிஸ்தான் | 1708 | 1424 Lira/min |

தொடர்புகட்கு: M.AKBAR -
49 2304 789167

**டென்மார்கிலிருந்து:**

| | | *** |
|---|---|---|
| இலங்கை | 8.92 | 7.43 DKK/MIN |
| இந்தியா | 8.10 | 6.75 DKK/MIN |
| பாகிஸ்தான் | 8.10 | 6.75 DKK/MIN |

**இதே போன்று உலகின் ஏனைய பாகங்களுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ளலாம்.**

* * * என குறிப்பிடப்பட்டது. AUGUST 1996 31ம் திகதிக்கு முன்னர் இணைந்து கொள்பவர்களுக்கான கட்டணம்.

இத் தொலைபேசி சேவை மூலம் பயன்பெற விரும்புபவர்கள் திங்கள் முதல் வெள்ளிவரை 8.00 _ 15.00 மணிவரையும் சனி, ஞாயிறு முழுநாளும் 02301 13149 (ஜேர்மனி) தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம்.

K.SRIKANDARAJAH, - HAUPT STR - 16, 59439 HOLZWICKEDE, GERMANY. - Tel & Fax: 49 2301 13149 - Mobil: (49) 0171 2490131



# சிறுவர் முற்றம்



## உங்கள் கை வண்ணம்

*இவ் வாரக் கைவண்ணம்*



**செல்வி. சர்வோதயா அருச்சுனன்**

வயது: 10 1/2 (29.9.85)
இடம்: 59939 Oisberg, Germany.



1. கல்விக்குரிய கடவுள் சரஸ்வதி.
2. சரஸ்வதி வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள்.
3. சரஸ்வதி வெள்ளை ஆடை அணிந்திருப்பாள்.
4. சரஸ்வதி வீணை வாசிப்பாள்.
5. நவராத்திரி பூசையின் கடைசி மூன்று நாட்களும் சரஸ்வதியை நோக்கி வழிபடுவார்கள்.

## குட்டிக் கதை படிப்போம்...

**இக் கதையை எழுதி அனுப்பியவர்**



**செல்வி. கஜனி ஞானராஜா**

வயது: 9
இடம்: 9425 Thal, St. Gallen, Swiss.

### ஒற்றுமையே பலம்



ஒரு காட்டில் வேடன் ஒருவன் பறவைகளைப் பிடிப்பதற்கு ஒரு வலையை விரித்து வைத்திருந்தான். சிறிது நேரத்தில் புறாக்களின் கூட்டம் ஒன்று வந்து வலையில் அகப்பட்டுக்கொண்டது. ஒவ்வொரு புறாவும் தனித்தனியாக வலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தது. முடியவில்லை; முயற்சி பெரிதும் வீணாயிற்று.

இதற்கிடையில் காகம் ஒன்று இதைக் கவனித்தது. வலையில் அகப்பட்ட புறாக்களைப் பார்த்த காகம் நேராகப் புறாக்களிடம் சென்றது.

"புறாக்களே! நீங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு முயன்று வலையோடு சேர்ந்து பறந்து சென்று உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்" என்று ஆலோசனை கூறியது. புறாக்கள் காகத்தின் யோசனைப்படி, அவை அனைத்தும் ஒன்றுபட்டு வலையையும் தூக்கிக் கொண்டு பறந்து சென்று தப்பின. வேடன் வந்து பார்த்து ஏமாந்து போனான்.

## இவர்களைத் தெரியுமா?

பிள்ளைகளே.....!

நீங்கள் ஏராளமான கார்ட்டூன்களைப் பார்த்திருப்பீர்கள். சில பிரமாண்டமான கார்ட்டூன் கதைகள் திரைகளிலும் வெளியிடப்பட்டன. அண்மைக் காலங்களில் வெளிவந்த சில முக்கியமான கார்ட்டூன் படங்களில் உலா வந்த சில முக்கிய பாத்திரங்கள்தான் இவர்கள்.

இவர்களை உங்களுக்குத் தெரியுமா? இதேபோன்று நீங்கள் பார்த்து மகிழ்ந்த கார்ட்டூன் படங்களைப் பற்றியும், அதில் வருகின்ற பாத்திரங்கள் பற்றியும் கூட எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறுவர் முற்ற சகோதர சகோதரிகள் தெரிந்து கொள்வார்கள்.

*அலாவுதீன*
ALADDIN



அலாவுதீன்

*சிங்க ராஜா*
THE LION KING



சிம்பா

*பொம்மைக் கதை*
TOY STORY



பதாத்

### எனது விடுமுறை நாட்கள்

பிள்ளைகளே! தற்போது உங்களில் பலருக்கும் பாடசாலை விடுமுறை நாட்களாகவே இருக்கும். இந்த நாட்களில் நீங்கள் உங்கள் விடுமுறையை கழிக்க எங்காவது சுற்றுலாப் பயணம் சென்றிருப்பீர்கள். உங்கள் சுற்றுலா அனுபவத்தை 10 வரிகளுக்குள் சுருக்கமாக உங்கள் கைப்பட எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் படத்தையும் சுற்றுலாப் பயண வேளையில் நீங்கள் பார்த்து ரசித்த பகுதியின் படம் இருந்தால் அதில் ஒன்றையும் எமக்கு அனுப்பிவைக்கவும்.

## - அறிந்து கொள்ளுங்கள் -

### சிம்பன்சிக் குரங்குகள்



பார்த்தீர்களா பிள்ளைகளே!

எவ்வளவு அன்போடு அம்மா சிம்பன்சிக் குரங்கு, தனது குட்டியை அரவணைத்துக் கொள்கிறது.

மனிதர்களுக்குப் பின் மிகவும் புத்தி கூர்மையான உயிரினம் சிம்பன்சிக் குரங்குகள்தானாம். அமெரிக்காவிலே ஆராய்ச்சிக் கூடமொன்றில் 200 வார்த்தைகள் வரை கதைக்கக் கற்றுக்கொண்டுள்ளனவாம் இந்த சிம்பன்சிகள். அங்கே, அதிக விருப்பமுடன் பொப் இசையை விரும்பிக் கேட்கும் இந்த சிம்பன்சிகள் தொலைக்காட்சியையும் ஆர்வத்தோடு பார்க்கின்றன. எழுதுவதற்குக்கூட இவைகளால் முடியுமாம்.

என்ன! இந்த சிம்பன்சிக் குரங்கு அறிவில் விரைவில் மனிதர்களையும் மிஞ்சிவிடும் என்று நினைக்கிறீர்களா?


## கவிதை பாடுவோம்

### வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணப் பூச்சியே
வட்டம் இட்டு பூக்களில்
என்ன தேடித் திரிகிறாய்
எடுக்கத் தேனா பார்க்கிறாய்?


மெல்லக் குழாயை வைக்கவும்
மெதுவாய் தேனை உறிஞ்சவும்
செல்ல வண்ணப் பூச்சியே
சொல்லித் தந்ததாரோ சொல்.

என்ன என்ன வண்ணங்கள்
இருக்கும் உந்தன் சட்டையில்
என்ன என்ன ஆசைதான்
எனக்கு விரலோ மோதாதே.




எழுதியவர்: வித்துவான் சி. குமாரசாமி
(நன்றி: 'சின்னப் பூக்கள்')

# ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணி



வன்னிப் பெருநிலப் பரப்பில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் அரச பயங்கரவாதத்தைக் கண்டித்தும், தமிழீழ மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான இன அழிப்பை உடன் நிறுத்தக் கோரியும்

சிறிலங்கா அரசின் சதிகாரச் செயலினால் தடுப்புக் காவலில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளீதரனை உடன் விடுதலை செய்யக் கோரியும்

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்கு சர்வதேச அரசுகள் சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கக் கோரியும்

போர்ச் சூழலில் சுவிஸ் அரசு உட்பட மற்றைய நாடுகளும் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப எடுத்த முடிவை மீள் பரிசீலனை செய்யக் கோரியும்

தமிழின அழிப்பிற்காக உலக நாடுகளிடம் அபிவிருத்திக்கென சிறிலங்கா அரசு கோரும் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குவதை நிறுத்தக் கோரியும்

பேரணியில் கலந்துகொள்ளவிருக்கும் மக்களின் நலன் கருதி ஒவ்வொரு நகரங்களிலிருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்களை அவ்வப்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பணியாளர்களுடன் தொடர்பு கொண்டு ஆசனப் பதிவினைச் செய்துகொள்ளவும்.

அத்துடன் எம்மால் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் 1500 இருக்கை வசதிகளைக் கொண்ட இரண்டு புகையிரதங்கள் முறையே சூரிச், சுக் ஆகிய இரண்டு பிரதான புகையிரத நிலையங்களிலிருந்து ஜெனீவா நோக்கி காலை 9.00 மணிக்கு புறப்படும். இப் புகையிரதங்களின் தரிப்பிடங்கள் பின்வருமாறு அமையும்.

**Zürich** Zürich, Baden, Brugg, Lenzburg, Aarau, Olten, Langenthal, Solothurn, Biel, Neuchâtel, Yverdon, Genève

**Zug** Zug, Luzern, Langnau, Burgdorf, Bern, Fribourg, Lausanne, Genève

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

*தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)*

**26.08.96 திங்கட்கிழமை**

**பிற்பகல் 2.00 மணி**

ஜெனீவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபை வரை அமைதிப் பேரணி நடைபெறும்



# புகலிட நிகழ்வுகள்

## பிரான்சில் மாவீரர்நாள் போட்டிகள் - 1996

1996 மாவீரர் நாளை முன்னிட்டு பேச்சு, ஓவியம், பாட்டுத்திறன், கவிதை, சிறுகதை போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளன. போட்டிகளில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர்களுக்கு மாவீரர் நினைவு தங்கப்பதக்கம் வழங்கப்படுவதுடன், தரமான ஆக்கங்கள் மாவீரர் நாள் சிறப்பிதழ் 1996 மலரில இடம் பெறும்.

**பேச்சுப் போட்டி:**
10 வயதிற்குட்பட்டோர்,
11-13 வயதிற்கு உட்பட்டோர்,
14 - 16 வயதிற்குட்பட்டோர்.
16-18 வயதிற்குட்பட்டோர்.

**ஓவியப் போட்டி:**
12 வயதிற்குட்பட்டோர்,
13-15 வயதிற்குட்பட்டோர்,

**பாட்டுத்திறன் போட்டி:**
7 வயதிற்குட்பட்டோர்,
8-10 வயதிற்குட்பட்டோர்,
11-13 வயதிற்குட்பட்டோர்.

**சிறுகதை, கவிதை போட்டிகள்:**
வயதெல்லை கிடையாது.

### போட்டி விதிகள்

1. பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றுவோர் தாய்மொழி, தாய மண், தாய்நிலத்து மாவீரர்களை நினைவு கொள்வதாக தமது பேச்சினை ஆக்கிக் கொள்ள வேண்டும்.
2. பாட்டுத்திறன் போட்டியில் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் மாத்திரமே பாடப்பட வேண்டும்.
3. ஓவியம், சிறுகதை, கவிதை என்பவற்றின் உள்ளடக்கம் சுயாதீனமாகத் தீர்மானிக்கப்படும்
4. ஓவியம், சிறுகதை போன்ற ஆக்கங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். பேச்சு பாட்டுத் திறன் போட்டிகளுக்கான 'தெரிவுத் திகதி' பின்னர் அறிவிக்கப்படும். அனைவரும் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவோ, ஒருங்கிணைப்புக் கிளைப் பிரதிநிதிகள் மூலமாகவோ, தபால் மூலமாகவோ பெற்று, பின்னர் அனுப்பி வைக்கலாம்.
(பேச்சு, பாட்டுத்திறன் போன்ற போட்டிகளில் பங்கெடுப்போரை தயார்படுத்துவதற்கு பெற்றோர்கள் உதவிபுரியவும்)
5. பிரான்சில் இருந்து மட்டுமே போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.
6. விண்ணப்ப முடிவுத் திகதி: 30.09.1996

மேலதிக விபரங்களுக்கு 43 58 11 42 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## ✝ தமிழ்த் திருப்பலி ✝

காலம்: 25.08.96 ஞாயிறு பகல் 12 மணி
இடம்: புனித மார்த்தாள் ஆலயம்
M°: Aubervilliers - Pantin 4 Chemins

நமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் கலவரங்களினால் அநியாயமாக உயிரை இழந்த அனைவருக்காகவும் இத் திருப்பலியில் விஷேசமாக செபிக்க உங்களை அழைக்கிறேன்.

தொடர்புகளுக்கு: அருட்திரு. செபமாலை துரம் அ.ம.தி
Tel: (1) 43 57 23 02


## "சின்னப் பூக்கள்" சிறுவர் பாடல்கள்

'சின்னப் பூக்கள்' சிறுவர் பாடல்கள் அடங்கிய சிறுவர் நூலையும், ஒலியிழை நாடாவையும் நோர்வே முத்தமிழாலயம் வெளியிட்டுள்ளது. 21 பாடல்களை உள்ளடக்கிய இச் சிறுவர்களுக்குரிய பதிவுகள் தமிழ் கற்றுக் கொள்ளும் சிறுவர்களுக்கு மிகவும் பயனுடையவையாகும்.

"வாருங்கள், வாருங்கள், குழந்தைகளே!" என்ற அழைப்புடன் தொடங்கி "அச்சமில்லை அச்சமில்லை" என்ற பாரதிப் பாடல்வரை அனைத்துப் பாடல்களும் சிறுவர்களோடு நெருக்கமாக உறவாட முயல்கின்றன. ஒலியிழைப் பாடல்களும் சிறுவர்களைக் கேட்கத் தூண்டும் படியாகவே தொகுக்கப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு:
முத்தமிழ் அறிவாலயம்
Tamil Norsk Foraning
Herslebs gt - 43
0578 Oslo, NORWAY.

## விடுதலைப் புலிகள் ஜேர்மனிக் கிளையின் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

## தியாகி திலீபன் நினைவுப் பேச்சுப் போட்டி-1996

### பேச்சுப் போட்டிக்கான விதிகள்

* போட்டியில் பங்குபற்றுவோர் 05.09.96 ற்கு முன்னதாக கீழே உள்ள முகவரிக்கு மாதிரி விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டும்.

* பரிசிற்குரியவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்புச்சாட்சிப் பத்திரம் கேட்கப்படும்.

* அனைத்துப் பிரிவுகளும் 'தியாகி திலீபன்' என்னும் தலைப்பிலேயே பேச்சுக்களை நடாத்துதல் வேண்டும்.

* போட்டியாளருக்கான நேர எல்லையும் வயது எல்லையும்

கீழ்ப் பிரிவு – மூன்று நிமிடங்கள்
(01.01.86 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தோர்)
நடுப்பிரிவு – ஐந்து நிமிடங்கள்
(31.12.80-ற்கும் 01.01.86-ற்கும் இடையில் பிறந்தோர்)
மேற்பிரிவு – ஏழு நிமிடங்கள்
(31.12.76-ற்கும் 01.01 81-ற்கும் இடையில் பிறந்தோர்.
அதி மேற்பிரிவு – பத்து நிமிடங்கள்
(31.12.76 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தோர்)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Kulturelle Organaization der
Tamilien e.V
Postfach 1160
37441 Bad Sachsa.
என அறிவிக்கப்பட்டுள்ளது.





## சோலைக் கலைமாலை _ 96

செஞ்சோலை, அறிவுச் சோலை அமைப்புக்களின் யேர்மன் கிளை, இந்த ஆண்டு யேர்மனியின் பல பாகங்களிலும் நடாத்திய 'சோலைக் கலைமாலை' நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஒளியிழை நாடாவாக வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழாலய கீதம் ஒலி நாடா

உலகத் தமிழர் இயக்கம் யேர்மனியின் அனைத்துப் பாகங்களிலும் நடாத்தும் தமிழாலய கல்வி நிலையங்களில் இசைக்கப்படும் தமிழாலய கீதம் ஒலிநாடாவில் வெளியாகியுள்ளது.





அண்மையில் சுவிசில் நடைபெற்ற தேசிய மாவீரர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின்போது......








## நெதர்லாந்து Roermond நகரில்

நெஞ்சை நெகிழவைக்கும் சம்பவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இரு தமிழீழத் திரைப்படங்கள் அகன்ற வெண்திரையில்

**முகங்கள்**
(எங்கள் மண்ணின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட முழுநீளப்படம்)

**உயிர்ப்பு**

**காலம்:** 25.08.96 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி
**இடம்:** De Wingerd Zaal, Nassau Straat-79, Roermond
(Roermond வைத்திய சாலைக்கு அருகமையில்)


### சூரிச் புகையிரத நிலையத்திலிருந்து ஜெனீவா நோக்கிச் செல்லும் புகையிரத நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| Zurich | ab | 10.00 |
| Dietikon | ab | 10.23 |
| Baden | ab | 10.33 |
| Brugg | ab | 10.42 |
| Lenzburg | ab | 10.58 |
| Aarau | ab | 11.09 |
| Olten | ab | 11.21 |
| Niederbip | ab | 11.30 |
| Solothum | ab | 11.48 |
| Grenchen Sud | ab | 11.58 |
| Biel | ab | 12.18 |
| Neuchatel | ab | 12.39 |
| Yverdon | ab | 13.03 |

ஊர்வலம் முடிவடைந்த பின்பு ஜெனீவாவில் இருந்து 18.25 மணிக்கு சூரிச்சை நோக்கி புகையிரதம் புறப்படும்.

### சுக் புகையிரத நிலையத்திலிருந்து ஜெனீவா நோக்கிச் செல்லும் புகையிரத நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| Zug | ab | 09.41 |
| Luzern | ab | 10.09 |
| Langnau | ab | 11.04 |
| Burgdorf | ab | 11.51 |
| Bern | ab | 12.15 |
| Fribourg | ab | 12.37 |
| Lausanne | ab | 13.00 |

ஊர்வலம் முடிவடைந்த பின்பு ஜெனீவாவில் இருந்து 18.25 மணிக்கு சுக் நோக்கி புகையிரதம் புறப்படும்.

# சாளரம்

## அழகெனும் ஓவியம்

என் நினைவை மீட்டிப் பார்க்கிறேன்
என் மகன் பிறந்த அந்த நாள்; அந்தக் கணம்
பிரசவ வேதனை முடிந்த மறுகணம்....
தாதிமார்கள் குழந்தையைத் தூக்கி
என்னவளின் மார்பில் கிடத்துகிறார்கள்
அவ்வளவு தான்.
அவள் ஆர்ப்பரித்தெழுந்து குழந்தையின்
உச்சந்தலையிலும் நெற்றியிலும் கன்னத்திலென
மாறிமாறி முத்தமிடுகிறாள்
அவள் உதடுகளில் இரத்தம்;
விழிகளில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர்;
முகத்தில் மகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பு
என் விழிகள் விரிந்து நீர் திரம்பும்;
மனதில் உணர்வுகளின் கொந்தளிப்பு

குழந்தை

ஆண், பெண் என்கிற இரு ஆத்மாக்களின் அற்புதமான சிருஸ்டிப்பு, மனித, வர்க்கத் தொடர்ச்சியின் இணைப்பு

"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்டும்
உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை வடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறும் மக்களை யில்லோர்க்குப்
பயக்குறையில்லை தாம் வாழுநாளே" என்கிறது

புறநானூறில் வரும் மக்கட் பேறு பற்றிய பாடல்.

குழந்தைப் பேறு

மனித சிருஸ்டியில் ஒரு அற்புதமான நிலை. ஒரு தாய்க்கு குழந்தைதான் ஆதியும், அந்தமும்,தாய் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவது எல்லையற்ற அழகு கொண்டது. தாயின் தாலாட்டினைக் கேட்காமல் குழந்தைப் பருவத்தினைக் கழித்த மனிதன் எங்காவது இருக்க முடியுமா?

"ஆராரோ.. ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்....?"

எனும் தாலாட்டிலிருந்து ஒவ்வொரு தாலாட்டுப் பாடலிலும் தாய் தன் மனோபாவத்திற்கேற்ற படி குழந்தையைப் புகழ்ந்து பாடுவாள்.

எனக்கு என் குழந்தைப் பருவம் நினைவிற்கே வர மாட்டேனென்கிறது. என் மகனின் குழ்ந்தைப் பருவத்தினைப் பார்க்கிறபோது என் குழந்தைப் பருவத்தினை என்னால் ஓரளவு ஊகிக்கத்தான் முடிகின்றது. இந்தப் பருவத்தில் அந்தக் குழந்தை தன் தாய்க்கும், தந்தைக்கும் எவ்வளவு பூரிப்பைக் கொடுக்கிறது. தன் ஒவ்வொரு அசைவுகளினாலும் தன் பெற்றோர்களை அந்தக் குழந்தை ஆகர்ஷிக்கிறது.

"சின்னஞ் சிறு கிளியே -கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே- உலகில்
ஏற்றம் புரிய வைத்தாய்!" என பாரதியார் கண்ணம்மா என் குழந்தை என்னும் பாடலில் பாடியதும் அதனாற் தானோ? குழந்தை பிறந்ததினால் அந்தத் தாயார் அடையும் பூரிப்பினை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. குழந்தை தான் பிறந்ததினால் தன்னைத் தாலாட்டும் ஜீவனுக்கு 'அம்மா' என்கிற மருந்தினைச் சூட்டி விடுகிறது.

இந்த மகுடத்தினால் மட்டும் அந்தத் தாய் மகிழ்ச்சி கொள்கிறாளா? இல்லை; அந்தக் குழந்தையின் ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு இயக்கமும் அவளைப் பூரிப்பு அடையச் செய்கிறது. ஒரு தாய்க்கு குழந்தை அழுதைப் போன்றது. தொட்டிலில் இருக்கும் குழந்தை கண் சிமிட்டி, கை ஆட்டி, ஆர்பரித்துச் சிரிக்கும் கணத்திலிருந்து அது இருந்து, தவழ்ந்து, எழும்பி, நடந்து ஓடி..., இப்படி குழந்தையின் ஒவ்வொரு அசைவிலும் அந்தத் தாய் பூரிப்படைவதும், அவளின் உள்ளங் குளிர்வதும் எவ்வளவு அழகு. அந்த உள்ளக் குளிர்ச்சியில் அவளின் மனம் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது. பாரதிக்கு கண்ணம்மா எப்படி பிள்ளைக் கனியமுதாகி பேசும் பொற்சித்திரமாகிறதோ, அப்படித்தான் ஒரு தாய்க்குக் குழந்தையும்!

"பிள்ளைக் கனியமுதே -கண்ணம்மா!
பேசும் பொற்சித்திரமே!
அள்ளியணைத்திடவே-என் முன்னே
ஆடி வருந்தேனே!

ஓடி வருகையிலே - கண்ணம்மா!
உள்ளங்குளிருதடீ
ஆடித்திரிதல் கண்டால்-உன்னைப் போய்
ஆவிதழுவுதடீ

உச்சிதனை முகந்தால்-கருவம்
ஓங்கி வளருதடீ
மெச்சி யுனை யூரார்-புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ

கன்னத்தில் முத்தமிட்டால்-உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ;
உன்னைத் தழுவிடிலோ-கண்ணம்மா!
உன்மத்த மாகுதடீ"

இந்த நிலைகளில் குழந்தையைப் பெற்றெடுத்த ஜீவனின் உள்ளத்துக் கிளர்ச்சியை பாரதி எவ்வளவு அழகான வார்த்தைகளில் சொல்லியிருக்கின்றார். இந்த ஒவ்வொரு நிலைகளிலும் தாய் தன்னை வருத்திக் கொண்டிருக்கும் கவலைகளை எல்லாம் மறந்து விடுகின்றாள். மாறாக அவளுக்கேற்படும் பூரிப்பினை விட வேறென்ன வேண்டும். அந்தளவுக்கு ஒரு குழந்தையின் ஸ்பரிசம் அந்தத் தாயினை எல்லையற்ற மகிழ்ச்சி நிலைக்கு ஆளாக்குகிறது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் குழந்தையின் முகஞ்சி வந்து அதன் கண்களில் நீர் மூடியிருந்தால் போதும், அந்தத் தாய் படும் அவஸ்தை அவள் மனது சஞ்சலப்பட்டு வருந்துகிறது. அந்தளவுக்கு ஒரு குழந்தையின் உயிரும் தாயின் உயிரும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றது.

"சற்று முன் முகஞ் சிவந்தால் - மனது
சஞ்சலமாகுதடீ!
நெற்றி சுருங்கக் கண்டால் எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ

உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடீ
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?

தாயிற்கும் குழந்தைக்குமிடையிலான உணர்வுகளின் பிணைப்பினை விளக்க இதனைவிட அழகான வரிகள் எந்த இலக்கியத்திலும் இருக்க முடியாது. அந்தளவுக்கு உணர்வுமயமான சொற்களைக் கொண்ட அழகழகான வரிகள்.

ஒரு குழந்தையின் முதல் வார்த்தை

ம்மா என்கிற மழலைச் சொல் பின்னரது அம்மா என்றாகித் தொடருகின்ற ஒவ்வொரு மழலைச் சொல்லுகலாலும் தன் அன்னையின் துன்பங்களினைத் தீர்த்திடுமாம் குழந்தை. அந்தளவு இனிமை கொண்டது இந்த மழலைச் சொல். மழலையின் இனிமையோடு முல்லைப்பழகினை நிகர்த்த சிரிப்பும் ஒன்று சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமா?

எப்பொழுதோ சொல்லப்பட்ட கதைகளினைவிட குழந்தையின் இன்பக் கதைகள் மேலானவை. ஏனெனில் அவைகள் உயிருள்ள கவிதைகள். அதனைப் போன்றுதான் கள்ளங்கபடமற்று நேசம் கொள்வதிலும் அன்பு காட்டுவதிலும் குழந்தைக்கு நிகரான தெய்வம் இவ்வுலகில் எங்குதானுண்டு. இதனைத் தான் பாரதி தன் அற்புதமான வார்த்தைகளினைக் கொண்ட அழகான ஓவியமாய் தீட்டியுள்ளார்.

சொல்லு மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்கந் தவிர்த்திடுவாய்

இன்பக் கதைகளெல்லாம் உன்னைப் போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

மார்பிலணிவதற்கே உன்னைப் போல்
வைர மணிகளுண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கே - உன்னைப் போல்
செல்வம் பிறிதுமுண்டோ?

இதயத்தில் அணிந்து எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் நினைக்கப்படும் வைர மணிகள்தான் இந்தக் குழந்தைகள். இவர்கள் எங்களை ஆகர்ஷிப்பவர்கள். எங்கள் கவலைகளை மறந்து சிரிக்க வைப்பவர்கள். ஒவ்வொரு குழந்தையும் நாம் கற்றுக் கொள்ளக் கூடிய அழகான புத்தகங்கள். பூக்களால் உயிர் பெற்று பூக்களுக்கே உயிர் கொடுத்து பூக்களையே வட்டமிட்டுப் பறக்கின்ற வண்ணாத்துப் பூச்சிகள் தான் இந்தக் குழந்தைகள்.

இன்று
என் மகன் வளர்ந்து விட்டான்
குழந்தை என்கின்ற நிலையில் விலகி
சிறுவனென்கிற நிலையினை நோக்கி
முதிர்ச்சியடைகிறான்
அந்தோ!
காலம் தான் எவ்வளவு விரைவாக நகர்கிறது
அவன் குழந்தையாகவே இருந்திருக்கக் கூடாதா?
இப்போது
எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா?
நானொரு பெண்ணாகி
ஒரு கருவினை வயிற்றில் சுமந்து
ஒரு குழந்தையைப் பிரசவிக்க வேண்டும்
என்பது தான்
என்ன சிரிக்கின்றீர்களா?
ம்...... சிரியுங்கள்
நன்றாகச் சிரியுங்கள்
என் நினைவில்
என் கனவில்
நான் ஆயிரமாயிரம் குழந்தகளைப் பிரசவிப்பேன்!

*தொகுப்பு வர்மன்*


விரைவில்

'காந்தி தேசத்தின்
மறுபக்கத்தைத்' தொடர்ந்து
காண்டீபன் எழுதும்

பின்தளக் கனவு



ஈழமுரசு சந்தா விபரம்

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 250 பிரெஞ்சு பிராங் ☐
12 மாதம் → 500 பிரெஞ்சு பிராங் ☐

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 260 பிரெஞ்சு பிராங் ☐
12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங் ☐

காசுக்கட்டளை, காசோலையை, 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
TEL: 40 37 63 63 / FAX: 40 37 64 64

# பெண்கள் பல விதம்

## ஜெயலலிதா வயிற்றில் புளி கரைக்கும் புலனாய்வு அதிகாரி

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தன் ஆட்சிக் காலத்தில் செய்த மோசடிகள் தொடர்பாக நாளுக்கு நாள் புதிய செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஜெயலலிதா சேர்த்து வைத்திருக்கும் ஏராளமான சொத்துக்கள் குறித்து துப்பறிந்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரி லத்திகா சரண்.



எளிமையான தோற்றம் கொண்ட இவர், அமைதியான சுபாவம் கொண்டவராக இருந்தாலும் கடமையில் மிகவும் கண்டிப்பானவராம். சிறு வயதில் இருந்தே புலனாய்வுத் துறை மீது தீவிர ஈடுபாடு கொண்ட லத்திகா தனது எண்ணப்படியே காவல் துறையில் நுழைந்தவர்.

காவல்துறையில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளும் இவர், ஒரு ஆண் அதிகாரியின் திறமைக் குறைவு அவரது சொந்தக் குறைபாடாக எடுத்துக் கொள்ளப்படும்போது, மாறாக ஒரு பெண் அதிகாரி சற்று மந்தமாகச் செயற்பட்டாலோ அதனை பெண் அதிகாரிகளின் திறமைக் குறைவு என ஒட்டுமொத்தமாகக் குற்றம் சாட்டப்படுவதையும் கண்டிக்கின்றார்.

தமிழக அரசின் லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறையின் துணை ஆணையாளராகத் தற்போது கடமையாற்றும் லத்திகா சீருடை அணிவது அரிது. காதல் திருமணம் செய்து கொண்ட லத்திகாவிற்கு பன்னிரண்டு வயதில் ஒரு மகள் இருக்கிறார்.

ஜெயலலிதாவின் சொத்துக்கள் பற்றி தீவிரமாகப் புலனாய்வு செய்து கொண்டிருக்கும் இவருக்கு, ஆர்வமில்லாத துறை ஒன்று உள்ளதென்றால் அது சமையற்கலை. எப்போதாவது அபூர்வமாக சமயலறைக்குள் நுழையும் லத்திகா நகைச்சுவைப் படங்களை மட்டுமே விரும்பிப் பார்ப்பாராம்.

## ஒரு பெண் - பல கணவர் இன்றும் உயிர்வாழும் உறவுமுறை

இந்தியத் திருமணச் சட்டத்தின்படி ஒரு ஆண் பல தாரங்களை மணம் முடிப்பது குற்றமாகக் கணிக்கப் பட்டாலும் கிராமப்புறப் பகுதிகளில் இன்றும் இவ்வாறான திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. கிராமப் பஞ்சாயத்துச் சபைகள் கூட இவ்வாறான மண நிகழ்ச்சிகளை நடாத்தி வைப்பது சட்டத்துக்கே சவாலாகி வருகின்றது.



பல பதிகளை உடைய குடும்பமொன்று

ஆனால் இமாச்சல் பிரதேசத்தில் வழக்கிலுள்ள முறையோ வித்தியாசமானது. இங்கு ஒரு பெண் பல ஆண்களை மணம் முடிப்பது சாதாரண நிகழ்வாக காணப்படுகின்றது. ஏறக்குறைய ஐயாயிரம் வருடங்கள் தொன்மை வாய்ந்த இம் மரபினை மறந்து விடுவதற்கு மலைவாசி மக்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர்.

இம் முறைப்படி ஒரே குடும்பத்திலுள்ள அனைத்து சகோதரர்களுக்கும் ஒரு பெண்ணே மனைவியாகப் படுகின்றார். கணவர்மாரின் தேவைகளை கவனிப்பதிலிருந்து அவர்களுக்கான வாரிசுகளை பெற்றுக் கொடுப்பதும் இப் பெண்மீதே சுமத்தப்படுகின்றது.

பல பதிகளைக் கொண்டிருக்கும் இப் பெண்ணிற்குச் சொந்த விருப்பு, வெறுப்பு எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய உறவுமுறைகள் சமூகத்தின் சாபக்கேடு என வர்ணிக்கும் பெண்ணியல்வாதிகளால் கூட இதனை ஒழிக்க முடியாதுள்ளது. சமூகத்தின கல்வித் தரத்தை மேம்படுத்துவதன் மூலமாகவே இம் மரபினை அகற்ற முடியுமெனவும் சீர்திருத்தவாதிகள் கருதுவதால் தற்போது இதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பல பதிமண முறைக்குள் பிரவேசிக்கும் ஒரு பெண் தனது முப்பதாவது வயதிற்கிடையில் 10, 12 குழந்தைகளுக்கு தாயாகி விடுவதால் அப் பெண்ணின் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டாலும் கணவர்மாரினது தேவைகளையும் கவனித்துக்கொள்ள பணிக்கப்படுகிறார்.

இச் சமூகத்தின் கல்வித் தரம் மேம்பாடு அடையுமானால் இளைய தலைமுறையினர் பல பதி திருமண முறைக்கு ஒரு 'இருண்ட காலத்தை' வழங்குவார்கள் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள் சீர்திருத்தவாதிகள்.

## தாய்ப்பால் கொடுத்த அன்னையருக்கு தமிழக அரசு சிறப்பு கௌரவம்

தாய்க்கும், சேய்க்கும் இடையேயான மென்மை உறவு முறைக்கு தாய்ப்பாலூட்டும் போதுதான் அடித்தளம் அமைக்கப்படுகின்றது. இளம் அன்னையரிடையே காணப்படும் நாகரிக மோகமும், பொருளாதார நெருக்கடியினால் வேலைக்குச் செல்லும் தாய்மாரும் தமது பிஞ்சுக் குழந்தைக்கு இம் முக்கிய கடமையை செய்யத் தவறிவிடுகின்றனர்.

தாய்ப்பால் குழந்தைக்கான ஆகாரம் மட்டுமல்ல, நோய் எதிர்ப்புக் கவசமாகவும் தொழிற்படுகின்றது. தற்போது உலகில் தாய்ப்பாலூட்டும் முறை வேகமாக அருகி வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாத முற் பகுதியில் உலகளாவிய அளவில் தாய்ப்பால் வாரவிழா கொண்டாடப்பட்டது. சென்னை நகரில் கொண்டாடப்பட்ட இவ் விழாவில் தொடர்ச்சியாக பதினெட்டு மாதங்கள் தமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டிய அன்னையர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

முதலமைச்சர் கருணாநிதியின் துணைவியார் தயாளு அம்மாள், தாய்ப்பாலூட்டிய அன்னையரையும், தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவத்தை மக்களிடையே பரப்பிய தொண்டர்களையும் பாராட்டியதுடன் பரிசுகளையும் வழங்கினார்.


Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்
Dussel dorf INDO - CEYLON HOUSE ம்
இணைந்து வழங்கும்
காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை
தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள. முந்துங்கள்
இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

* 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உ.பருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் ரோஸ் பாண், பணிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், ஹஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
* ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிறீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
* உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புக்கள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
* எமது விசேட சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.(அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
* பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்பட பிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 41460 Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278170

INDO - CEYLON HOUSE
Worringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382
(ADV)




## தணிக்கை செய்யாதது ஏன்

வே.சிறிஸ்கந்தராஜா
93000 BOBIGNY
FRANCE

ஆசிரியருக்கு,

ஒகஸ்ட் 1–7 ஈழமுரசில், ச.தில்லைநடேசன் நடத்திய ஆய்வில் அவர் நாட்டுக் கூத்தை மாத்திரம் ஆய்வு செய்தாரா அன்றி சாதியத்தையும் இடத்தின் மரபையும் ஆய்வு செய்தாரா? அவர் போன்றவர்கள் சாதியம் பற்றி எதை எழுதினாலும் பத்திரிகை ஆசிரியர் தணிக்கை செய்வது ஆசிரியரின் கடமை. நாட்டில் சாதி பார்ப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறதே.

சாதியும் சாத்தானும் சவக்குழியில்
புதையும்கால் எப்போது?
நீதிபடவில்லையோ உங்களுக்கு
பாதிக் கல்வியைக் கற்றதனால்
வந்த பயனோ இது?

## ஈழமுரசு வாசகர்களை இழக்கத் தயாரா?

ஆசிரியருக்கு,

கடந்த 01–07 ஒகஸ்ட் இதழில் வட்டுக்கோட்டைக் கூத்தைப் பற்றி தில்லைநடேசன் என்பவர் எழுதிய கட்டுரையை வாசித்து நாம் அதிர்ச்சி அடைந்தோம். நம் தமிழீழ நாட்டில் சாதீயம் பேசுவது, எழுதுவது என்பன தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது. இதைவிட தமிழீழ விடுதலைப் போர் வளர்ச்சி கண்டுவருகின்ற ஆரம்ப காலத்தில் இருந்தே இன்றுவரை சாதீயம் என்பது ஒழிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது.

உண்மையான தமிழீழ விடுதலை விரும்பிகள் இப்படியான சாதீயம் தொடர்பான கட்டுரைகளை எழுத முன்வர மாட்டார்கள். அவ்வாறு எழுதியிருந்தாலும் நீங்கள் எவ்வாறு பிரசுரிக்க முடியும்? அவை முற்றுமுழுதாக உண்மையா அல்லது பொய்யா என்று வட்டூர் மக்களிடம் விசாரித்தீர்களா?

இது தொடர்பாக யாரையும் கேட்காமல், சாதீயம் என்றால் என்னவென்று அறியாத எம் தமிழீழச் சிறுவர் சிறுமியர்க்கு இக் கட்டுரை மூலம் சாதீயத்தைப் புகட்டுகிறீர்களா?

இன்றைய காலகட்டத்தில் தமிழீழ நாட்டில் சாதியைப் பற்றிப் பேசிய பலர் .தமிழீழ நீதித் துறையினரால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

மேலும் அக் கட்டுரையில் நாவலர் பெருமான் பற்றியும், வித்தியானந்தன் பற்றியும் எழுதியிருந்தார். ஏன் திருவள்ளுவர், ஔவையார் காலத்திற்கு முன்பிருந்தே சாதீயம் தோன்றியது. அப்படியிருக்க பின் வந்த நாவலர் பற்றியும், வித்தியானந்தரைப் பற்றியும் எழுதிய கட்டுரையாளர் தமக்குள்ளேயே உயர்வு தாழ்வுகள் பார்த்து அடிதடி நடந்த சம்பவங்களையெல்லாம் எழுதாமல் சங்கரத்தையைப் பற்றி மட்டும் எழுதியிருந்தார். எதைப் பற்றியும் அறியாத ஈழமுரசு அக் கட்டுரையை எப்படிப் பிரசுரிக்க முடியும்?

இதன் மூலம் ஈழமுரசு தனது வாசகர்களாகிய வட்டூர் மக்களை வேதனையடையவும் கவலை கொள்ளவுமே செய்துள்ளது.

நாட்டுக்கூத்தில் தொடங்கி சாதீயத்தைப் பற்றி எழுதியவரின் கட்டுரையை பிரசுரித்து ஈழமுரசின் குற்றமே.

இப்படியானவர்களின் கட்டுரைகளைப் பற்றி விரிவாக ஆராயாமல் பிரசுரிப்பதன் மூலம் ஈழமுரசு தன் வாசகர்களை இழக்கத் தயாரா?

து.அருணோதயன்
பாரிஸ்,
பிரான்ஸ்

## கொடுப்பவனை கும்பிட்டு வணங்கு

30179 HANOVER
GERMANY

அன்புள்ள ஆசிரியர்க்கு,

வணக்கமும் வாழ்த்தும்;

சுவிசில் அதிஸ்டலாபச் சீட்டொன்றின் மூலம் முதலாவது பரிசாகக் கிடைத்த 39,000 சுவிஸ் பிராங்குகள் பணத்தை தாயகத்து மக்களின் புனர்வாழ்வுக்குக் கொடுத்த வை.சந்திரன் என்ற தமிழ் மகனுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்காக இக் கவிதையை அனுப்புகிறேன்.

கூடவே எதையும் எப்போதும் யாருக்கும் கொடுக்காத சிலர் தமக்குக் கிடைத்தாலும் இப்படித்தான் செய்வோம் எனச் சொல்கிறார்கள். அவர்களைக் கடிப்பதற்காகவே காகம் சொன்ன கதையை எழுதியுள்ளேன். உதவுபவர்களுக்கு பாராட்டாகவும் கதைப்பவர்களுக்கு மட்டும் கடியாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

*முன்பு, எது உயரம் எனக்கேட்டால்*
*பனை என்பேன்.*
*இப்பொழுது*
*அதனைவிட உயரத்தில் நிற்கும்*
*உன் பெயரைச் சொல்வேன்.*

*தாய்க்கு,*
*தான் பிறந்த மண்ணுக்கு*
*தன்னோடு வாழ்ந்த தன் மக்களுக்கு*
*கொடுப்பதெல்லாம், பெருமை மிகுந்த*
*கடமை என்றுணர்ந்து கொடுத்தவனே!*
*உனக்கென் முத்தமடா!*

*காசு கிடைத்தால்*
*வங்கியில் போடலாம்.*
*இல்லை என்றால்*
*வட்டிக்கு விடலாம்*
*அதுவும் இல்லையேல்*
*கார் வேண்டலாம்*
*நகைகள் வேண்டி*
*கழுத்தை நிரப்பலாம்*
*வீடு வேண்ட*
*முதலாய் வைக்கலாம்...*
*இல்லவே இல்லையது*
*எந்தன் மக்களுக்கு என்றளித்த*
*உந்தனுக்கு என்னுடைய பாராட்டு.*

### காகம் சொன்ன கதை

காகத்துக்குப் புதையல் கிடைத்தது.
கிடைத்த புதையலை எடுத்துக்கொண்டு போய்
அது பறவைகளிடம் கொடுத்தது.
வறுமையில் இருந்த அவைகளின் துயர்துடைக்க
பேருதவியாய் இருந்தது அப் புதையல்.
பறவைகள் காகத்துக்கு நன்றி கூறின.
ஒரு காகம் புளுகாய் சொன்னது,
'எனக்கும் புதையல் கிடைத்தால்
இப்படித்தான் செய்வேன்'
இதைக் கேட்ட பெரிய காகம் ஒன்று
உரத்துச் சொன்னது–
'கதைப்பவனுக்கு முகத்தில் காறித் துப்பு
கொடுப்பவனுக்கு முகத்தை கும்பிட்டு வணங்கு'

இளவாலை அன்ரன் யூட்

## கன்னிகாதானத்தை விவாதிப்பது வீண் வேலை

ஆசிரியருக்கு,

14.08.96 ஈழமுரசில் மதிவதனி எழுதிய கன்னிகா தானம் செய்வது சரியாகுமா என்ற கருத்துக் களம் வாசித்தேன்.

பழமைவாதச் சிந்தனைகளில் ஊறிப் போய் இருக்கின்ற ஆண்களின் சிந்தனையை மாற்றியமைப்பதில் இருந்தே பெண்கள் தம்முடைய உரிமைப் போரின் முதற்படியைத் தாண்ட முடியும்.

இக் கருத்துக் களத்தில் கன்னிகா தானம் செய்வது சரியாகுமா? என்கிற தலைப்பை விட, இன்று எமது சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள திருமண முறை சரியாகுமா? என்ற தலைப்பில் விவாதித்திருந்தால் பெண் அடக்குமுறையில் கன்னிகா தானம் ஒரு அம்சமே என்பதை அறிந்திருக்கலாம்.

எப்போதும் ஆண்களைக் குறை கூறுவதை விடுத்து தன் தலைவிதியைப் பெண்ணினம் தான் முடிவு செய்ய வேண்டும். இதற்கு கன்னிகாதானத்தை விவாதிப்பதைவிட, மூலப் பிரச்சனையான தமிழினத் திருமண முறையை விவாதிப்பதே ஆரோக்கியமான செயலாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இப்படிக்கு
எஸ்.சுபாஸ்
TOOTING, LONDON

## மனதை நெகிழவைத்த குறு நாவல்

பேர்லின்,
ஜேர்மனி

ஆசிரியர் அவர்கட்கு,

தங்கள் பத்திரிகையில் தொடர்ந்து இடம்பெற்ற குறுநாவலான 'சரஜிவோவில் ஒரு பொம்மை' யைத் தொடர்ந்து வாசித்தவர்களுள் நானும் ஒருவன்.

கதையின் முடிவில் என்னை அறியாமலே ஒரு சோகம் என்னுள் உருவாகியது. அதில் வருகின்ற குழந்தையைப் போல் எமது மண்ணிலே எத்தனை குழந்தைகள் உருவாகி இருப்பார்கள்.

கடைசியாக நவாலி தேவாலயத்தினுள்ளும் கூட பல குழந்தைகள் தாய் தந்தையரை இழந்திருப்பார்கள்.

மனதை நெகிழ வைத்த குறுநாவலை மொழிபெயர்த்த சகோதரி மல்லீஸ்வரி ஆதவனுக்கு எனது பாராட்டுக்கள்.

இப்படிக்கு
தில்லைக்காந்தன் கிருஷ்ணா

## மொழிபெயர்பாளருக்கு வாழ்த்துக்கள்

பாரிஸ் 19,
பிரான்ஸ்

ஆசிரியருக்கு,

ஈழமுரசில் அண்மையில் தொடராக வெளிவந்த சரஜிவோவில் ஒரு பொம்மை குறுநாவல் வாசித்தேன். ஒரு அன்னியச் சூழலின் கதையாக இருந்தாலும், போரும் அதன் அனர்த்தங்களும் துயரங்களும் அதனூடு எழுந்த நிரந்தர அவலங்களும் எமக்கு புதிதல்லவே.

அதனால்தானோ என்னவோ ஒரு சொந்த அனுபவமாக அந் நாவல் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தக் குழந்தையும், அதனது பேசும் பொம்மையும், அவர்களது களவும் அனுபவமும் எல்லாமும் எமதாகி நின்றது.


மொழிபெயர்ப்பாளருக்கு வாழ்த்துக்கள். இதனை தொகுத்து வெளியிட்டால் பயனுள்ளதாக இருக்குமல்லவா!

அன்புடன்
க.சுதா

எமது புதிய வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

புதிய Piragash Import & Export இன் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம், திருமண கூறைச் சேலைகள், பனாரிஸ், மைசூர் சில்க், ஆடவர் நங்கையர்களுக்கு ஏற்ற ரெடிமேற் ஆடைகள், பட்டு வேட்டிகள், சகல எவர்சில்வர்ச் சாமான்களுக்கும், நீங்கள் விரும்பிய வடிவமைப்பில் 22 கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கும்

இறக்குமதி செய்யப்பட்ட
பசுமையான மரக்கறி வகைகள்,
அத்துடன் சகல நாடுகளுக்குமான
பயணச் சீட்டு ஒழுங்குகளும்
செய்து
கொடுக்கப்படும்.



அம்பாள்
ஆசியன் சொப்
Ambal Asian Shop
(PIRAGASH IMPORT & EXPORT) Mainzer land Str - 111, 60329 Frankfurt. M, Germany - Tel: 069/23.12 77, Order: 6701042

(ADV)

# பத்தோடு பதினொன்று

## இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும்

# முன்னாள் குழுத்தலைவர் இன்றைய மேயர்

ஜேர்மனியில் இருந்து பிலிப் பைன்ஸ் நாட்டிற்கு வந்து குடியேறிய ஒருவரின் பேரன் EDWARD HAGERDORN இளைஞனாக இருந்தபோது குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் வீதிச் சண்டைகளில் ஈடுபட்டு இர




-ண்டு பொலிசாரை கொலை செய்ததால் சிறைசென்று பின்னர் முழு அளவிலான குழுத் தலைவனாக மாறினார். மனைவியையும் குழந்தைகளையும் கைவிட்டுவிட்டு வேறு பெண்ணுடன் வாழ்க்கை நடத்தியவர், தனது சகோதரன் கொலை செய்யப்பட காரணமாய் இருந்தவர், இவ்வளவுக்கும் காரணமானவர் பின்னாளில் நாட்டின் முதலாம் தரக் குடிமகனாக மாறியது அதிசயமல்லவா!

இன்று 49 வயதாகும் இந்த முன்னாள் குழுத் தலைவர் பிலிப்பைன்ஸின் பலவான் தீவின் தலைநகரான புவேர்டோ பிறின்செசா வின் மேயராவார். இவர் தனது அதிகாரத்தில் உள்ள 130,000 உப பிரிவுகளுக்கும் புதிய மருத்துவமனைகள், குறைந்த செலவில் வீடுகள், உறுதியான வீதிகள் போன்றவற்றை அமைத்ததன் மூலம் அப் பகுதி மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளார். இது தவிர, தனது சொந்தப் பணத்தில் ஏழைகளுக்கு உதவியும் செய்கின்றார். சுற்றாடலைப் பாதுகாப்பதிலும் மிகவும் கவனம் செலுத்தும் இவரது பிரிவு, பிலிப்பைன்ஸ் நாட்டிலேயே மிகவும் சுத்தமானதும் பசுமையானதுமான பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தனது கடந்தகால அனுபவங்களே இன்றைய சாதனைகளுக்கு முன்னோடி எனக் கூறும் இம் மேயரின் சொந்த வாழ்க்கை HAGEDORN என்னும் பெயரில் திரைப்படமாகத் தயாராகிவருகிறது.

# சூரிய சக்தி தொழில் நுட்பத்தின் உச்ச சாதனை

ஜேர்மனியில் ஸ்ருட்காட்டுக்கு வெளியே அமைந்துள்ள லொப்ஹைம் விமான நிலையம் முப்பதாயிரம் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. விமான




ஓடு பாதையில் ஒரு கறுப்புச் சிறகுடன் கூடிய வெள்ளை நிற விமானம் பறக்கத் தயாரான போது பார்வையாளர்கள் ஆச்சரியத்தின் உச்ச நிலையை அடைந்தனர். விமானம் பறக்குமா என்ற சந்தேகத்தில் காத்திருந்த மக்கள் அது தரையை விட்டு மேலெழுந்த போது தம்மை மறந்து கூச்சலிட்டனர்.

ஜேர்மனியின் உல்ம் பல்கலைக்கழகம் அறிவித்த 66 ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசுத் தொகைக்கான சூரியக் கதிர் விமானத் தயாரிப்புப் போட்டிக்கு ஆரம்பத்தில் 46 போட்டியாளர்கள் விருப்பம் தெரிவித்தார்கள். ஆனால் இறுதியில் 5 விமானங்களே மிஞ்சின. இவற்றிலும் 'ICARE' எனப் பெயரிடப்பட்ட சுற்க்காட் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட விமானமே மேலெழுந்து பறந்து சாதனையை ஏற்படுத்தியது.


ஏற்கனவே 1981 இல் போல் மக்றெடி என்பவரால் இது போன்றதொரு விமானத்தில் லண்டனில் இருந்து பிரான்சுக்குப் பறந்து சாதனை ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1990 இல் எரிக் றேமண்ட் என்பவரால் அமெரிக்காவைக் கடந்து மற்றொரு சாதனை ஏற்படுத்தப்பட்டது. அப்படியிருக்க இப்பொழுது இதில் என்ன புதுமை இருக்கிறது? என்ற கேள்வி எழுவது நியாயமே. ஆனால் முன்னைய சாதனைகள் இரண்டும் மிக இலகுவான பாரம்குறைந்த விமானங்களே துணிவான இரண்டு விமானிகளால் அதிஷ்டவசமாக ஏற்படுத்தப்பட்டவையே. ஆனால், இப் புதிய விமானமானது சாதாரண விமானங்களின் தன்மைகளையும் வசதிகளையும் கொண்டது. இவ் விமானம் 260 கிலோ எடை கொண்டதுடன் 25 மீற்றர் நீளம் கொண்ட சிறகுகளையும் உடையது. இச் சிறகிலும் வால பகுதியிலும் 3000 அதி சக்தி வாய்ந்த சூரிய மின் உற்பத்தித் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இவைகள் மூலம் 12 கிலோ வாற் மின்சாரம் பெறப்பட்டு விமானத்தின் இயந்திரத்தின் ஊடாக காற்றாடிகளை இயங்கச் செய்கின்றது. ஒரு சதுர மீற்றர் பறக்க 540 வாற் மின்சாரம் தேவைப்படும் அதே வேளை தெளிவான முகில்கள் அற்ற வானில் சூரியன் மூலம் 900 வாற் மின்சாரம் பெறப்பட முடியும்.

இவ் விமானத்தைத் தயாரிக்க இரண்டு வருடங்களும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவாகியுள்ளன. ஆனால், விமானச் சரித்திரத்திலேயே முதல்முறையாக பறந்த பெரும் மின்சார விமானம் என்பதால் ஒரு மைல்கல்லைப் பதித்துள்ளது. போக்குவரத்து விமானங்களில் சூரிய சக்தி பாவிக்கப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். ஆனால், சிறு ரக கிளைடர் விமானங்களும் தானியங்கி, வானிலைக் கண்காணிப்பு விமானங்களும் வெகு விரைவிலேயே எரி பொருளுக்குப் பதிலாக சூரிய சக்தியில் இயங்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

# உலகின் மாபெரும் திட்டம் பிரான்சில்

பிரான்சின் இரண்டு மலைப் பகுதிகளை இணைக்கும் புதிய பாலம் ஒன்றை அமைக்க 1993-ம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கம் முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து இதற்கான வடிவமைப்புக்களையும், மாதிரிகளையும் தயாரிக்க கேட்கப்பட்ட போது, கடந்த மாதம் உலகெங்கிலும் இருந்தும் 30 கட்டடக் கலைஞர்கள் தமது மாதிரிகளை பிரெஞ்சு அரசிடம் கையளித்தனர். அவற்றில் பிரித்தானியக் கட்டடக் கலைஞரான சேர். நோர்மன் போஸ்ரர் வடிவமைத்த மாதிரியும் அவரது திட்டமும் பிரெஞ்சு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரான்சின் தென் மேற்கு மலைப் பகுதிகளை இணைக்கும் இப் பாலம் 2.2 கி.மீ. நீளமானது. இப் பாலத்தை நிலத்தில் இருந்து எழுப்பப்படும் ஏழு தூண்கள் தாங்கிப் பிடிக்கின்றன. இத் தூண்களில் நடுவில் இருக்கும் தூண் ஈபிள் கோபுரத்தைவிட 100 அடி உயரமானதாகும். (ஈபிள் கோபுரத்தின் உயரம் 1043 அடிகளாக இருக்கும் அதேவேளை இத் தூணின் உயரம் 1143 அடிகளாக இருக்கிறது). பிரான்சின் அழகிய கிராமங்களுக்கு மேலாக அமைக்கப்படவிருக்கும் இப் பாலக் கட்டுமானத் திட்டமே உலகின் மிகப் பெரிய கலை சார்ந்த கட்டட வேலைத் திட்டமாகக் கருதப்படுகின்றது. 1.5 பில்லியன் பிரெஞ்சுப் பிராங்குகள் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்திட்டம் 97-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் தேசிய ரீதியில் பெரும் எதிர்ப்புக்களையும் கிளப்பியுள்ளது.





பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

புதிய பிரெஞ்சு வகுப்பு ஆரம்பம்

24.08.1996 சனி மாலை 4.00 மணிக்கு

புதிய கணனி வகுப்பு ஆரம்பம்

25.08.1996 ஞாயிறு

பிற்பகல் 3.30 மணிக்கு

தொடர்புகளுக்கு சனி, ஞாயிறு தினங்களில் 1.00 மணி முதல் 9.00 மணி வரை நேரில் வரவும்

165, RUE DE CHARONNE, 75011 PARIS.

M° : CHARONNE OU ALEXANDRE DUMAS

ஈழமுரசு
Eelamurasu Weekly

## மாமாங்கக் குண்டு வெடிப்பும் இராணுவத்தின் கருணையும்

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் அதன் உற்சவ காலத்தில் சென்ற வாரம் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது தெரிந்ததே. அந்தக் குண்டு வெடிப்பின் மூலம் ஏறத்தாள 40 பேர் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவ சிகிச்சையின் பின் குணமடைந்து விட்டனர் என்பது ஒருபுற மிருக்க இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் ஒரு அரசியல் நாடகம் என்பது இப்போது அம்பலமாகத் தொடங்கியுள்ளது.

ஆலயத்தின் ஓரமாக அமைந்திருந்த சாப்பப் பொருள் விற்பனை செய்யும் கடையொன்றினுள் வெடித்த இக்குண்டி னால் 37 பொது மக்களுடன் 4 இராணுவத்தினர் மட்டுமே சிறுகாயமடைந்திருந்தனர். குண்டு வெடிப்பு நடந்த பரபரப்பு குறைவதற்கு முன்னரேயே இது புலிகளின் மிருகத்தனமான செயற்பாடே என சிறீலங்கா அரசாங்கம் அறிவித்து விட்டது. வழமை போல புலிகளின் திட்டமிட்ட செயற்பாடு என அறிவித் ததுடன் நிறுத்தாமல் தமது கூற்றை நிரூபிக்குமுகமாக அரச தரப்பினர் மேற்கொண்ட பிரச்சார நடவடிக்கையே இப்போது அவர்களின் முகமூடியைக் கிழித்துக் காட்டியுள்ளது.

குண்டு வெடிப்புக்கு மறு நாளும் தமது பூரண பாதுகாப் புடன் ஆலயத் திருவிழா அசம்பாவிதங்கள் எதுவும் இன்றி சுமுகமாக நடைபெறும் என இராணுவத்தினர் அறிவித்திருந்த னர். அதன்படியே உற்சவம் சுமுகமாகவே நடைபெற்றது. அப்போது இராணுவத்தினரின் தரப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

''மட்டக்களப்பு பிரதேச அப்பாவி மக்களே! உங்களுடைய கடவுளை வணங்குவதற்கு உங்களுக்கு உரிமை இல்லையா? எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அப் பிரசுரத்தில் புலிகளே இக் குண்டு வெடிப்பை மேற்கொண்டனர். புலிகள் கடவுள் நம் பிக்கை இல்லாதவர்கள், கடவுளை நினைக்காதவர்கள் மக் களை நினைப்பார்களா? இதை நீங்கள் சிந்தித்துப் பாருங் கள்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக புலிகளுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்பதற்காக சிறீலங்கா அரசும் இராணுவ மும் கவலைப்பட்டுள்ளது. கடவுள் நம்பிக்கை இல்லாத கார ணத்தால் தான் மக்களைத் துன்பத்துக்கு ஆளாக்குகிறார்கள் என்றும் மிக நீண்டதொரு ஆராய்ச்சி செய்துள்ளனர்.

நல்லது; அப்பாவிப் பொதுமக்கள் ஆலயத்துக்கு செல் வதை புலிகள் விரும்பவில்லை என அவர்களுக்காக கண்ணீர் வடிக்கின்ற சிறீலங்கா அரசு காலத்துக்குக் காலம் இனக் கலவரங்களைத் தாண்டி விட்டு நூற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் தமிழ் மக்கலளக் கொன்று குவித்ததை மறந்து விட்டது போலும்.

'சூரியக்கதிர்' நடவடிக்கையின் மூலமும் 'சத்திய வெற்றி' இராணுவ நடவடிக்கையின் மூலமும் ஆயிரக் கணக்கில் ஏதும றியாத அப்பாவித் தமிழ் பொதுமக்களைக் கொன்று குவித்து நரவேட்டை ஆடியதுடன் இலட்சக்கணக்கான மக்களை வீடு வாசல்களை விட்டு வெளியேற்றிய போதும், இன்று வரை அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் (உணவு உட்பட) எல்லாவற்றையும் தடுத்து வைத்திருப்பது எந்தவகை யில் மனிதாபிமானமான நடவடிக்கையாக இவர்கள் கருது கிறார்கள் என்ற கேள்வி எழுப்புவது தவிர்க்க முடியாத ஒன் றாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்து தமிழீழ மக்களையும் விடுதலைப் புலிகளையும் வெவ்வேறாக பிரிக்க முடியாத அரசு பொதுமக்கள் இலக்குகள் மீது மனிதாபி மானமற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற் கொண்டுவிட்டு புலிகள் மீது பழியைப் போடுவதால் மக்க ளுக்கும் போராளிகளுக்கும் இடையே இடைவெளியைத் தோற்றுவிக்க நினைக்கின்றது.

ஆனால் மாமாங்கத்தை பொறுத்த வரை அவர்கள் வெளி யிட்ட துண்டுப்பிரசுரமே குண்டு வெடிப்பின் காரணகர்த் தாக்கள் அவர்கள் தான் என்பதை அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது.

# எலும்பை உடைத்து கதிரை செய்யும் அரசு

## தோல்விமேல் தோல்வி உண்மைகளை மறைப்பதேன்?

கிளிநொச்சியை கைப் பற்றும் நோக்கை இலக் காகக் கொண்டு ஆரம் பிக்கப்பட்ட சத்ஜய நடவ டிக்கை தொடராமல் நிற்பது புரிகிறது. சில நாட்களுக்கு முன் இவ் இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றிய பிரதேசங்க ளில் தம்மை பலப்படுத்தும் நட வடிக்கை தொடர்கிறதேயன்றி கிளிநொச்சி நோக்கி நகரும் நோக்கத்தை காண முடிய வில்லை.

வட பகுதியின் பிரதான நகர்களில் ஒன்றான கிளிநொச் சியைக் கைப்பற்றிக் கொள் வதே சத்ஜயவின் பிரதான நோக்கம் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 26-ம் திகதி ஆனையிறவு முகாமில் இருந்து வெளியேறிய இராணுவம் பரந் தன் பகுதியை கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்து பின் கிளி நொச்சி நோக்கி புறப்பட்டா லும் இப்போது அது தன் இல க்கை மாற்றிக் கொண்டுள்ள தாக அறிவிக்கின்றது.

கிளிநொச்சியை அண்மிப்ப தற்கான சகல வழிகளையும் கைப்பற்றி விட்டதாயும் தேவைப் படும் வேளை உடனடியாக கிளிநொச்சியை கைப்பற்றிக் கொள்ள இராணுவம் தயாராக இருப்பதாயும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் முதல் நாள் பத்திரிகைகளுக்கு கூறினார். அதே வேளை புதிய இராணுவ திட்டங்களின்படி அவசர அவ சரமாக கிளிநொசசிக்கு போக வேண்டிய தேவை எதுவும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் முன்னோக் கிப் பாய்தல் நடவடிக்கை குடா நாட்டில் நடந்து கொண்டிருக் கையிலும் இது போன்ற ஒரு அறிவித்தல் விடப்பட்டது. முன் னோக்கிப் பாய்தலின் நோக்கம் யாழ் நகரைப் பிடிப்பது என்று முதலில் பத்திரிகைகளுக்கு கூறிய சரத் முனசிங்க பின்னர் யாழ் நகருக்குள் நுழைவது இராணு வத்துக்கு அவசியம் என்றாலும் அதற்கு இன்னமும் தயா ரில்லை என்று கூறினார்.

இந்த அறிவிப்புடன் முன் னோக்கிப் பாய்தலின் இடையே மீண்டும் ஆரம்பித்த இடத் துக்கே பின்னோக்கிப் பாய்ந்தது. அது போன்றதொரு நிலை மையே இப்போது சத் ஜய படையினருக்கு ஏற்பட்டுள்ள தென்பது கிளிநொச்சிக்கு செல் லும் உடனடி அவசியம் இல்லை என்று அதிகாரிகள் கூறுவதில் இருந்து புலனாகிறது.

அப்படியானால் சத் ஜய நடவடிக்கையை இவ்வளவு சிர மத்தினூடு கையாள்வதன் நோக் கம் என்ன? எனும்கேள்வி எழு கின்றது. இராணுவ ஆய்வாளர் களது கூற்றுப்படி அதன் பதில் மிகச் சிறியதும் சுலபமானதுமா கும்.

அதாவது முல்லைத்தீவு தோல்வியை மூடி மறைக்கவும், அதனால் ஏற்பட்ட நெருக்க டிக்கள் தாக்கங்களில் இருந்தும் அரசு விடுதலை பெறவும் அதில் ஏற்பட்ட இழப்புக்களை மக்கள் விரைவிலேயே மறக்கச் செய்ய வும் தான் சத்ஜய ஆரம்பிக்கப் பட்டது என்பது தான் பதில்.

முன்னொரு முறை சிங்கள வர் எந்த நிகழ்வையும் இரண்டு வாரங்களில் மறந்து விடுவார் கள் என புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். அவ ரது கூற்றின் படி முல்லைத்தீவு நிகழ்வையும் பெரும்பாலோ னோர் (இறந்த இராணுவத்தின ரின் உறவினர் தவிர) மறந்து விட்டார்கள். அவர் கூறியது போலவே இராணுவத்தின் தலைமைப்பீட உயர் அதிகாரி ஒருவரும் பத்திரிகையாளர்க ளுக்குக் கூறியுள்ளார். அவர் முல் லைத்தீவு நிகழச்சியை முதலில் மறந்து, அதற்கான பொறுப்புக் களில் இருந்து விடுபட்டது இராணுவமும் அரசும் தான். நாட்டு மக்களும் அதனை அதே கமாக மறந்து கொண்டிருக்கின் றனர். நாளை, மறுநாள் கிரிக் கட்போட்டிகள் ஆரம்பமாகிய வுடன் முல்லைத்தீவு நிகழ்வு என்பது எம் எல்லோருக்கும் முற்றாக மறந்த ஒரு விடயமா கிவிடும் என்று கூறியுள்ளார்.

சத் ஜய நடவடிக்கையின் மூலம் ஆனையிறவு முதல் பரந் தன் வரையிலான பகுதிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதற்குள் படையினருக்கு பாரிய இழப் புக்கள் ஏற்பட்டுள்ளமை தெரி யவந்துள்ளது. பல யுத்த தாங்கி கள் நாசமாகியிருக்கின்றன. இந்த வகையில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களுடன் ஒப் பிடும்போது புலிகளுக்கு ஏற் பட்ட இழப்பு பெரிதல்ல என் பது ஆய்வாளர்களின் முடிவு.

யாழ் குடாவைக் கைப்பற்ற இராணுவம் சூரியக்கதிரை மேற் கொண்ட போது புலிகளின் படைப்பிரிவுக்கு இழப்பு ஏற்ப டவில்லை என்பது முல்லைத் தாக்குதலின் மூலம் தெளிவாகி யுள்ளது. சூரியக் கதிர் தாக்குத லுக்கு முகம் கொடுத்த அதே வேளை தம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில் நிலத்தைக் காப்பதை விடுத்து போராளிகளை காப்பாற்றிக் கொண்டு பின் வாங்கினார்கள். தந்திரோபாய நடவடிக்கையாக பின் வாங்கிய புலிகள் பின்னர் கெரில்லா முறையிலான தாக் குதல்களை இராணுவததின் மீது மேற்கொள்கிறார்கள்.

அதேபோல் வடக்கு கிழக்கு பகுதிகளாவிலும் தாக்குதல்க ளின் வேகத்தை அதிகரித்து பாது காபபுத் துறையின் கவனத்தை எல்லாத் திசைகளிலும் திருப்பி விட்டு தமது கெரில்லாத் தாக் குதல்களை தமக்கு சாதகமான முறையில் அமைத்துக் கொண் டனர்.

கைப்பற்றிக் கொண்ட யாழ் குடாவை காப்பாற்றிக்கொள்ள போதியளவு படையினர் இல் லையென்பதை இராணுவத் தள பதி மெதுவாக கூறிக் கொண்டி ருக்கையில் மேலும் ஒரு பிரதே சத்தை புதிதாக கைப்பற்றி காப் பாற்றுவது ஒரு மூடத்தனமான வேலையாகும். யாழ் குடாவை பாதுகாக்கவே போதிய படை கள் இல்லாதவிடத்து ஆனையி றவில் இருந்து கிளிநொச்சி வரையிலான பிரதேசத்தை காப் பாற்றிக் கொள்வது என்பது "எலும்பை உடைத்து கதிரை செய்வது" போன்ற செயலாகும் என்று இராணுவ ஆய்வாளர் கள் கூறுகிறார்கள்.

இங்கு அவதானிக்க வேண் டிய இன்னுமொரு விடயம் புதிய தாக்குதலுக்கு தயாரான நிலையில் போதிய படைகள் இல்லாத நிலையில் முல்லைத்தீ வுத் தாக்குதலிலும் இராணுவத் தின் மிகப் பிரபல்யமான இர ண்டு படையணிகளை அப்பு றப்படுத்த புலிகளால் முடிந்தி ருக்கின்றது.

இதை ஏற்றுக் கொள்வதற் குப் பதில் உண்மையை மூடி வைப்பதால் எந்த வித பலனும் ஏற்படாது. அதனை ஏற்றுக் கொள்வது புலிகளின் பலத்தை அதிகப்படுத்துவதோ அல்லது இராணுவத்தின் பலத்தைக் குறைப்பதோ அல்ல யதார்த்த நிலைமையை வெளிப்படுத்து வது மட்டுமே.

முல்லைத்தீவுத் தோல்வியை மூடி மறைப்பதற்காக தொடங் கிய சத் ஜய குறிப்பிடக்கூடிய வெற்றிகளைப் பெறாமல் கைவி டப்பட்டது குறித்து வடக்கில் இருந்துசெய்திகள் வெளியாகி யுள்ளன. முல்லைத் தீவுத் தோல்வியின் விளைவாக பல உயரதிகாரிகளின் கதிரைகள் மாறப்போகின்றன. இத் தோல்வி யில் கடற்படைக்கு முக்கிய பங் குண்டு. இதே வேளை முன்னர் பூநகரி, ஜானக புர தோல்விக ளின் போது கடமையாற்றிய பலர் இன்று உயர் அதிகாரிக ளாக பதவி வகிக்கின்றார்கள். அதில் இன்றைய தளபதியும் ஒருவர். பூநகரிக்கும் ஜானக புரத்துக்கும் மேலாக இப்போது ஏற்பட்டுள்ளது பாரிய தோல் வியாகும். இப்போதைய தோல் விக்கு காரணத்தை கூற வேண் டிய உயர் நிலையில் உள்ள பல அதிகாரிகள் ஓய்வில் செல்லத் தயாராகி வருகின்றார்கள்.

எது எப்படி இருப்பினும் இரா ணுவ அதிகாரிகள் அரசியல் வாதிகளின் நலன்களைப் பேணு வதற்காக; தமக்கு ஆதாயங் களை பெற்றுக் கொள்வதற்காக சாத்தியப்படாத ஒரு நடவடிக் கையை எடுத்து அதனால் ஏற் படும் இழப்புக்களை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக் கின்றோம்.

சமுராய்

நன்றி: லக்பிம

## எமது இதய அஞ்சலி



**திருமதி வளர்மதி தவநாதன்**
**செல்வி தஷ்சன்யா தவநாதன்**

*(கனகம்புளியடிச் சந்தி சாவகச்சேரி)*


பிறப்பு: 02.04.1966 – 22.04.1994
இறப்பு: 14.08.96

தேசத்தின் நினைப்பும் நமது நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற தவிப்பும் அவரை எம்முடன் இணைய வைத்தது புலம் பெயர்ந்து வாழ்ந்த போதும்....
தாய்த் தேசம் மீதான பற்றுதல் என்ற தளத்தில் நின்று பணியாற்றும் தமிழ்ப் பெண்கள் அமைப்பில் அவர் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட வைத்தது இவ்வுணர்வே. எத்துணை ஆர்வத்துடன், எத்துணை மகிழ்ச்சியுடன், எமது செயற்பாடுகள் போல் எம்மிடையேயான தோழமை உறவு இறுக்கமும் செறிவும் அடைந்தது.
ஆனால்...
நேற்றும் எம்முடன் சிரித்திருந்த அவர் நீக்கிரையானதை அறிந்து துடித்தோம் நெஞ்சில் அழுதோம். இடையில் வந்த இந்த மரணம் கொடியது
எப்படி இந்த அநியாயச் சாவு எப்படியோ நிகழ்ந்து விட்டது!
எம்மோடு ஒத்திசைந்த அந்த இதயத்திற்கு எமது இதய அஞ்சலிகள்.
இவரதும் இவரது குழந்தையினதும் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

*தமிழ்ப் பெண்கள் அமைப்பு*

தொடர்புகளுக்கு: இந்திரநாதன் - 43 52 35 46 (ADV)

## முதலாம் ஆண்டு நினைவு




**லெப். வேங்கை மார்பன்**
**இராஜேந்திரம் விமலசேகர் (விமலன்)**

அன்னையின் மடியில் 31.10.1973
மணலாறு மண்ணில் 28.07.1995

*பெற்றோர்க்கும் உற்றார்க்கும்*
*விமலனாய் வாழ்ந்து*
*வேங்கைகள் அணியிலோர்*
*வீரனாய்ச் சேர்ந்து*
*மணலாறு மண்ணிலோர்*
*வரலாறு படைத்து*
*மாவீரர் வரிசையில்*
*உன்னையுமிணைத்தாய்*
*மக்கள் மனங்களில்*
*என்றும் நிலைத்தாய்*

தகவல்: இராஜசேகர் (பாரிஸ்) - 40 45 73 75 (ADV)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் சேரன்**
**(ஐயாத்தம்பி குமாரேந்திரன் – எழுதுமட்டுவாள்)**

விதையாய்: 02.03.1969 பயிராய்: 22.08.1994

*பல களம் கண்ட சேரனே*
*எமது மக்களின் விடிவிற்காக*
*பயத்தை வென்று சுயத்தை கொன்று*
*சாவை அணைத்து சாகாவரம் பெற்றாய்*
*சத்தியம் உனக்கு சாட்சி சொல்லும்*
*தர்மம் நீதி சொல்லும்*
*சரித்திரம் உனது இலட்சியத்தை சாகவிடாது.*

*உனது உன்னதப் பாதையில்*
*புலிகளின் வீரப் பயணம் தொடர்கிறது.*

பூநகரி வரலாற்றுப் போர்க்களத்தில் அவனுடன் விதையாகி வீழ்ந்த உயிரிலும் மேலான வீரர்களுக்கு எமது கனத்த இதயக் காணிக்கை சேரனின் நினைவுடன் கலப்போம்.

தாய், தந்தை,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்

தகவல்: குமாரதாஸ் (பிரான்ஸ்)
Tel:
39 80 81 47 / 47 64 64 56 (ADV)

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின்
மடியில்
05.07.1968

அவசர
அழைப்பில்
14.08.1996



*10.03.1989 மதியம் 1.15 மணிக்கு*
*கனவுகளுடன் கடல் தாண்டினோம்.*
*கனவுகளே இங்கு தொடர்கதைகளாக*
*தொடர்கதைகளே நிஜங்களாக – இதில்*
*உன் இழப்புக்கூட கனவாக*
*இருந்திருந்தால்*
*எங்கள் வசந்தா –*
*ஒன்றாக உண்டோம்*
*ஓர் கூட்டில் இருந்தோம்*
*ஒன்றாகவே பயணித்தோம்*
*இன்று நீ மட்டும்*
*இடைவழியில் எமைவிட்டு... ஏன்?*

*இவருடன் ஸ்தலத்தில் பலியான ஏனைய இருவுக்கும் எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்*
*பிரான்ஸ் வாழ் உன் தாய்வான் நண்பர்கள்*

சுதாகரன் (சுதா) ஆனந்தன் 53 19 05 54
கிறிஸ்ரி (அன்ரோனியோ சூரியகுமார்) 42 59 25 56

## சாமிநாதன் அன்ரன் வசந்தகுமார்

(ADV)

# 66 அரச வாகனங்கள் புலிகள் வசம்

சிறீலங்கா அரசாங்கத்திற்கு சொந்தமான புத்தம் புதிய வாகனங்கள் 66 புலிகளின் கைகளுக்குச் சென்றுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இந்த வாகனங்கள் எவ்வாறு புலிகளிடம் சென்றடைந்தன என்பதைக் கண்டறிவதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. மின்சாரத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, எண்ணைக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு சொந்தான வாகனங்களே புலிகள் வசம் சென்றுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இத் திணைக்களின் பொறுப்பான அதிகாரிகள் இவ் வாகனங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப் பட்டிருக்கிறது என்று தமது பதிவேடுகளில் குறித்து வைத்துள்ளார்களே தவிர பொலிசில் எந்தவித முறைப்பாடும் செய்யவில்லை என்றும், இது பற்றிய தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் மயூரன்

சுதாகரன் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் மயூரன் தனது முதலாவது பிறந்த தினத்தை 28.08.96 அன்று சார்லாண்ட் ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

அவரை ஜேர்மனியில் இருக்கும் அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, பாட்டி, மகேந்திரன், குலம் குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சுரேந்திரலிங்கம், சிவராமலிங்கம், குடும்பத்தினர் பிரான்சில் வசிக்கும் தர்ம குலேந்திரன் குடும்பத்தினர். பிரான்சில் வசிக்கும் பிரபா, கிருபா சித்தப்பா, லண்டனில் வசிக்கும் சுரேஸ் மாமா, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் செல்வன் மயூரனை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


சக்தி வீடியோ ஆதரவில்
நல்லூரர் ஸ்ரான் விளையாட்டுக் கழகம்
7 பேர் கொண்ட, 10 பந்து மாற்றங்களை உடைய
மென்பந்து துருப்பெருத்தாட்ட
சுற்றுப்போட்டி
1-9-96 ஞாயிறு (காலை 9.00 மணி)
ஸ்ரான் மைதானம்
பங்குபற்றும் தமிழ்க் கழகங்கள் 30-08-96க்கு முன்பாக 43 83 86 22 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்


(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்துக்களின்....

பௌத்த சிங்கள அரசு ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் போயா விடுமுறை என அறிவிக்கப் பட்டிருக்கும் பொதுவிடுமுறையை ரத்துச் செய்யவில்லை. அதுபோல் வெசாக் பண்டிகை முதலான பௌத்த விடுமுறை நாட்கள் எதுவும் ரத்துச் செய்யப்படவில்லை. வருடத்தில் ஒரு முறை வரும் இந்துக்களின் மகா சிவராத்திரி தினமும், இஸ்லாமியர்களின் ஹஜ் பெருநாள் தினமும் திட்டமிட்ட அடிப்படையில் ரத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

அரசின் இந்த நடவடிக்கை சிறுபான்மை இன மக்களின் மத சுதந்திரத்தை தடை செய்வதாகவும், பெரும்பான்மையினரான பௌத்த சிங்களவர்களின் நலன்களைக் காத்து அவர்கள் விருப்பப்படி சிறீலங்காவை ஒரு பௌத்த நாடாக காட்ட முயற்சித்திருக்கிறது என பல்வேறு மத அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்ப்பாணத்தில்....

பாணம் தக்கா றோட்டில் புதியதொரு அலுவலகம் ஒன்றையும் இராணுவத்தினர் திறந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.


## விற்பனைக்கு

சிறிய பிரெஞ்சு + இந்திய
SANWICHRI
CREPES PLAIT
EMPORTER
11, Av. Gambatta
சகல தொடர்புகளுக்கும்
46 36 59 94 (சிங்கம்)

## தேவை

புதிதாக திறக்கப்பட இருக்கும்
RESTAURANT
THANUJA
91250 St. Germain le Corbeil
இரண்டு குசினியர்கள் தேவை
1 மெக்சிக்கன்
1 இந்தியன்
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
24-08-96 முன் விரும்பத்தக்கது
சகல தொடர்புகளுக்கும்
தொ.பே: 60 63 12 68

## வாடகைக்கு

பாரிஸ் 9 இல் மெத்ரோ Poissonnier க்கு மிகவும் அண்மையில் மிகவும் நல்ல நிலையில் உள்ள Studio வாடகைக்கு உண்டு
வாடகை 2800F

பாரிஸ் 8 இல் மெத்ரோ Rome அல்லது Europe க்கு மிகவும் அருகாமையில் நல்ல நிலையில் உள்ள Studio வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு
வாடகை 3200F

பாரிஸ் 8 இல் மெத்ரோ Faidherbe Chaligny க்கு மிகவும் அருகாமையில் நல்ல நிலையில் உள்ள 2P வீடு வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு
வாடகை 4200F

பாரிஸ் 18 இல் மெத்ரோ Chateau Rouge இல் 25M² இடவசதி கொண்ட கடை வாடகைக்கு உண்டு
வாடகை 2750F
சகல தொடர்புகளுக்கும்: சிவா
தொ.பே.46716691 /
மொபைல்.தொ.பே. 09911266
(மாலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை)



தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும்

## மாவீரர் நினைவு
## மெய்வல்லுனர் போட்டி '96



காலம்: 25-08-96
(ஞாயிறு)
நேரம்:
காலை 9.00 மணி
இடம்:
Stade Jules Ladomeque
Avenue de la Porte de Pantin
(Metro: Porte de Pantin)

குறிப்பு: சிறுவர்களுக்கான பல சிறப்பு நிகழ்ச்சிகளும், உதைபந்தாட்ட காட்சிப் போட்டியும் மெய்யவல்லுனர் இறுதிப் போட்டியிலன்று இடம்பெறும்

மேலதிக தொடர்புகட்கு: 43 58 11 42




KBM கே.பி.எம் நகை மாளிகை KBM



அனைத்து நாடுகளுக்கான குறைந்த விலை தொலை பேசிச் சேவை
Telephone Cabine
53410863 53410865
53410864 53410855
தொலை பேசிச் சேவைத் தொடர்புகளுக்கு



தொலை பேசி: 42.59.31.74
*5, Rue Labat, 75018 Paris*
*Métro: Marcadet Poissonniers*



KBM நகை மாளிகை
உங்கள் விருப்பம் போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
7510 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஆர்த்தி
PROFESSIONNEL PHOTOGRAPHERS
உங்கள் எண்ணங்களை வண்ணமயமான புகைப்படங்களாக்கும் பாரிஸ் நகரின் No1 புகைப்பட வல்லுனர்கள்.
அனைத்து வைபவங்கள் மற்றும் புகைப்படத் தேவைகளுக்கு உடனே தொடர்புகொள்ளுங்கள்
16, Rue de Paradis, 75010 Paris. Mo: Gare de l'Est - Tel: 42 46 42 07 / Fax: 40 22 98 67

# ஈழத்தமிழரைக் காப்பாற்ற தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு நடத்தி வரும் இராணுவத் தாக்குதலையும், உணவு மற்றும் பொருளாதாரத் தடையையும் நீக்குவதற்கு தமிழக, இந்திய அரசுகளை நடவடிக்கை எடுக்கும்படி கோரியும் தமிழ் நாட்டில் திராவிடர்கழகம், தமிழர் தேசிய இயக்கம், உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் உட்பட 30 அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய உள்ளன.

20.08.96 செவ்வாய்க்கிழமை சென்னையிலுள்ள சிறீலங்கா தூதுவர் அலுவலகத்திற்கு முன்பாகவும், தமிழகம் எங்கும் உள்ள மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவலகங்களுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

இது தொடர்பாக தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் ஈழத் தமிழர்களுக்கு சோதனை நிறைந்த இக் காலகட்டத்தில் தாய்த்தமிழகம் கொதித்தெழுந்து தனது எதிர்ப்பைக் காட்டவேண்டும் என உலகத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கண்டனக்குரல் எழுப்புவதோடு இந்திய அரசையும் கண்டனம் தெரிவிக்க வைப்பார் என உலகத் தமிழர்கள் கொண்டிருக்கும் பெரு நம்பிக்கையை நிறைவேற்றுமாறு அவரை வேண்டிக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## இந்துக்களின் சிவராத்திரி விடுமுறை ரத்து சிறீலங்கா அரசின் இனவாதச் செயல்

(கொழும்பு)

சிறீலங்கா அரசாங்கம் 1997ம் ஆண்டிற்கான விடுமுறை நாட்கள் குறைப்பு என்ற அடிப்படையில் உலகெங்கும் உள்ள இந்துக்களால் குறிப்பாக சைவ சமயத்தவர்களால் அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரி தினத்திற்கு வழங்கப்பட்டிருந்த பொதுவிடுமுறை தினத்தை ரத்துச் செய்துள்ளது.

இது தொடர்பாக சிறீலங்காவின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மகாசிவராத்திரி தினம், ஹஜ் பெருநாள், தேசிய வீரர்கள் தினம், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினம், யூன் 30, டிசம்பர்31 ஆகிய தினங்களில் வழங்கப்பட்டு வந்த விடுமுறைதினங்கள் ஆகியவற்றை ரத்துச் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

சிறீலங்காவில் பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சர்வதேச பத்திரிகையாளர்கள் சந்திரிகாவுக்கு கடிதம்

அரசுக்கு முரணான செய்திகளை வெளியிடும் சில பத்திரிகைகளை மூடிவிட வேண்டிய நிலை ஏற்படலாம் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்தை சர்வதேச பத்திரிகையாளர் நிறுவனம் (International Press Institute கண்டித்துள்ளதுடன் அத்தகைய நடவடிக்கை சர்வதேச மனித உரிமை சாசனத்தை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளது. 85 நாடுகளைச் சேர்ந்த வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட இவ் அமைப்பு தனது கண்டனத்தில் தற்போது அமுலில் உள்ள கடுமையான பத்திரிகைச் செய்தித் தணிக்கையையும் கண்டித்துள்ளது.

## குடாநாட்டில் புலிகள் தாக்குதல் 8 படையினர் பலி பலர் படுகாயம்

கடந்த 18.08.96 ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சியிலுள்ள தனங்கிளப்புப் பகுதியில் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமுடைந்துள்ளனர்.

கடந்த 14.08.96 புதன்கிழமை பூநகரி இராணுவ முகாமிலிருந்து ரோந்து நடவடிக்கைக்காக வெளியே சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 5 படையினர் கொல்லப் பட்டனர் 14 பேர் காயமடைந்தனர்.

அதேநேரம் 13.08.96 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு அருகில் காவலிலிருந்த பொலிசார் மீது புலிகள் தாக்கியதில் இரண்டு பொலிசார் கொல்லப் பட்டுள்ளனர்.

## மல்லாவியில் சத்திரசிகிச்சை பிரிவு ஆரம்பம்

கிளிநொச்சி மருத்துவமனை மூடப்பட்டுள்ளதால் வன்னிப்பகுதி மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்ல இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இதனால் மருந்துப் பொருட்களுக்கு அங்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இதேவேளை, மல்லாவி மருத்துவ மனையில் சத்திரசிகிச்சைப் பிரிவொன்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிறீலங்கா இராணுவத்தினர் விசேட அடையாள அட்டைகளை வழங்குகின்றனர்.

இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்காக யாழ்ப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அரசாங்க ஆதரவாளர் ராஜன்கூலின் சகோதரியும் கொழும்பில் கைது

மனித உரிமை அமைப்பின் பிரதிநிதி என்ற பெயரில் கொழும்பிலிருந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் புலிகளின் நிர்வாகத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழ்வதாக அரசாங்கம் கொடுக்கும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த ராஜன் கூலின் சகோதரியும் அவரது கணவரும் கடந்தவாரம் புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு அருகேவைத்து கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அவர்கள் கைது செய்யப்பட்ட அன்று காலை கொழும்புக் கோட்டைப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டதாகக் கூறியே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். பல்கலைக்கழக விரிவுரையாளரான கூலின் சகோதரியும், கணக்காளரான அவரது கணவரும் முழு நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை என்ற பெயரில் தாக்கப்பட்டதாகவும், அவர்கள் கொழும்பிலுள்ள பல பிரமுகர்களின் பெயர்களையும், தொலைபேசி இலக்கங்களையும் கொடுத்த போதும் அவற்றை ஏற்றுக்கொள்ளாத பொலிசார் அவர்களை தொடர்ந்து தாக்கியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாலம்
ஜூலை 1996
இது ஒரு 'ஈழமுரசு' வெளியீடு

இந்த இதழில்...
★ துயர் சூழ்ந்த யாழ்ப்பாணம் (நேரடித்தகவல்கள்)
★ தென்னிந்திய திரைப்படவிழா – லண்டன்
★ குடும்ப உறவுக்கு புதிய வியாக்கியானம்
★ அகதி வாழ்வின் அவலங்கள்
★ ஐரோப்பாவின் புதிய கடத்தல்
★ பாரிசில் நாய்ச் சண்டை
இன்னும் பல சுவையான அம்சங்களுடன்

# கச்சாயில் பலாத்காரம் செய்ய முயன்ற இராணுவத்தைக் குத்திக் கொன்ற பெண்

கடந்த 09.08.96 அன்று தென்மராட்சியில் உள்ள கச்சாய் பகுதியில் இரண்டு இராணுவத்தினர் இளம் பெண் ஒருவரை பலாத்காரம் செய்ய முயன்ற போது அப் பெண் படையினர் இருவரையும் கத்தியால் குத்தியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். மற்றவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் இரத்தப் பெருக்குடன் அடுத்த நாள் மதியம் வரை பிரதான வீதியில் கிடந்ததாகத் தெரிய வருகின்றது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதையும் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற் கொண்ட படையினர் அப்பகுதி இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்துள்ளனர்.

இதே வேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நிலவும் 4 முதல் 5 பாடசாலை மாணவர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றனர்.

முக மூடிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு பல இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்படுகின்றனர்.

இவர்களைத் தேடி பெற்றோரும் உறவினர்களும் இராணுவ முகாம்களில் சென்று விசாரித்தால் தமக்கு அப்படி எதுவும் தெரியாது என படையினர் கையை விரிக்கின்றனராம்.

இவை எல்லாவற்றையும் விட மோசமாக இரவு வேளைகளில் வீடுகளுக்குள் தேடுதல் என்ற பெயரில் உள் நுழையும் இராணுவத்தினர் இளம் பெண்களை அதிகளவில் கைது செய்து கொண்டு செல்கின்றார்கள். பின்னர் இவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது எவருக்கும் தெரியாமல் உள்ளது. இதனால் அப்பாவி இளம் பெண்கள் எப்போதும் பயப் பீதியுடனேயே வாழ வேண்டிய நிலையில் உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விடுதலை அல்லது விசாரணை வேண்டி தமிழ்க் கைதிகள் மீண்டும் போர்க்கொடி

களுத்துறை மகசீன் சிறைச்சாலையில் நீண்ட காலமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள், 'தம்மை விசாரணை செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி சிறைச்சாலையில் 384 தமிழ்க் கைதிகள் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் இவர்கள் இதே கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது கொழும்பிலுள்ள அரசியல்வாதிகள் தலையிட்டு அவர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்வதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து அவ் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

ஆனால் இதுவரை இவர்களில் நான்கு பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனை ஆட்சேபித்தே தற்போது இந்தக் கைதிகள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

## விளக்கு வெளிச்சத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம்

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்துக்கு மின் வழங்கும் மின் மாற்றி இராணுவத்தினர் வீசிய ஷெல் வீழ்ந்து வெடித்ததனால் சேதமடைந்துள்ளது.

இதனை மாற்றி திருத்தியமைக்குமாறு அப் பகுதியில் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும், அவ் வேண்டுகோளை அப் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவப் பிரிகேடியர் மறுத்துவருவதால் பல்கலைக் கழகம் தொடர்ந்தும் இருளில் மூழ்கியுள்ளது.

இரவில் லாம்பு,போத்தல் விளக்குகள் போன்றனவே தற்போது பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஒளி கொடுக்கிறது.

## வன்னிக்கு இடம் பெயர்ந்தோர்க்கு அவசர உதவிகள்

கிளிநொச்சியில் இருந்து புத்துவெட்டுவான் காட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு முறிகண்டி அபிவிருத்தி சபையினர் அவசர உதவிகளை வழங்கியுள்ளனர்.

தற்காலிக இருப்பிடம் அமைக்க றப்பர் கூரைகள், உடைகள், வாளிகள், சமையல் பாத்திரங்கள் என்பனவற்றைக் கொடுத்துதவியுள்ளனர்.

இதேவேளை, பாண்டியன் குளம் துணுக்காய்ப் பகுதி புனர்வாழ்வு அமைப்பு, மூடப்பட்ட 15 மலசலகூடங்களை யோகபுரம் விடமைப்புத் திட்டத்துக்கு வழங்கியுள்ளதுடன், மல்லாவிப் பகுதி மக்களுக்கு முதலுதவிப் பெட்டிகளையும் வழங்கியுள்ளது.

## அடுத்த தேர்தலுக்காக ஐ.தே.க. நாடகம் ஆடக் கூடாது

### - முஸ்லீம் காங்கிரஸ் -

அடுத்த தேர்தலை மையமாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடகமாடக்கூடாதென முஸ்லீம் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர் என்.எஸ். ஹசன் தெரிவித்துள்ளார்.

நாட்டுப்பத்துள்ள ஒவ்வொரு மனிதனும் நிம்மதியாக உறங்க முடியாத நிலை இன்று தோன்றியுள்ளது. உரிமையை வழங்கி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய அரசின் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சிறீலங்கா அரசினால் 4800 கோடி ரூபா பாதுகாப்புக்காகச் செலவிடப்படுகின்ற வேளையில் அடுத்த தேர்தலை மையமாகக் கொண்டு எதிர்க்கட்சியினர் நாடகமாடாமல் நிலையான சமாதானத்துக்கு உதவ வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிந்தவூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போது உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் பொதுஜன முன்னணி அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் தமிழ் முஸ்லீம் மக்களின் பூரண விருப்பத்துடன் நடை முறைப்படுத்தப்பட வேண்டியதாகும். வட கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு தனியான அலகொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதனையே தமிழ் கட்சிகளும் அங்கீகரித்துள்ளன. இந்தக் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 250 விதவைகள் கஷ்ட ஜீவனம்

அம்பாறையில், 1990-ம் ஆண்டு ஒரே இரவில் 250 ஆண்களை இராணுவம் கட்டுக் கொன்றது தெரிந்ததே. ஆலையடி வேம்பு என்னுமிடத்தில் இராணுவம் நடத்திய அந்த வெறியாட்டத்தில் 250 பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் இராணுவம் மேற்கொண்டுள்ள கெடுபிடிகளாலும், பொருளாதாரத் தடைகளாலும் மோசமாகப் பாதிப்படைந்துள்ள இவர்கள் தமது குழந்தைகளுடன் பெரும் கஷ்ட ஜீவனத்தை எதிர்கொண்டுள்ளனர்.

காணத் தயாராகுங்கள்
J.R.Productions
ராசநாயகம் ஜேசுதாசன் வழங்கும்
மௌனம்
01.09.96 ஞாயிறு
பி.ப. 3.00 மணி - 6.00 மணி
இரு காட்சிகள்
Cinema Trianon
80, Bld Rochechourt,
75018 Paris
M°: Anvers
(ADV)

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்றிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,
பகீ என்ரபிறைஸ்
உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்
Devis 200Frs - Deplacement 150Frs
புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00
(ADV)

# ஒற்றையாட்சியை மாற்றக் கோர கணேசலிங்கத்துக்கு உரிமையில்லை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பு ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைத்தல் ஆகிய இரு விடயங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கப் போவதில்லை. ஒற்றையாட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும் எனக் கோருவதற்கு கொழும்பு மாநகர மேயர் கே. கணேசலிங்கத்துக்கு எந்த வித அதிகாரமும் இல்லை என முன்னாள் சபாநாயகரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க எம்பியுமான எம்.எச்.எம் முகமத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஐ.தே.கட்சியினர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டது. அரசாங்கத்துக்கு பெரும் பின்னடைவாகும். அம்முகாமில் ஆறு வருடப்பயிற்சி பெற்ற இரண்டு பட்டாலியன்கள் இருந்தனர். முகாம் தாக்கப்பட்டதையடுத்து இரு படைப்பிரிவிலும் இருந்து உயிர் தப்பியவர்களைச் சேர்த்து ஒரு படைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் கெரில்லா இயக்கம் தான். ஆனால் அவர்களால் மரபு ரீதியான யுத்தமும் செய்ய முடியும் என்பதை முல்லைத் தீவு தாக்குதல் மூலம் நிருபித்துள்ளார்கள்.

ஜனாதிபதி வெளிநாடு செல்லும் போது அரசாங்கத்துக்கோ எதிர்க் கட்சித் தலைவருக்கோ தெரிவிப்பதில்லை. ஜனாதிபதி வெளிநாட்டிற்குச் சென்றார். ஆனால் பதில் அமைச்சர் எவரும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை.

கொழும்பு மாநகர மேயர் கணேசலிங்கம் ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைக்க வேண்டுமென அரசைக் கோரியுள்ளார். அப்படி அரசைக் கோருவதற்கு அவருக்கு எந்த வித உரிமையும் இல்லை. ஐ.தே.க இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எனவும் அவர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவுக்கு நேரம் சரியில்லை பழைய நேரத்துக்கு திரும்ப முடிவு ?

சிறீலங்காவில் ஏற்பட்ட கடுமையான மின்சாரப் பற்றாக் குறையை ஈடு செய்வதற்காக சிறிலங்கா அரசு தனது நேரத்தை 1 மணித்தியாலத்தால் அதிகரித்திருந்தது.

இந்த நேர அதிகரிப்பானது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்தைக்கும் அவர்களுடைய ஜாதகத்தில் உள்ள கிரகசாரப் படி அவ்வளவு நல்லதல்ல என பிரபல சிங்கள சோதிடர்கள் தெரிவித்துள்ளார்கள் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. புதிய நேரமாற்றம் வந்தபின்பே யாழ்ப்பாணத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல், முல்லைத் தீவு தளத் தாக்குதல் என்பன நடந்து சந்திரிகாவுக்கும், ரத்வத்தைக்கும் அவப்பெயரை சிங்கள மக்கள் மத்தியிலும், வெளிநாடுகளிலும் தேடிக் கொடுத்திருப்பதை அந்தச் சோதிடர்கள் உதாரணமாக காட்டியிருப்பதாக தெரிவிக்கும் அப் பத்திரிகை, மேலும், சோதிடர்களினதும், மகாநாயக்க தேரோக்களினதும் ஆலோசனையைக் கேட்டு நேர மாற்றத்தை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றுவதற்கு சந்திரிகா அரசு தீர்மானித்திருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

## இராணுவத்தில் சேர தமிழ்-முஸ்லிம்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு மறுத்து வருவதால் தமிழ் முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு அரசு பகிரங்க அழைப்பு விடுத்து வருகின்றது.

இதன் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், வந்தாறுமூலை, சித்தாண்டி, செங்கலடி போன்ற பிரதேசங்களில் அரசு தனது கவர்ச்சி மிகு பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அநேகமாக ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று, இராணுவ வாகனங்களில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு வீதிவீதியாகச் சென்று தமிழிலேயே இப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பாதுகாப்புப் படையில் சேர்ந்து பணியாற்ற இது ஒரு அரிய சந்தர்ப்பம். இதனை இளைஞர்கள் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஒலிபெருக்கியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பகுதியில் உள்ள பள்ளிவாசல்களிலும் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரியின் வேண்டுகோளின்படியே பள்ளிவாசலில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. பாதுகாப்புப் படையில் சேருவதற்கு மேலதிக தகுதிகள் எதுவும் தேவையில்லை எனவும், விண்ணப்பங்களை அனுப்பாமல் நேரடியாக சென்று இராணுவ தலைமையகத்திலேயே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு ஆர்வம் காட்டுவது குறைந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக முல்லைத்தீவில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பின்னர் படைக்கு ஆட்சேர்ப்பதற்காக எத்தனையோ அறிவித்தல்களை அரசு வெளியிட்டுவிட்டது. எனினும் எவருமே விண்ணப்பிக்காததால் தற்போது தமிழ், முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்கு அரசு பிரயத்தனம் செய்துவருகின்றது. எனினும் எவரும் அரசின் இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்த்ததாக தகவல்கள் இல்லை.

## வன்னி மருத்துவ மனையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் உள்ள மருத்துவ மனைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. கிளிநொச்சி மருத்துவமனை இராணுவத்தின் தாக்குதலால் மோசமாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்து பெருமளவிலான நோயாளிகளும் காயமடைந்தோரும் மருத்துவ உதவிகளை நாடி அக்கராயன், மல்லாவி, தர்மபுரம் போன்ற கிராம மருத்துவ மனைகளுக்கு படையெடுக்கின்றனர். இதனால் அங்கு மருந்துக்கு பெருமளவு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மல்லாவி மருத்துவ மனையில் மாத்திரம் சுமார் 200 பேருக்கு மேல் தங்கியிருக்கும் அதே வேளை 800 பேர் முதல் 900 பேர் வரை வைத்திய உதவி நாடி அங்கு வந்து செல்கின்றனர். அநேகமாக வைத்தியர்களும், மருத்துவ ஊழியர்களும் இடம் பெயர்ந்தவர்களாக இருப்பதனால் அவர்களும் உணவு நீர் உட்பட தங்குமிட வசதிகள் இன்றி சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

## பொலிஸ் சித்திரவதையால் மலையக இளைஞர் பரிதாப மரணம்

கடந்த 10 ஆம் திகதியன்று பஸ் கண்ணாடியை உடைத்ததாகக் குற்றம் சாட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் பொலிஸ் காவலிலேயே மரணமாகியுள்ளார்.

மஸ்கெலியா சிவனக் கரவத்தையைச் சேர்ந்த ராசலிங்கம் என்ற தமிழ் இளைஞரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிசார் அவரை மூர்க்கத் தனமாகத் தாக்கியதில் அவர் மயக்க நிலையை அடைந்துள்ளார். பின்னர் பொலிசார் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதே அவர் அங்கு மரணமாகியுள்ளார்.

தற்போது மலையகத்தில் உள்ள தமிழ் இளைஞர்களைப் புலியெனக் குற்றம்சாட்டி பொலிசாரும் படையினரும் கைது செய்வது அதிகரித்து வருகின்றது.

அதே வேளை மலையகத்தில் அரச படைகள் நடாத்தும் தேடுதல்கள் சுற்றிவளைப்புக்களின்போது கைது செய்யப்படுபவர்கள் பற்றியும் அரசு சரியான தகவல்களை உரியவர்களுக்கு கொடுப்பதில்லை. இது போன்று கைதாகும் அப்பாவிகளை அடித்துக் கொன்று விட்டு ரயர் போட்டு எரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## லொறிச் சாரதிகளுக்கு ஐ.சி.ஆர்.சி. பாதுகாப்பு

ஓமந்தைக்கும் சாந்தசோலைக்கும் இடையே உணவு விநியோகத்தில் ஈடுபடும் லொறிச் சாரதிகளை புளியங்குளத்தில் உள்ள சாரதிகள் சங்கத்தில் வந்து தம்மைச் சந்திக்குமாறு ஐ.சி.ஆர்.சி. யினர் அறிவித்துள்ளனர். இனி மேல் சாந்த சோலைக்கு செல்லும் லொறிகளுக்கு தாம் பாதுகாப்பு அளிக்கப் போவதாகவும் ஐ.சி.ஆர்.சியினர் தெரிவித்துள்ளனர்.

முன்னர் இந்த லொறிச் சாரதிகளுக்கே இராணுவத்தினர் மாட்டுச் சாணத்தினை உண்ணக் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

09.07.96 முதல் விற்பனையாகின்றது

130 பிராங்குகள் மட்டுமே




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி. - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90

மேலதிக விபரங்களுக்கு: 08 24 31 43 – 08 51 90 54

(ADV)

# அவுஸ்திரேலியாவில் சிறிலங்காப் பிரசைகளுக்கு வதிவிடக் கட்டுப்பாடு !

அவுஸ்திரேலியாவில் வாழும் சிறீலங்கா மற்றும் யூகோஸ்லாவியப் பிரசைகளுக்கு Class 435 இன்கீழ் வழங்கப்பட்டுவந்த தங்குமிட அனுமதி 31 ஜூலை 1997 முதல் நிறுத்தப்பட உள்ளதாக அண்மையில் பதவிக்கு வந்துள்ள ஜோன் ஹவார்ட் அரசு அறிவித்துள்ளது.

அவ் அறிவித்தலின்படி வழக்கமாக வழங்கப்பட்டுவரும் ஆறுமாத கால தற்காலிகத் தங்குமிட அனுமதி இவ்வாண்டு ஓராண்டுக் காலத்துக்கு வழங்கப்படும் என்றும் அது மீண்டும் புதுப்பிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டில் இருந்து அமுலில் இருந்த கிளாஸ் 435 விதிகளின் கீழான அனுமதி இனிமேல் வழங்கப்பட மாட்டாது என்பதால் அடுத்த வருட நடுப்பகுதியில் பெருமளவு சிறீலங்காப் பிரசைகள் தமது நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை உருவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்துக்கு உதவியாக பெண் முக மூடிகள்

யாழ் குடாநாட்டில் உள்ள படையினருக்கு உதவியாக முகமூடிகள் செயற்பட்டு வருவது தெரிந்ததே. ஆனால் இப்போது பெண் முகமூடிகளும் காட்டிக் கொடுப்பில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்ற தகவல் வெளியாகி இருக்கின்றது.

கடந்த வாரம் மறவன்புலவு தனங்கிளப்பை இராணுவம் சுற்றிவளைத்து முற்றுகையிட்ட போது இரண்டு பெண் முகமூடிகளும் அவர்களுடன் சென்றிருந்தனர். இதன்போது சிவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான கடையொன்று கொள்ளையிடப்பட்டுள்ளதுடன் இரண்டு சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தின் போது அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆண்களையும் இரண்டு பெண்களையும் இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விபரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

# அதிர்ச்சியால் வயோதிபர் மரணம்

துப்பாக்கி வேட்டுச் சத்தத்தின் அதிர்ச்சியினால் வயோதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மிருசுவிலைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் க. சிவக்கொழுந்து (வயது 64) தற்போது தனது உறவினர்களுடன் பளையில் வாழ்ந்து கொண்டிருந்தவர். சென்றவாரம் சடுதியாகக் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தத்தினால் அதிர்ச்சியடைந்த அவர் மரணமடைந்துள்ளார்.

# நாட்டரிசி 90 ரூபா

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் நாட்டரிசி 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. தாம் நிலைகொண்டுள்ள எல்லாப் பகுதிகளிலும் உணவுப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதாக இராணுவத்தினர் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

ஆனால், அங்கு உணவுப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. அரச கூட்டுத்தாபனக் கடைகளில் ஒருவருக்கு இரண்டு கிலோ உணவுப் பொருட்கள் மட்டுமே பெறமுடியும். அதனையும் காலையில் இருந்து மாலை வரை நீண்ட வரிசைகளில் நின்றும் பெற முடியாத நிலையே உள்ளது. இராணுவத்தின் செல்வாக்கு உள்ளவர்கள் மட்டும் அதனைப் பெறக் கூடியதாக உள்ளதென அங்கிருந்து தப்பி வெளியேறியோர் தெரிவிக்கின்றனர்.

# தென்மராட்சிப் பொது மயானத்தில் 6 இளைஞர்களின் சடலம் மீட்பு

தென்மராட்சி பொது மயானத்தில் மூன்று இளம் பெண்களினதும் மூன்று இளைஞர்களினதும் சடலங்கள் இராணுவத்தினரால் புதைக்கப் பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரே இக் கொலைகளைச் செய்து விட்டு சடலங்களை எவரும் காணாமல் புதைத்திருந்தது தற்போது இவ் ஆறு உடல்களும் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் இராணுவத்தினரின் கொலைச் செயல் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இம் மாதம் 4 ஆம் திகதி தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட வெவ்வேறு சுற்றி வளைப்புக்களின் போது கச்சாயில் 9 பேரும் தனங்கிளப்பில் இரண்டு பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கைது செய்த இராணுவம் கைகளையும் கண்ணையும் கட்டி தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். இவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றிய தகவல்கள் எதுவும் எவருக்கும் கிடைக்கவில்லை.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று உறவினர்கள் விசாரித்த போதும், தாம் அவர்களைக் கைது செய்யவில்லை எனவும் அவர்கள் பற்றி தமக்கு எதுவிதமான தகவலும் தெரியாது என்றும் இராணுவத்தினர் கையை விரித்து விட்டனராம்.

ஆனால் இப்போது பொது மயானத்தில் புதைக்கப்பட்டு கண்டு பிடிக்கப்பட்ட உடல்கள் இது போன்ற சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# ஷெல் தாக்குதலால் விவசாயி மரணம்

மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான எம். செல்லத்துரை (வயது42) ஷெல் வீழ்ந்து வெடித்ததால் மரணமாகியுள்ளார்.

விவசாயியான இவர், தனது வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது இராணுவத்தினர் ஏவிய ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததனால் ஸ்தலத்திலேயே உடல்சிதறிப் பலியானார்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# பிறந்த நாள் வாழ்த்து



பருத்தித்துறையைச் சேர்ந்த
சேகர் - ஜவிதா தம்பதியின்
இரட்டைக் குழந்தைகள்,
**அன்புப் புதல்வி இலக்கியாவும்,**
**அன்புப் புதல்வன் எழிலனும்**
**தமது முதலாவது பிறந்தநாளை**
**24.8.96 சனிக்கிழமை**
**பிரான்சிலுள்ள தமது இல்லத்தில்**
**குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள்.**

இவர்களை அன்புடன் அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, பாட்டி பிரான்சில் வசிக்கும் அம்மம்மா, ஜேர்மனி ஞானம் மாமா, தேவகி மாமி, வைதா மச்சாள், ஜனகன் மச்சான், பிரான்ஸ் கந்து சித்தப்பா, இலங்கையில் வசிக்கும் கோபால் மாமா, பத்மா மாமி, தேவிகா மச்சாள், தர்மிகா மச்சாள், தயா மாமா, வாசுகி மாமி, கௌதமி மச்சாள், பிரான்ஸ் திருச் சித்தா, சத்தியன் மாமா, சாயிதா சித்தா, கனடா கணேஷ் பெரியப்பா, ராதா சித்தா, சாயீசன் அண்ணா, டென்மார்க் தேவன் பெரியப்பா, சூட்டிச் சித்தா, அனிசன் அண்ணா ஆகியோரும், உற்றார் உறவினர்களும் மற்றும் நண்பர்களும் பிள்ளையார் அருள் பெற்று, சீரும் சிறப்புடனும் பல் கலையும் கற்று பல்லாண்டு காலம் பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- T.Sekar
*1, Allée Nicolas Poussin,*
*95200 Sarcelles,*
*FRANCE.*



## செல்வி இலக்கியா

## செல்வன் எழிலன்

# கண்களைத் திறக்கும் இந்தியா

சத்ஜய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம் பெயரும் பல்லாயிரக்கணக்கான மக்களில் 200-ற்கும் அதிகமானோர் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக சென்றிருப்பது இந்தியாவில் புதிய தாக்கம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.



இந்த அகதிகளின் தமிழகப் பிரவேசம், ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இலங்கைப் பிரச்சினையில் ஒதுங்கி நின்ற இந்தியா, இலங்கையில் என்னதான் நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு தனது கண்ணைத் திறந்திருக்கிறது. தமிழ நாட்டிலுள்ள கட்சிகள் ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும் எனக் குரலெழுப்ப ஆரம்பித்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள தொண்டர் நிறுவனங்களும், பத்திரிகையாளர்களும் யாழ்ப்பாணத்திற்கு செல்ல மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து பாடுபட வேண்டும் எனவும் பாட்டாளிமக்கள் கட்சி உறுப்பினர் பேராசிரியர் தீரன் கேட்டுள்ளார்.

இலங்கை நிலை குறித்து சட்டசபையில் கவனயீர்ப்பு பிரேரணைகளும் கொண்டுவரப்பட்டன. தமிழர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கு முதலில் உடனடியாக புனர்வாழ்வளிக்க வேண்டும். இலங்கை தமிழர்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பது குறித்து தமிழக எதிர்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் விவகாரம் இந்தியாவில் மட்டுமன்றி சர்வதேச விவகாரமுமாக மாறி வருகிறது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே நடைபெற்றுவரும் போரில் அமெரிக்க இராணுவத்தினர் படையினருக்கு உதவி வழங்கி வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு

**இலங்கைப் பிரச்சினையில் ஒதுங்கி நின்ற இந்தியா, இலங்கையில் என்னதான் நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு தனது கண்ணைத் திறந்திருக்கிறது**

அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது. சிறீலங்காவில் நடைபெறும் உள்நாட்டுப்போரில் சம்மந்தப்படும் உத்தேசம் எதுவுமே இல்லை. இந்தப் போரில் அமெரிக்க ஆயுதப்படைகள் முன்னரும் சம்மந்தப்படவில்லை. இனியும் சம்மந்தப்படப் போவதில்லை என்று அமெரிக்க இராணுவத்தின் அமெரிக்க பசுபிக் கட்டளை பீடம் அறிவித்திருக்கிறது. சிறீலங்காவிற்கான ஆயுத விநியோகத்தை அமெரிக்கா அதிகரித்திருப்பதாக வெளியான செய்திகளை வாசிங்டன் நிராகரித்திருப்பதுடன் அமெரிக்காவில் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கு சட்ட அடிப்படை இல்லை எனவும் அறிவித்திருக்கிறது.

இதற்கிடையில் சிறிலங்காவில் படுமோசமான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகிறதென சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கை பாரபட்சமானது என சிறீலங்கா அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருக்கிறது. ஐ.தே.க ஆட்சி செய்தபோது எதிர்கட்சியாக இருந்த தற்போதைய ஆளும் கட்சியினர் சர்வதேச மன்னிப்புச் சபையை பாராட்டி வந்ததுடன் அதன் அறிக்கைகளை தமது தேர்தல் பிரச்சாரங்களுக்கும் பயன்படுத்தி வந்தனர். தற்போது மன்னிப்புச்சபையை குறைகூறி மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கப் பார்க்கின்றனர்.

# படைக்கு ஆள்திரட்ட புதிய யுக்தி

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

மறுபுறத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதை அடுத்து புதிய யுக்தி ஒன்றைக் கையாள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இராணுவத்திற்கு ஆட்களை பொது அறிவிப்பு மூலம் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து சேர்த்துக் கொள்வதே வழக்கமாக இருந்தது. இந்த முறை புதிய நடைமுறை ஒன்று கையாளப்பட்டிருக்கிறது. இதன்படி சிறீலங்கா பொலிஸ் றிசேவ் படை-க்கு ஆட்கள் தேவையென பகிரங்கமாக விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. 20.08.96 தொடக்கம் 23.08.96 வரை தென்பகுதி முழுவதிலும் உள்ள 15 நிலையங்களில் இந்த நேர்முறைப் பரீட்சை நடக்க இருக்கிறது. இதில் விசேடம் என்னவென்றால் பொலிஸ் படைக்கென ஆட்களை தந்திரமாக எடுத்து அவர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து வடக்கு - கிழக்கு யுத்தப் பிரதேசத்திற்கு அனுப்பும் தந்திரமேயாகும். இராணுவத்திற்கு ஆட்கள் சேரப் பயப்படுவதால் பொலிஸ் படைக்கு என எடுத்து அவர்களை இராணுவமாக மாற்றப் போகிறார்கள். பொதுவாக கொழும்பில் நடமாடக்கூடிய எவரும் கண்டிப்பாக அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும். அதைக்கூட பாதுகாப்புப் படையினர் உண்மையில்லாதது என்று கூறி கிளித்து விசிவிடுவது உண்டு. தற்போது பொலிஸ் படைக்கு ஆள் எடுக்கும் போது அடையாள அட்டை இல்லாவிட்டாலும் பரவாயில்லை, கிராம

**பொலிஸ் படைக்கு ஆள் எடுக்கும் போது அடையாள அட்டை இல்லாவிட்டாலும் பரவாயில்லை, கிராம சேவகரின் சான்றிதழ் இருந்தால் போதும் என்ற அளவிற்கு சலுகை கொடுக்கப் பட்டுள்ளது**

சேவகரின் சான்றிதழ் இருந்தால் போதும் என்ற அளவிற்கு சலுகை கொடுக்கப் பட்டுள்ளது. எத்தனைபேர் இந்தப்படையில் சேரப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சத்ஜய இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து பரந்தனில் இருந்து முன்னேறிய படைகள் புலிகளின் பாரிய எதிர்தாக்குதலால் தப்பினோம் பிழைத்தோம் என பரந்தனுக்கே திரும்பி ஓடிவிட்டன. ஆனால் அரசாங்கமோ விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக கிளிநொச்சியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் தமது படைகள் நிலைகொண்டிருப்பதாகவும் விரைவில் கிளிநொச்சியைப் பிடித்தே தீருவோம் எனவும் கூறிக் கொண்டிருக்கிறது. இந்தப் படையினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாக நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்தும் வருகிறது.

# ஆளுங்கட்சிக்குள் பூகம்பம் - அது விரைவில் வெடித்துச் சிதறும்

யுத்த நடவடிக்கைகள் இவ்வாறு இருக்க ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குள்ளே பெரும் பூகம்பம் வெடித்திருக்கிறது. அமைச்சர்களான மங்கள சமரவீர, ரிச்சட் பத்திரன போன்றோர் லலித் கட்சியின் தலைவியான சிறிமணி அத்துலத்முதலியைக் கண்டித்து வருகின்றனர். பத்திரிகைகளுக்கு இரகசியங்களை வெளியிடுவதாக அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ மீது சந்திரிகாவும், அமைச்சர்களும் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். சபைமுதல்வர் பதவியிலிருந்து அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவை அகற்றி விட்டு அமைச்சர் ரிச்சட் பத்திரனாவை நியமிக்கும்படி பின்வரிசை எம்.பிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த விவகாரங்கள் அனைத்தும் சந்திரிகா தலைமையில் நடந்த அரசாங்க கட்சிக் குழுக்கூட்டத்தில் நடந்தன.



சமாஜமாசக் கட்சியினர் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்த சம்பவம் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டு அரசாங்கம் எப்போது வெடித்துச் சிதறப்போகிறது என எதிர்பார்க்கும் நிலை தோன்றியிருக்கிறது.

**பாரிஸ் லா சப்பலில் மிகப் பிரமாண்டமான பல்பொருள் அங்காடி**

*மீன் வகைகள், அரிசி முதல்*

*அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள*

**கோபால் அன் கோ**

KOPAL & CO SUPER MARCHE

Tel: 40 05 04 50
FaX: 40 05 09 90

66, Rue Louis Blanc,
75010 Paris

# அடுத்த வருடம் டிசம்பருக்குள் யுத்தத்தை முடிப்பேன் - சந்திரிகா

1997ம் ஆண்டு முடிவதற்குள் வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். அதன் பின் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும். இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்கா தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கத்தின் இரண்டாவதுவருட பூர்த்தியை முன்னிட்டு குருநாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றுகையில், ஜனாதிபதிக்கு பல விசேட அதிகாரங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் நான் பயன்படுத்துவதில்லை. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நாட்டு மக்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்த வருடம் முதல் உபமானியங்கள் சிலவற்றைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். உலகச் சந்தையில் மாவின் விலை அதிகரித்துள்ளது. உண்மையில் ஒரு இறாத்தல் பாணை 11 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டும். ஆனால் நாம் 6 ரூபாவிற்கே விற்பனை செய்கிறோம். இதனால் எமக்கு ஏழாயிரம் கோடி ரூபா வருடாந்தம் நட்டம் ஏற்படுகின்றது.

யுத்தத்தை நடத்திக்கொண்டு உபமானியங்களை வழங்கும் நாடு சிறீலங்கா மட்டும்தான். என்னை கொலை செய்வதாக புலிகள் தெரிவித்துள்ளனர். இதனால் எனது பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. முன்னர் போல என்னால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. சமீபத்தில் நான் தென்கொரியாவுக்கு சென்றிருந்த போது நான்கு மணித்தியாலங்களே நித்திரை கொண்டேன். இதனால் எனக்கு தடிமல் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. நான் நாட்டுக்காக கஷ்டப்பட்டு உழைப்பதைப் போல் நீங்களும் அதிக நேரம் வேலை செய்ய வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உயிர்களை அர்ப்பணித்துப் போராடும் படையினருக்கு 3200 ரூபாவே சம்பளமாக வழங்கப்படுகிறது. நான் அவர்களுடைய சம்பளத்தை அதிகரித்திருக்கிறேன். நாட்டின் நலன்கருதி நான் செய்த இந்த முடிவை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்றும் கூறினார்.

# சிறீலங்காவிலுள்ள தமது பிரஜைகளுக்கு பாதுகாப்புத் தேவை-கொரியா கோருகிறது

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கான வேலையில் ஈடுபட்டிருந்த தென் கொரிய நிறுவனத்தை சேர்ந்தவர்களது தங்கும் விடுதி, சமீபத்தில் இனந் தெரியாதோரால் தாக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து கொழும்பிலுள்ள தென்கொரியத் தூதுவர் சிறீலங்காவிலுள்ள தமது பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சிறீலங்கா அரசை கோரியுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்த தென் கொரியர்களின் வசிப்பிடம் கடந்த 14.08.96 புதன்கிழமை இனந்தெரியாதோரால் குண்டு வீசித் தாக்கப்பட்டது. இத்தாக்குதலினால் அந்தக்கட்டடம் பலத்த சேதத்திற்கு உள்ளானதுடன் அங்கு தங்கியிருந்த கொரியர்களும் காயமடைந்தனர். பின்பு அங்கிருந்த கொரியர்கள் அனைவரும் கொழும்புக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

இச் சம்பவத்தையடுத்து கொழும்பிலுள்ள தென்கொரியத் தூதரகம் தனது பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறும், அவர்களுக்கு சிறீலங்கா அரசு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படை தாக்குதல்

இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் ஒரு மீனவர் படுகாயமடைந்துள்ளார். ஏனையோர் கடலில் குதித்ததினால் உயிர் தப்பியுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த தெவ்னரசு என்பவர் ஆர் எம் எஸ் 657 என்ற அவரது விசைப் படகில் காளிமுத்து, கந்தவேல், மோகன், சுரேஸ், ராஜேந்திரன் ஆகியோருடன் 14.08.96 புதன் கிழமை இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றார்.

கச்சதீவுக் கடல் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த சிறீலங்காக் கடற்படையினர் அவர்களது படகை நோக்கி கண்மூடித் தனமாகச் சுட்டனர். இதில் காளிமுத்து என்பவரின் மார்பு, தோள்பட்டை, இரண்டு கால்களின் தொடைப்பகுதி உட்பட பல இடங்களில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்துள்ளன. இவருடன் வந்த ஏனையோர் உடனே கடலில் குதித்தாராயினும் சிறீலங்கா கடற்படையினர் உடனேயே திரும்பிச் சென்றதையடுத்து அவர்கள் படகில் ஏறி வேகமாக வந்து காளிமுத்துவை ராமேஸ்வரம் வைத்தியசாலையில் அனுமதித்தனர். மார்பில் துப்பாக்கி ரவை இருந்ததால் அவர் இராமநாதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவருக்கு அங்கு விசேட சிகிச்சையளிக்கப்படுகின்ற போதிலும் அவர் ஆபத்தான நிலையிலேயே உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த வாரத்தில் தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் தாக்கியுள்ள இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

# கொடிகாமத்தில் தாக்குதல்

கடந்த 12.08.96 திங்கட்கிழமை, தென்மராட்சியிலுள்ள கொடிகாமத்தில் சிறீலங்கா இராணுவத்தின் முன்னணிக் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப் பட்டதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதேசமயம் பரந்தனில் நிலை கொண்டுள்ள படையினர் மீது புலிகள் மோட்டார்த் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருவதாகவும் பதிலுக்கு தமது படைகள் திருப்பித் தாக்கிவருவதாகவும் இராணுவப் பேச்சாளர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.


மலிவு செல்வராஜா மலிவு
ஜுவெல்லர்ஸ் & கார்மென்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் 29.08.96 வியாழன் 30.08.96 வெள்ளி 31.08.96 சனி
ஆகிய 3 தினங்களில்

அனைத்து புடவைகளும் 30% இல் இருந்து 50% கழிவில்

1 பவுண் விலை 165 Sfr + கூலியும்
(இவ் மூன்று தினங்களில் ஓடர் கொடுக்கும் நகைகள் உட்பட)

ஒறிஜினல் வீடியோ கசெற்றுக்கள் 9 Sfr
ஒறிஜினல் ஓடியோ கசெற்றுக்கள் 2 Sfr
Compact Disc 9 Sfr இல் இருந்து



**Selvarajah** *Jewellers & Garments*
CHEMIN DES ROSIERS-3, 1004 LAUSANNE
TEL: 021 - 647 74 65 - 647 74 34 - 077 / 22 43 64 - 077 / 69 75 19

மலிவு மலிவு மலிவு மலிவு

# அண்மையில் சிறீலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற மோதல்களில் வீர மரணம் அடைந்த மாவீரர் சிலரின் விபரங்கள் வருமாறு:-

### தகவல் திகதி 17.08.96

2-ம் லெப்டினன்ட் கபிலன் (பாலச்சந்திரன் பிரசாத், அரியாலை, 20.07.96 முல்லைத்தீவில்)

கப்டன் அன்பானந்தன் (சபாரத்தினம் செல்வநீதன், வெற்றிலைக்கேணி புதிய முகவரி தாளையடி, 03.08.96 வலிகாம இராணுவக காவலரண் தாக்குதலில்)

கப்டன் அன்பரசன் (நாகராசா பாஸ்கரன் தெல லிப்பளை, 6.08.96 ஓமந்தை இராணுவத் தாக் குதலில்)

மன்மதன் (சுதிரவேலு நாகேஸ்வரன் அப்பன், 206 மூன்றாம் யூனிற் மல்லாவி, 15.08.96 பரந்தன் இராணுவத்துடன்)

கிருபா (வசந்தராசன் பரணிதாசன், அம்பாறை, 14.08.96 ஏற்கனவே போரில் ஏற்பட்ட காயத்தால்)

வனிதா / தாரணி (ரட்ணசிங்கம் மோகனரஞ்சனி 390, 4 ஆம் யூனிற் திருநகர்)

சஞ்சுதா (சின்னராசா சிவாஜினி கந்தர் மடம் யாழ்ப்பாணம், 15.08.96 இராணுவத்துடன் ஏற் பட்ட மோதலில்)

செஜந்தா (ராசநாயகம் சுரதாதேவி, (சாரதா) யாழ்ப்பாணம், 14.08.96 இறந்தார் இவர் போராளி அல்ல)

### தகவல் திகதி 13.08.96

#### பரந்தன் தாக்குதலில் வீரமரணம் அடைந்தவர்கள்.

ரவிகுமார் (மாணிக்கம் தங்கவேல், பாம்புகாமம் கோவில், பரந்தன், 11.08.96 மோதலில்)

காப்டன் சோபனா (சரோஜினி கந்தையா, வதிரன் வடக்கு, புதிய முகவரி கனவடிக்குளம்)

2-ம் லெப்டினன்ட் கலா (பிரேமலதா ராஜாநாயம முத்து, புத்தூர்)

வானதி (அகிலா வாரித்தம்பி வரணி மத்தி)

நிலா (விஜயந்தி விஜயரட்ணம் விஜயபாரதி யாழ்ப் பாணம்)

வைகை (செல்லத்துரை யோகேஸ்வரி, 4-ம் வாய்க் கால் மருதநகர்,கிளிநொச்சி 2-ம் திகதி பரந்தனில் நடைபெற்ற மோதலில்)

உமயவன் (நடராசா கிருஸ்ணமூர்த்தி, பதுளை புதியமுகவரி, பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி, கட்டுடையில் 16.07.96 நடந்த மோதலில்)

வெண்ணிலவன் (சிவலிங்கம் ரவி, மட்டக்களப்பு, புதிய முகவரி வரணி, கட்டுடையில் 16.07.96 நடந்த மோதலில்)

மேஜர் கண்ணகி (சுபகௌரி சிவசுப்பிரமணியம் வேலணை, புதிய முகவரி கோண்டாவில் யாழ்ப்பாணம், 18.07.96 முல்லைத்தாக்குதலில்)

லெப் அஜிதா (பகிரதி குமாரவேலு சுதா, திருநகர் மல்லாவி துணுக்காய் 18.07.96 முல்லைத் தாக் குதலில்)

2-ம் லெப் கீர்த்தனா (மஞ்சுளாராஜகோபால், மன் னார், புதிய முகவரி விடுவமடு 18.07.96 முல் லைத் தாக்குதலில்)

### தகவல் திகதி 15.08.96

மேஜர் நிமலன் (ராசதுரை விமலகுமார், யாழ்ப்பா ணம், அராலியில் 27.07.96 மோதலில்)

மயூரன் (குணரத்தினம் நிமாலினி, (நிமால்), விசுவ மடு, தொட்டியடி)

ரதிகலா (ராஜேஸ்வரன் சிவாரஜினி, (ரஞ்சு), யாழ்ப்பாணம் இருவரும் 13.08.96 ஏற்பட்ட மோதலில்)

லெப் கயல் கயல்விழியன் (ராசதுரை தாகராஸ், யாழ்ப்பாணம் 28.07.96 கிளாலிக் கடலில் ஏற் பட்ட மோதலில்)

# சிறிலங்கா பிரதி அமைச்சர் ஒருவர் அவரது கட்சியிலிருந்து நீக்கப்படுவார்

சிறிலங்கா அரசில் பொது நிர்வாக,பெருந்தோட்டத்துறை மற்றும் பாராளுமன்ற விவகா ரங்களுக்கான பிரதி அமைச்ச ராக இருக்கும் அத்தாவுட சௌ விரத்தினா அவரது கட்சியான சமசமாசக் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப் படலா மெனத் தெரியவருகிறது.

சம்பத்தில் சிறீலங்கா பாரா ளுமன்றத்தில் கொண்டு வரப் பட்ட அவசரகாலச் சட்ட நீடிப் புக்கான தீர்மானத்தை எதிர்ப பதற்கு முடிவு செய்திருந்தது. அர சாங்கத்தில அங்கம் வகித்துக் கொண்டு அவ்வாறு அதை எதிர்க்கத் தான் தயாரில்லை என சௌவிரத்தினா கூறிய தால், அவர் கட்சியின் அரசியல் குழுவிலிருந்து நீக்கப்பட்டார்.

அதன் பின் அவர் கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக பாரா ளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். அவரது இந்த நடவடிக்கை சமசமாசக் கட்சியில் பெரும் பிரச்ச னையை ஏற்படுத்தியுள்ளது. இம்மாத இறுதியில் கட்சியின் மத்திய குழு கூடும் போது அவர் கட்சியிலிருந்து இடைநீக் கம் செய்யப்படலாம் என்று கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன.

ஸ்பெஷல் குரு பீடா
பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!
உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்
தொடர்புகளுக்கு: அம்பாள் வீடியோ -
26, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle
Tel: 42 09 33 81
(ADV)

# புகலிடத் திரைப்படங்களை கொஞ்ச நாட்களாகக் காணவில்லையே?

சி.டி.ராஜா, பிராங்பேட், ஜேர்மனி.

♦ தமிழ் நாட்டில் வெளியாகும் தரம் கெட்ட பார்பன வார இதழ்களை வெளிநாட்டில் வாழும் ஈழத் தமி ழர்கள் வாங்குவதை எப்போது நிறுத்துவார்கள்?

சிரு: தரமான பல் துறை சார்ந்த இதழ் களை நாம் வாசிக்கப் பழகும் வரை தொடரும்.

சா: பிறப்பினால் மனிதனை மனிதன் இழிவு செய்யும் பார்ப்பனியத்தின் கொடுமையை அறிவு பூர்வமாக உணர்ந்து அதற்கெதிராக போரா டப்புறப்படும் போது...

சோ.திரு – 3714 புறுரிக்கன், சுவிஸ்

♦ புலம் பெயர்ந்து வாழும் தமிழ் பெண்கள் சிலர் தங்களுடைய வீட்டு வேலையை கணவன்மா ரைக் கொண்டு செய்விக்கின்றார் களே இவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

சிரு: வீட்டு வேலைகளைப் பெண்கள் மட்டும் தான் செய்ய வேண்டும் என்று எந்தச் சட்டத்தில் உள் ளது? பரஸ்பரம் புரிந்துணர்வு தானே குடும்ப வாழ்க்கை.

சா: கணவன்மார் வீட்டு வேலையை செய்வது கேவலமா என்ன? குடும்பத்திற்காக 12 மணி நேரம் 14 மணி நேரம் வெளி வேலை செய்யும் கணவனை வீட்டிலும் வேலை செய்யச் சொன்னால் அது அநியாயம். வேலை எதுவும் செய்யாமல் சமூக சேவைப் பணத்தில் உடல் வளர்க்கும் கண வன்மார் வீட்டு வேலை செய் யும்படி மனைவிமார் கேட்பது ஒன்றும் தவறில்லையே.

செ.மகேந்திரன் – பாரிஸ் 11

♦ கவிஞர் கண்ணதாசனை பற்றி என்ன சொல்கிறீர்?

சிரு: குழப்பமில்லாத கவிதைகள் குழப்பமான மனிதர்.

சா: தன்னுடைய பிள்ளைகளுக்கு கண்ணதாசனின் பிள்ளைகள் என்று சொல்லுமளவுக்கு புக ழைத் தேடி வைத்து விட்டு போன அளவுக்கு கடனையும் சேர்த்து வைத்து விட்டுப் போன பிரபல மான மனிதர்.

ம.சுஜந்தா –பார்சல், சுவிஸ்

♦ வெளி நாடுகளில் வாழும் தமிழ் குழந்தைகளின் எதிர்காலம் ஒளி மயமாக இருக்குமென்று எண்ணு கிறீரா?

சிரு: எனக்குத் தெரிந்த வரை ஒவ் வொரு வீட்டிலும் குறைந்தது நாளுக்கு ஒன்று என்ற வீதத்தி லாவது தமிழ் படம் பார்கின்றார் கள். எந்தக் குழந்தையைப் பார் தாலும் முத்து, பாட்ஷா, பாண்டி யன் என்கிறார்கள். ஆக எதிர் காலம் ஒளிமயமாக இருக்கி றதோ இல்லையோ நிகழ்காலம் ரஜனிகாந் மயமாக இருக்கிறது என்பது உண்மை.

சா: நிச்சயமாக I am a disco danser என்று பெருமையாக சொல்லும ளவுக்கு டிஸ்கோ கிளப்புகளின் ஒளிவட்டம் அவர்களை சுற்றியி ருக்கும் வண்ணம் ஒளிமயமாக இருக்கும்.

ச.மனோகரன் – பாரிஸ் 18, பிரான்ஸ்

♦ புகலிடத் திரைப்படங்களை கொஞ்ச நாட்களாகக் காணவில்லையே?

சிரு: கலைச் சேவை செய்ய நிறையப் படங்கள் தயாராக்கிக் கொண்டி ருப்பதாக காற்றுவாக்கில் ஒரு சேதி... ஆகவே.. அஞ்சற்க...!!!

சா: குளிர் காலம் ஆரம்பிக்கும்போது புற்றீசல்கள்போல் புறப்பட்டு வரும்.

குமணன் – கிழக்கு லண்டன்

♦ சிறீலங்காவின் ஜனாதிபதி சந்தி ரிகா இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

சிரு: அதே ஜனாதிபதி பதவியைக் காப் பாற்றிக்கொள்ள, போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமா தானம், போர் என்றால் சமாதா னம், சமாதானம் என்றால் போர் இப்பிடித்தான் குழம்பிப் போய் உள்ளார்.

சா: நாடுநாடாகச் சென்று மடிப்பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

## சித்திரகுப்தனார் சாணக்கியன் பதில்கள்

வை.ஞானசேகரம் – பிரான்ஸ்

♦ எனக்கு வயது 55 ஆகிவிட்டது. நிறையப் பேருக்கு அன்பளிப்பு கள் கொடுத்து விட்டேன். எனக்கு பிள்ளைகளும் இல்லை. கொடுத் ததைப் பெற என்ன செய்யலாம்?

சிரு: காதுகுத்துத் தான் நடத்தலாம். உங்கள் வயதுக்கு அநேகமாக அதையும் முன்னரே குத்தியிருப் பார்கள். மணி விழாக் கொண் டாடவும் 5 ஆண்டுகள் காத்தி ருக்க வேண்டும். சுலபமான வழி பிறந்த நாள் கொண்டாடுவது அல்லது லண்டனுக்கு போகப் போவதாக சொல்லி எல்லோர்க் கும் அழைப்பிதழ் அனுப்பி ஒரு விருந்து வையுங்களேன். அழைப் பிதழைப் பார்த்தால் கடன்காரர் கள் புரிந்து கொள்வார்கள்.

சா: ஒரே ஒரு சுலபமான வழி இருக் கின்றது. கொஞ்சப் பிரமுகர்க ளைப் பிடியுங்கள். அவர்களிடம் உங்களுக்கு 60 வயதாகிவிட்ட தென்று பொய் சொல்லுங்கள். (அடையாள அட்டை பிறப்பு அத் தாட்சி பத்திரம் பார்க்கப் போகி றார்களா என்ன?) எனக்கு மணி விழா எடுங்கள். நான் செலவு செய்கிறேன் என்று சொல்லுங் கள். காரியம் எல்லாம் மின்னல் வேகத்தில் நடக்கும் உங்கள் கொடுப்பனவுகளையும் வசூ லிக்க வழி பிறக்கும்.

உங்கள் உள்ளம் நிறைந்த...
ஈழத்து இன்னிசைத் திலகங்கள்
மோகன்-ரங்கன் இணைந்த அப்சராஸ் குழுவினரின்
இன்னிசை வார்ப்புகள்
08.09.96 ஞாயிறு மாலை 6 மணிக்கு TRIANON கலையரங்கில்
80, Bld Rouchechouart, 75018 Paris. M°: Anvers
14.09.96 Fredericia, Denmark
15.09.96 Oslo, Norway
21.09.96 Essen, Germany
28.09.96 London
05-06.10.96 Swiss
12.10.96 Italy
விபரங்கள் அனைத்திற்கும்: Tel: (33-1) 39 93 30 96 / Fax: (33-1) 39 86 55 08